ஜனவரி 7, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00
ERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

# பேச்சு நடக்காது

# நடந்தாலும் தொடராது

# தொடர்ந்தாலும்

# பலன் தராது



# அபிவிருத்தி நிதி ஒதுக்குவதில் அரசாங்கம் பாகுபாடு!

## மட்டக்களப்பு படுவான் கரையைப் பிரித்து வைப்பது ஏன்?

மட்டக்களப்பில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்படும் பணத்தில் அரசாங்கம் இடத்துக்கு இடம் பாகுபாடு காட்டுகிறது என்று மக்கள் புகார் கூறுகிறார்கள்.

மட்டக்களப்பில் படுவான்கரை எப்பொழுதும் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. மற்றப்பகுதியிலிருந்து படுவான்கரையைப் பிரித்து வைப்பது ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் அடைமழை காரணமாகப் பெருவெள்ளம் ஏற்பட்டது. கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்ணூற்று நாலாயிரம் பேர் பாதிக்கப்பட்டனர் என்று மதிப்பீடு செய்யப்பட்டது.

கிறிஸ்மஸ் தினத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் பதினையாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

முதலாவது வெள்ளப்பாதிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் முழுமையாக வந்து சேர்வதற்கிடையில் இரண்டாவது வெள்ளம் ஏற்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுவிக்கப்படாத படுவான்கரைப் பகுதியில் வீதிகள் அனைத்தும் வெள்ளம் காரணமாக மக்கள் பிரயாணம் செய்யமுடியாத நிலையில் பழுதடைந்து இருக்கின்றன.

வாகனங்கள் செல்லமுடியாது. வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அனைத்து வீதிகளும் திருத்தம் செய்யவேண்டிய நிலையில் உள்ளன.

இது விடயமாக மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் தொடர்பு கொண்டு படுவான்கரைப்பகுதிப் பொது அமைப்புக்கள் கேட்டபோது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் எதுவித வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளையும் செய்யவேண்டாம் என இராணுவத்தளபதி கட்டளையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால் படுவான்கரைப் பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பிரித்து வைக்கப்பட்டு விட்டதா?

மட்டக்களப்பில் எந்த அபிவிருத்தியை எடுத்தாலும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள படுவான் கரைப்பகுதியில் எந்த வித அபிவிருத்தித் திட்டத்தையும் மேற்கொள்ளக் கூடாது என்று அரசு தடைவிதித்துள்ளது.

இதனால் தான் அமைச்சர்களின் நிதி ஒதுக்கீட்டிலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை மட்டுமே அபிவிருத்தி செய்யுங்கள் என்று சொல்லாமல் சொல்லியிருப்பதையே மட்டக்களப்பு மாவட்டப் பிரதி அமைச்சர்களுக்கு ஒதுக்கிய நிதித் தொகைகள் காட்டுகின்றன.

சாதாரண வீதியைத் திருத்தக்கூட அனுமதிக்காத இராணுவம் படுவான்கரைப் பகுதியில் வைத்தியசாலை, கல்விக்கூடம், விவசாயம், மீன்பிடி, போக்குவரத்து, குளப்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்குமா என மக்கள் கேட்கின்றனர்.

நிதி ஒதுக்கலில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இனவிவகார பிரதி அமைச்சருமான சோ.கணேசமூர்த்தி கூடச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற இரண்டு வெள்ளப் பெருக்குகளால் தொண்ணூறு சதவீதமான பாதிப்புக்கள் படுவான்கரைப்பகுதியிலேயே ஏற்பட்டுள்ளன.

போக்குவரத்துப்பாதைகள், விவசாய நிலங்கள், மீன்பிடிக்குளங்கள், பாடசாலைக் கட்டடங்கள் எனப்பலவும் வெள்ளம் காரணமாகப் பலத்த சேதம் அடைந்துள்ளன.

—நேரன்

# புலிகள் தாக்கும் போது மீனவர்கள் பழிவாங்கல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் போர் அவலங்களினால் அப்பாவி மீனவர்கள் பாதிப்படைவது தொடர்கதையாகி விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் படையினரை இலக்கு வைத்துத் தாக்கும் போது படையினர் பொதுமக்களைக் குறிப்பாக மீனவர்களைப் பழிவாங்குகிறார்கள்.

சமீபத்தில் சத்துருக்கொண்டான் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து சத்துருக்கொண்டான் வாவியில் மீன் பிடிக்கக் கூடாது என்று மீனவர்களுக்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

இதனால் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மட்டக்களப்புக்கு வடக்கே ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள சத்துருக்கொண்டானில் வாவிக்கு அருகில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

பொலிஸ் நிலையப் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு கடற்படைப் படகுகள் இரண்டும் அற்குரிய கடற்படை ஒட்டுநர்களும் இப்பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து அவசர தேவைகளின் நிமித்தம் வெளியே செல்லப்படையினர் இந்தப் படகுச் சேவையினைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு கூட்டுப் பாதுகாப்பு நிலையம் மீதே சமீபத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் ஒரு கடற்படை மாலுமி உயிரிழந்தார். மற்றும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

வாவிக்கு அப்பால் இருந்து விடுதலைப் புலிகள் ஏவிய எறிகணைகள் சுமார் 5இல் இருந்து 10 வரை முகாம் பகுதிக்குள் விழுந்து வெடித்துள்ளன. அதனைத் தொடர்ந்து படையினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெற்ற தினம் காலையில் மீனவர்கள் வழமைபோல் மீன் பிடித் தொழிலில் ஈடுபடச் சென்றபோது படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால் அன்றாடம் இதனையே நம்பிக் குடும்ப வாழ்க்கையை ஓட்டும் ஏழை மீனவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வழமையாக மீனவர்களின் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டே அவர்களை வாவியில் மீன்பிடிக்க அனுமதிப்பது வழக்கமாகும்.

இதேபோன்று இரு மாதங்களுக்கு முன்னதாக மட்டக்களப்பு பிள்ளையாரடியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிள்ளையாரடி மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இவ்வாறு பல நாட்களாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்திடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் விஷயத்தை மட்டக்களப்பு பாதுகாப்பு இணைப்பதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன் பின்னரே படையினர் மீனவர்களை மீன் பிடிக்கச் செல்வதற்கு அனுமதித்தனர்.

மட்டக்களப்புக்கு வடக்கே ஏறாவூர் வரையிலான பிரதேசம் வாவி சூழ்ந்த பிரதேசம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் கட்டுப்பாடற்ற பிரதேசத்தையும் இந்த வாவியே பிரித்து நிற்கிறது.

மட்டக்களப்புக்கு வடக்கே ஏறாவூர் வரையிலான வாவிப் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் பிள்ளையாரடியில் அதிரடிப்படை மற்றும் பொலிஸ் முகாமும், சத்துருக் கொண்டானில் பொலிஸ் கடற்படைமுகாமும், மைலம்பாவெளியில் இராணுவ முகாமும் உள்ளன.

எதிர்காலத்திலும் இம்முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுமானால் அதன் பின்னர் படையினர் மீனவர்கள் மீதே தமது கைவரிசையைக் காட்டத் தொடங்குவர் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

—சத்துருக்கன்

# கல்லூரி அதிபர் நியமனத்தில் பிரச்சினை

மட்டக்களப்பு பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் நியமனத்தில் எழுந்துள்ள பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இழுபட்டுக் கொண்டு இருக்கிறது. இது தொடர்பாகப் பெற்றோர் மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நேர்முகப் பரீட்சை நடத்தித்தான் புதிதாகஓர் அதிபரை நியமித்தது.

நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற ஒருவர் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் குறைந்த புள்ளி பெற்ற ஒருவருக்கு நியமனம் வழங்கப்பட்டதாகப் புகார் கூறப்படுகிறது.

இதில் அரசியல் செல்வாக்குப் புகுந்து விளையாடியிருப்பதாகவும் பேசப்படுகிறது.

இந்த விவகாரம் நீதிமன்றம் செல்கிறது.

# கவனிப்பாரற்று கிடக்கும் பாடசாலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள வால்கட்டு கிராமத்தில் அமைந்திருந்த பாடசாலை வெள்ளம் காரணமாக அழிந்துள்ளது.

தற்காலிக ஓலைக் கட்டடத்தில் கடந்த 1997 ஆம்ஆண்டு இப்பாடசாலைகல்வித்திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 300 மாணவர்கள் கல்விபயிலும் கனிஷ்ட பாடசாலையான வால்கட்டு அரசினர் தமிழ் பாடசாலைக்கு இதுவரை எவரும் செயல்வடிவில் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைத்துத் தரவில்லையென இப்பாடசாலை அதிபர் என்.ரவிந்திரன் சுடரொளிக்குத் தெரிவித்தார்.

ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைத்துத் தருவதாக அரசியல்வாதிகளும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் அறிக்கைகளை விட்டார்கள் அவ்வளவுதான். காரியம் நடக்கவில்லை.

ஓலைமட்டையும் நடப்பட்ட தடிகளும் இற்றுப்போய் விட்டன. இந்த 2001இல் இப்பாடசாலை மாணவர்கள் எங்கிருந்து கல்வி கற்பார்களோ! கடவுள்தான் துணையென அதிபர் மனவருத்தத்துடன் கூறினார்.

# அம்பாறையில் தரமுயரும் உபபிரதேச செயலகங்கள்

சாய்ந்தமருது- நாவிதன்வெளி உப பிரதேச செயலகங்கள் இம்மாதம் முதல் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப் படுமென நாடாளுமன்ற உறுப்பினர் றிஸ்வி சின்னலெவ்வை தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள உப பிரதேச செயலகங்களைப் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்துவது சம்பந்தமாகக் கடந்த அரசாங்கத்தில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு மறைந்த அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃபும் நாடாளுமன்ற உறுப்பினர் றிஸ்வி சின்னலெவ்வையும் இணைந்து கோரிக்கை விட்டிருந்தனர்.

இதற்கமைய சாய்ந்தமருது, நாவிதன்வெளி உபபிரதேச செயலகங்களைப் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்துவது சம்பந்தமாக ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு இவ்விரு உபபிரதேச செயலகங்களையும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தும்படி அரசுக்கு சிபாரிசு செய்திருந்தது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் றிஸ்வி சின்னலெவ்வை தற்போதைய பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் றிச்சட் பத்திரணவைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து இம் மாதம் முதல் இவ்விரு உபபிரதேச செயலகங்களையும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# தோப்பூரில் தொலைபேசி சேவைகள் விஸ்தரிப்பு

தோப்பூர் பிரதேசத்தில் தற்போது செயற்பட்டுவரும் தொலைபேசிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, மேலும் பல கிராமங்களுக்குத் தொலைபேசி வசதியை ஏற்படுத்துவதற்கு தபால், தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்தோடு பொதுமக்களுக்கு வசதியான இடங்களிலும் பாதுகாப்பான இடங்களிலும் "கோலிங் பூத்"கள் அமைக்கவும் அவர் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

அண்மையில் சமுர்த்தி முகாமையாளர் கே.எம்.எம்.றிஸ்வி, பிரதி அமைச்சர் நஜீப்.ஏ.மஜீத்தை அவரது அமைச்சில் சந்தித்து கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, தற்போது பாவனையிலுள்ள தொலைபேசிகளின் எண்ணிக்கை குறைவென்றும், மின்சாரமில்லையென்றால், இத்தொலைபேசிகள் மௌனமாகி விடுகின்றனவென்றும், இந்நிலையைப்போக்க உடனடியாக 'ஜெனரேட்டர்' பொருத்தப்படவேண்டுமென்றும் பிரதி அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பிரதி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொதுசன நூலகம்

# பேரர் நிறுத்தக் காலத்தில் படையினர் தீவிர தாக்குதல்

கடந்த "2000" ஆம் ஆண்டை விடுதலைப் புலிகள் யுத்த ஆண்டாகப் பிரகடனம் செய்து பெரும் போருடன் ஆரம்பித்தனர். அந்த ஆண்டு அவர்களுக்கு ஒரு வெற்றி ஆண்டு.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு படைத்தளத்தைக் கடந்த ஆண்டில் வெற்றி கொண்டனர். வடமராட்சி கிழக்கிலும் படகுமூலமான தரையிறக்கத்தின் மூலம் தமது தாக்குதலைக் குடா நாட்டிற்குள்ளும் விரிவுபடுத்தியிருந்தனர்.

அத்துடன் தென்மராட்சியின் சாவகச்சேரி பிரதான நகரம் உள்ளிட்ட யாழ் வாயிலான கொழும்புத்துறைவரையிலான பிரதான யாழ்–கண்டி A9 பாதையினையும் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

அதை அடுத்து ஓமந்தையில் இருந்து யாழ் நகரம் வரையிலான யாழ்–கண்டி பிரதான வழங்கல் பாதையில் கொடிகாமம், மீசாலை மற்றும் மிருசுவில் தவிர்ந்த ஏனைய பாகங்களைப் புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.

இதன் மூலம் குடாநாட்டில் தங்கியிருக்கும் படையினரை முழுமையானதொரு தற்காப்பு நிலையில் பல மாதங்களாக வைத்திருந்தனர்.

தற்காப்பு யுத்த நிலையில் இருந்து தம்மை விடுவிக்கப் படையினர் ரிவிகிரண I, II மற்றும் கினிஹிர I, இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

துருப்பினரால் சாவகச்சேரி நகரை மட்டுமே இதன் மூலம் கைப்பற்ற முடிந்தது. மற்றப்படி பிரதான யாழ்–கண்டி வழங்கல் பாதையில் ஒரு அங்குலத்தைத் தானும் அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

ரிவிகிரண I இராணுவ நடவடிக்கை கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி அரியாலை கொழும்புத்துறைப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்க ப்பட்டது.

இது படையினர் குடாநாட்டில் பல பகுதிகளை இழந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல். அது மட்டுமல்ல, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் அன்டன் விஜேந்திர பதவியேற்ற பின்னர் அவரது கட்டளையின் கீழ் நடைபெற்ற முதலாவது தாக்குதலும் ஆகும்.

இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக லெப். ஜெனரல் லயனல் பலகல்ல பதவியேற்ற பின்னர் நடாத்தப்பட்ட முதலாவது தாக்குதலும் இதுவாகும்.

ஆனால் இத்தாக்குதல் படையினருக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியது. எட்டு அதிகாரிகள் உட்பட 80 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட மேலும் 500 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து அடுத்த வாரத்தில் ரிவிகிரண II இராணுவ நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதில் படையினர் பெரிதாக எதனையும் கைப்பற்ற முடியவில்லை.

யாழ் நகருக்கு அண்மையில் தமது முயற்சிகள் கைகூடாத ஒரு நிலையில் புவியியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தென்மராட்சிப் பகுதியில் இருந்து புலிகளை விரட்ட இராணுவம் "ஒபரேஷன் கினிஹிர" என்ற பெயரில் பல்வேறு கட்டங்களாகத் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

"ஒபரேஷன் கினிஹிர I" இராணுவ நடவடிக்கை செப்டெம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் சாவகச்சேரி நகரத்தைப் படையினர் கைப்பற்றினர்.

"ஒபரேஷன் கினிஹிர II இராணுவ நடவடிக்கை செப்டெம்பர் 26 காலை ஆரம்பிக்கப்பட்டு மதியம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டபோது இராணுவம் மட்டுவில் வடக்கையும், சரசாலை மேற்கையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தது.

அதை அடுத்து புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் எனப் படைத் தரப்பு எண்ணிக் கொண்டிருந்தது. அதே தினத்தன்று மாலை 4 மணியளவில் புலிகள் தமது "ஓயாத அலைகள் 4" அழித்தொழிப்பு யுத்தத்தை கிளாலி–எழுதுமட்டுவாள்– நாகர் கோவில் இராணுவ – கடற்படை கூட்டு முகாம் மீது முழுமூச்சுடன் மேற் கொண்டனர்.

இத்தாக்குதலின் ஆரம்பத்தில் இக் கூட்டுமுகாமின் முன்னரங்கக் காவல் நிலைகளை அழித்து இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தினர். அதன் மூலம் படையினரை மீண்டும் "தற்காப்பு யுத்தம்" என்ற நிலைக்குத் தள்ளினர் புலிகள்.

இதன் பின்னர், கினிஹிர III இராணுவ நடவடிக்கை அக்டோபர் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. மட்டுவில் தெற்குப் பகுதி படையினரால் கைப்பற்றப்பட்டது. ஆனாலும் "ஓயாத அலைகள் 4" இன் இரண்டாவது கட்டத் தாக்குதல் மூலம் புலிகள் மட்டுவில் தெற்கு கனகம்புளியடிச் சந்தியை மீண்டும் கைப்பற்றினர்.

நவம்பர் 19 அன்று மேற்கொள்ளப்பட்ட கினிஹிர IV நடவடிக்கை மூலம் படையினர் மட்டுவில் தெற்கைக் கைப்பற்றினர். அத்துடன் டிசம்பர் 5 இல் மேற்கொண்ட கினிஹிர V இராணுவ நடவடிக்கை மூலம் நுணாவில் கிழக்கையும் சாவகச்சேரி மேற்கையும் கைப்பற்றப் படையினரால் முடிந்தது.




இனம் புரியாத காரணங்களிற்காக ஒபரேஷன் கினிஹிர VI மேற்கொள்ளப்படாத போதிலும் டிசம்பர் 22ஆம் திகதி படையினர் ஒபரேசன் கினிஹிர VII ஐ மேற்கொண்டனர்.

இதன் மூலம் கைதடிப் பாலம் உட்பட 34 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் படையினரால் கைப்பற்றப்பட்டது. இதுபற்றி கடந்த வாரம் விரிவாகப் பார்த்தோம்.

புலனாய்வுத் துறைத் தகவல்களின்படி, டிசம்பர் 22ஆம் திகதி நடைபெற்ற (படையினரின்) மும்முனைத் தாக்குதல்களின் போது கோப்பாய்க்கும் கைதடிக்கும் இடையில் படையினரின் சுற்றி வளைப்பிற்குள் சிக்கிய புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளின் அனுபவமிக்க உள்நாட்டு போர்த் தலைவர்களில் ஒருவரான நியூட்டனின் தலைமையிலான 23 உறுப்பினர்களே கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பலதாக்குதல்களில் நியூட்டன் பங்கேற்றவர் என்றும் யாழ் களமுனையில் நன்கு பரிச்சயமானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் தாங்கள் கூறியது போலவே கடந்த டிசம்பர் 24 நள்ளிரவு தொடக்கம் இக்கட்டுரை எழுதப்படும்வரை எவ்வித அழித்தொழிப்புத் தாக்குதல்களிலும் ஈடுபடவில்லை. முன்னேறமுயலும் படையினரைத் தடுக்க மிகவும் குறைந்தளவு எதிர்ப்பையே அவர்கள் காட்டி வருவதையும் அவதானிக்க முடிகிறது.

கடந்த வாரம் கள நிலைமைக் கண்ணோட்டத்தில் குறிப்பிடப்பட்டது போல் யாழ் நகரிற்கும் சாவகச்சேரிக்கும் இடையேயான பிரதான யாழ்–கண்டி A9 வழங்கற் பாதையைத் திறக்கும் நோக்குடன் கடந்த டிசம்பர் 30 அன்று அதிகாலை படையினர் கினிஹிர VIII இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டனர். இதன் மூலம் நாவற்குழிப் பாலம் படையினரால் கைப்பற்றப்பட்டது. அரியாலை, செம்மணி பகுதிகளில் இருந்து முன்னேறிய படையினர் மிகக் குறைந்தளவான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே இப் பாலத்தைக் கைப்பற்றினர்.

புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்திய பின்னர் அவர்களது பொறுமையைச் சோதிப்பது போன்று படையினரால் மேற் கொள்ளப்பட்ட இரண்டாவது பாரிய படை நடவடிக்கை இதுவாகும். இதன் பின்னர் கினிஹிர VIII இன் இரண்டாவது கட்ட நகர்வின் மூலம் டிசம்பர் 31 அன்று தனங்கிளப்பு, அரியாலைப் பகுதியில் இருந்து புலிகளை விரட்டியுள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னைய நடவடிக்கை மூலம் நாவற்குழிப் பாலத்தைப் படையினர் கைப்பற்றக் கடுமையாகச் சண்டையிட்ட போதும் வன்மையாக எதிர்த்து நின்று தடுத்து நிறுத்திய புலிகள் கினிஹிர VIII நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டாது விட்டமை படைத்தரப்பைச் சற்று ஆழமாக சிந்திக்க வைத்துள்ளது.

புலிகள் உண்மையாகவே பலவீனம் அடைந்து விட்டார்களா, அல்லது சர்வதேச சமூகங்களின் வேண்டுகோளின் பேரில் யுத்த நடவடிக்கைகளைத் தவிர்த்து வருகிறார்களா அல்லது படையினருக்கு எதிரான பாரிய தாக்குதல் ஒன்றிற்காகத் தங்களைத் தயார் செய்து கொள்வதில் ஈடுபட்டுள்ளார்களா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எது எப்படியிருப்பினும் புலிகளை ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்திப் படையினர் நாட்டில் புலிகளின் ஆதிக்கத்தை அவர்களின் சொந்த இடத்தில் கட்டுப்படுத்தி அவர்களைத் "தற்காப்பு யுத்த" நிலைக்குத் தள்ளியிருப்பது ஏதோ உண்மை தான்.

கடந்த வருடத்தை புலிகள் யுத்த ஆண்டாகப் பிரகடனம் செய்தது போல் புதிய வருடத்தை (2001) இராணுவம் யுத்த வெற்றி ஆண்டாகப் பிரகடனம் செய்திருப்பது போல் தெரிகிறது.

புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களிற்கும் படையினருக்கும் விடுத்திருக்கும் செய்தியில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, பயங்கரவாதிகளை அடக்கி ஒடுக்குவதற்கான ஆயுதபலம் படையினருக்குக் கிடைத்துக் கொண்டிருப்பதால் அவற்றைப் பயன்படுத்தி இராணுவத்தின் வெற்றிகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் யுத்தத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்றும் சூளுரைத்திருக்கிறார்.

ஆனாலும் புலிகள் தொடர்ந்து தமது பொறுமையைக் கடைப்பிடிப்பார்களா அல்லது அதிலிருந்து விலகித் தங்கள் ஓயாத அலைகளைக் கட்டவிழ்த்து விடுவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதே வேளை இலங்கைக் கடற்படையின் 14 ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஜனவரி 2ஆம் திகதி உத்தியோக பூர்வமாகக் கடற்படைத் தலைமையகத்தில் பதவியேற்றார்.

53 வயதான இவர் பதவி யேற்ற வைபவத்தின் பின் உரையாற்றும் போது அதிகரித்து வரும் சவால்களை எதிர் கொள்ளக் கடற்படை தயாராக இருப்பதாகவும் அண்மையில் இந்தியாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட உலங்கு வானூர்தி தாங்கி கப்பல் மற்றும் இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட யுத்தக் கப்பல்கள் மூலம் கடற்படை புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளதாகவும் கூறினார்.

அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு உறுதுணையாக முப்படையினரும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த சகல ஆதரவையும் வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# சுடர் ஒளி

7 ஜனவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834


## புது வருடம் எப்படி? இது ஜோதிடமல்ல

இந்த வருடம் எப்படி இருக்கப் போகிறது?

அதை அறிந்துகொள்வதற்குப் பெயர் பெற்ற சோதிடர் எவரையும் தேடிப்போகத் தேவையில்லை.

வடக்கு கிழக்கில் சண்டையை நடத்துவதற்கு நேரடிப் பொறுப்பாக உள்ள பெரியவர்கள் இருவர் அதைச் சொல்லி விட்டார்கள்.

ஒருவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல. மற்றவர் மின் சக்தி அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.

''பயங்கரவாதத்துக்குத் தலையடி கொடுத்து அதை முறியடித்து சமாதானத்துக்கு வழி திறந்து விடுங்கள்'' இராணுவத் தளபதி படையினருக்கு விடுத்துள்ள தமது புத்தாண்டுச் செய்தி இது.

''போருக்குத் தேவையான நவீன ஆயுதங்களை அரசாங்கம் எங்களுக்குத் தந்திருக்கிறது. சக்திவாய்ந்த ஆயுதங்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

பயங்கரவாதத்தை இல்லாது ஒழிக்க வேண்டும். போரில் வெல்ல வேண்டும். இதுதான் எங்கள் இலட்சியம்'' இப்படி இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

ஆக, வடக்கு கிழக்கு யுத்தம் தொடரப் போகிறது. ஒரு முடிவு காணும்வரை உக்கிரமாக நடக்கப்போகிறது என்பது தெளிவாகிவிட்டது.

போர்நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பன எல்லாம் வெறும் கற்பனைகளாகவும் கனவுகளாகவுமே இருக்கப்போகின்றன.

அடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தனது பாணியில் கூறியிருக்கும் புதுவருடப் பலன் என்ன?

''தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தவும் அவர்கள் தமது பிடியில் வைத்திருக்கும் பகுதிகளைக் கைப்பற்றவும் அரசாங்கப் படையினர் வெற்றிகரமான பல தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

''இந்த யுத்தம் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அல்ல. வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பாலான மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத்தான்.

அரசாங்கத்தைச் சண்டையில் ஈடுபட வைத்தவர்களே தமிழீழ விடுதலைப்புலிகள்தான். நேர்மையான பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் புலிகள் இணங்கி வந்தால்தான் அவர்கள் மீது நடத்தும் தாக்குதல்களைக் குறைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்''

இப்படிப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அறிவித்திருக்கிறார்.

ஆக, யுத்தம் தொடரும் என்பதையே அவரும் தெரிவித்திருக்கிறார்.

யுத்தம் தொடரும் என்ற அபாய அறிவிப்பு ஒருபுறமிருக்க வடக்கு கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கே யுத்தம் என்றும் -

தமிழீழ விடுதலைப்புலிகளே அரசாங்கத்தை யுத்தம் செய்ய வைத்தார்கள் என்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பது பலருக்கும் விநோதமாகப்படுகிறது.

யுத்தத்தின் பெயரால் வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கப் படைகள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

சாணுக்கும் முழத்துக்கும் சோதனை நிலையங்கள், அடிக்கடி சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கைதுகள், சித்திரவதைகள், ஆட்கள் காணாமல் போதல், காணாமல்போனவர்கள் புதைகுழிகளிலிருந்து சடலங்களாக மீட்கப்படுதல், பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் என்று இப்படிப் பல அட்டூழியங்கள் நடக்கின்றன.

இதுதான் மக்களின் உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கும் இலட்சணமா? இப்படியான 'பாதுகாப்பு' தேவையா?

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே வேறு வழியின்றித் தாம் ஆயுதம் ஏந்திப் போர் செய்வதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்கள் 1956 முதல் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் மேற்கொண்ட பேச்சுவார்த்தை அடங்கலான சாத்வீக அணுகுமுறைகள் எல்லாம் அன்றைய அரசாங்கங்களின் அடக்கு முறைகளால் ஒடுக்கி அமுக்கப்பட்டன. இரண்டு அரசியல் உடன்படிக்கைகள்கூடக் கிழித்து எறியப்பட்டன.

இவ்வளவுக்கும் பிறகுதானே இளம் தமிழர் தலைமுறை தவிர்க்கமுடியாத நிலையில் ஆயுதம் ஏந்திக் களம் புகுந்தது என்று புலிகள் கூறுகிறார்கள்.

அவர்களின் நடவடிக்கைகளைப் பயங்கரவாதம் என்று சுட்டிக்காட்டுகிறது அரசு. அதை ஒழிக்கவே போர் என்கிறார் இராணுவத் தளபதி.

குண்டு வீச்சு, ஷெல் அடி மற்றும் முறைகேடான செயல்கள் போன்ற அரச படைகளின் பயங்கரவாதத்துக்கு விளைநிலமாக விளங்குகிறது போர்.

அந்தப் போர் தொடரும் என்ற அறிவிப்பே இராணுவத்தளபதி மற்றும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஆகிய இருவரிடமிருந்தும் இப்போது வேறு வார்த்தைகளில் வந்திருக்கிறது. அடக்கடவுளே!

---

### பேச்சு நடக்காது; நடந்தாலும் தொடராது; தொடர்ந்தாலும் பலன் தராது!

# புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலாவுடன் ஒரு சம்பாஷணை

**காண்டீபம்**

சமாதானப் பேச்சு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நத்தாருக்கு முதல்நாளிலிருந்து (24.12.2000) இம்மாதம் 24ஆந் திகதி வரை ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் அறிவித்து அதைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

அரசும் அப்படிச் செய்ய வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பை புலிகள் வெளியிட்டார்கள்.

ஆயினும் அரசு, புலிகளின் யுத்த நிறுத்தத்தைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் இப்போது பலவீனம் அடைந்திருக்கிறார்கள். தங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு அவகாசம் தேவைப்படுகிறது. அதனாலேயே அவர்கள் விழுந்தடித்து அவசரமாக (அனுசரணையாளரான நோர்வேக்குக் கூடத் தெரிவிக்காமல்) ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

அரசும் அதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவர்களின் ஏமாற்றுக்கு அரசு ஒரு போதும் இடம் கொடுக்காது. புலிகளைத் தாக்கித் துரத்தி அடிப்போம் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் புலிகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தாக்குதல்கள் நடத்திப் புலிகள் வசமுள்ள பல பிரதேசங்களைத் தாம் கைப்பற்றி விட்டதாகவும் அரசு கூறுகிறது.

இந்த நிலையில் அரசுக்கும், புலிகளுக் குமிடையில் பேச்சுவார்த்தை நடக்குமா?

யுத்தம் ஓயுமா? சமாதானம் ஏற்படுமா? இவை எல்லாம் கேள்விக்குறிகள்.

விடைகாண விழைந்தோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் கொள்கைகளில் மேற்படி இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கத்திற்கு நேரடித் தொடர்பு உண்டு. அவர் தனது பாரியார் சகிதம் இப்போது லண்டனில் வசித்து வருகிறார்.

அன்டன் பாலசிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உண்மையான நிலைமையை அறிந்து அதை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளச் 'சுடர்ஒளி' முயற்சி செய்தது. முயற்சி பலன் அளித்தது.

'சுடர்ஒளி'க்கும் அன்டன் பாலசிங்கத்திற்குமிடையே தொலைபேசிச் சம்பாஷணை நீண்ட நேரம் நடந்தது.

அன்டன் பாலசிங்கம் கூறிய கருத்துக்களிலிருந்து அறிய வருவதுஇதுதான்:-

அதாவது அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை இப்போதைக்கு நடக்காது.

ஒரு வேளை பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும்கூட அது தொடர்ந்து நடக்காது. கூடிக்கலைவதாகவே இருக்கும்.

தப்பித் தவறிப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்தாலும் அதனால் குறிப்பிடத்தக்க பயன் எதுவும் கிடைக்காது.

பேச்சுவார்த்தைகளை நடைபெறச் செய்வதற்கு அனுசரணை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள நோர்வே நாட்டுத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைவர இருக்கிறார். அவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசப்போகிறார். புலிகளைப் போல அரசாங்கத்தையும் யுத்த நிறுத்தம் செய்ய வைத்து எப்படியும் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு அவர் வழிசெய்து விடுவார். அப்படியிருக்க பேச்சுவார்த்தை நடக்காது என்று எப்படித் திடமாகச் சொல்ல முடியும்?

பலரும் கேட்கக் கூடிய இந்தக் கேள்வி நியாயமானது.

சொல்ஹெய்மின் வற்புறுத்தலின் பேரில் அரசு போரை நிறுத்திப் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதித்தாலும் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்துக் கொள்ள வேண்டுமே!

என்ன சொல்கிறீர்கள் என்று டெலிபோன் சம்பாஷணையின் போது அன்டன் பாலசிங்கத்திடம் கேட்க அவர் லண்டனில் மாவீரர் தினக் கூட்டத்தின் போது தாம் பேசியதை நினைவுபடுத்தினார்.

அந்தக் கூட்டத்தில் அன்டன் பாலசிங்கம் பின்வருமாறு கூறியிருந்தார்:-

''இலங்கை அரசு தனது பயங்கரவாதப் பட்டியலில் இருந்து எம்மை அகற்றினால் மட்டுந்தான் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும். நாம் அதனை வற்புறுத்திக் கொண்டே வருகிறோம்.

எம்மைப் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து எடுத்தால் மட்டுமே பேசுவோம் என்று வற்புறுத்தவும் தயங்கமாட்டோம்.

இந்த நிலையில் இலங்கை அரசு விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று முத்திரை குத்திவிடுமாறு ஏன் பிரித்தானிய அரசை வற்புறுத்துகிறது?

எம்மீது கைவைத்தால் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோம் என்று பிரித்தானிய அரசிடம் சொல்லியுள்ளோம்.

ஐரோப்பிய நாட்டுச் சமாதான முயற்சிக்கு அல்ல எல்லாச் சமாதான முயற்சிகளுக்கும் கதவுகளை மூடிவிடுவோம். அதற்குப் பின் நாம் பயங்கரவாதிகளாகவே மாறிவிடுவோம்!'' - இப்படி அன்டன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

ஆம் அரசாங்கத்தோடு சம நிலையில் இருந்து பேசத்தான் புலிகள் விரும்புகிறார்கள். தாம் தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகள் என்ற தாழ்வு நிலையிலிருந்து அரசுடன் பேசப் புலிகள் விரும்பவில்லை.

அதுமட்டுமல்ல பேசுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் வேண்டும்.

அதற்கு மாவீரர் தின (27.11.2000) உரையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறிய சில கருத்துக்களை அன்டன் பாலசிங்கம் நினைவுபடுத்தினார்.

பிரபாகரன் கூறிய கருத்துக்கள் வருமாறு:-

''20 ஆண்டுகளுக்கு மேலாகப் பரஸ்பர பகையுடனும் சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினரும் சண்டையைத் தொடர்ந்தபடி நீடித்த சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைக்குச் சாத்தியமானது அல்ல.

இதனால் போர் நெருக்கடியைப் படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில் நல்லெண்ணப் புறச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம்.

இயல்பு நிலை என்னும் போது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்புக்குத் திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம்!''

பிரபாகரனின் இந்தக் கருத்தின் சாரம் போர் நிறுத்தப்பட வேண்டும். பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இதன்படி பிரபாகரன் எதிர்பார்க்கும் சூழ்நிலை இன்னும் வரவில்லை.

இப்போதைக்கு வரும் என்ற நம்பிக்கையும் இல்லை. அரசு அந்த விஷயத்தில் அவ்வளவு பிடிவாதமாக இருக்கிறது.

அதே போல அன்டன் பாலசிங்கம் விருப்பம் தெரிவித்த மாதிரி புலிகள் இயக்கத் தடையை பேச்சு வார்த்தை நடப்பதற்காகத் தற்காலிகமாகவேனும் நீக்கும் நிலையிலும் அரசு இன்று இல்லை.

ஆயின் எப்படிப் பேச்சுவார்த்தை நடக்கும்?

நோர்வே தூதுவர் இரு தரப்பினரதும் நன்மதிப்புக்குப் பாத்திரமானவர். அவர் கெஞ்சிக் கூத்தாடி நிலைமையில் .. முன்னேற்றத்தை ஏற்படுத்தினால் சில வேளைகளில் இரு தரப்பும் பேச்சு வார்த்தை மேசைக்குச் செல்ல வேண்டா வெறுப்பாகச் சம்மதிக்கலாம்.

அப்படிச் செய்பவர்கள் ஆரம்ப கட்டத்திலேயே கருத்துக்களால் முட்டி மோதிக்கொள்ள நேரும். ஆயின் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடப்பது எப்படி?

பேச்சுவார்த்தைக்குப் போகிறோம் என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக் கொள்ளவும் உலகின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்ளவும் இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று விட்டுச் சாக்குப் போக்குச் சொல்லி வெளியேறலாம் அல்லவா?

அனுசரணையாளர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில்லை. இருதரப்பினரும் கூடிக் கலைந்த பின்னர்தான் அவருக்கு விஷயம் தெரியவரும்.

அந்தக் கட்டத்தில் அனுசரணையாளர் இரு தரப்புக்கும் ஒட்டுப்போட்டு பேச்சு வார்த்தைக்கு அவர்களை மீண்டும் அனுப்பி வைப்பதில் வெற்றி பெற்றாலும் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்து வெற்றி அளிக்குமா என்பது கேள்வி.

வடக்குகிழக்கு இணைப்பு, காணி உரிமை, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பு (ஒற்றையாட்சிக்கு மாறானது) இவற்றை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கப் புலிகள் தயாராக இல்லை.

அதே வேளை அரசாங்கமும் வடக்கு கிழக்கு இணைப்பு இருக்கக்கூடாது என்றும்-

காணி உரிமை மத்திய அரசின் மேலாதிக்கத்தில் இருக்க வேண்டும் என்றும்-

இந்தக் குட்டி நாட்டில் எந்த இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்படக்கூடாது என்றும்-

எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையில் ஒற்றை ஆட்சியே இருக்க வேண்டும் என்றும் விடாப்பிடியாக நிற்கிறது.

இந்த நிலைப்பாடுகளில் இடை நிலைக்கோ இணக்கப்பாட்டுக்கோ எங்கே இடமிருக்கிறது? யார் எதைச் சொல்லி என்ன பயன்?

ஆக, பேச்சுவார்த்தை நடக்காது. நடந்தாலும் தொடராது. தொடர்ந்தாலும்பலன் தராது. என்று சொல்வது சரியா? இப்படிக் கேட்டபோது அன்டன் பாலசிங்கம் சிரித்தார்.

''என்ன சிரிக்கிறீர்கள்? பதில் என்ன?'' என்று கேட்டபோது அவர் மீண்டும் பலமாகச் சிரித்தார். பின்னர் மௌனம் ஆனார். பதில் ஏதும் சொல்லவில்லை.

''சொன்னது சரிதான் என்பது தானே நீங்கள் சிரித்துவிட்டு மறுக்காமல் மௌனம் சாதிப்பதன் அர்த்தம்?'' என்று கேட்டபோது-

அன்டன் பாலசிங்கம் அதை ஒப்புக்கொண்டாற் போல் மீண்டும் சிரித்தார்.

---

## யாழ் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையாளர் தாக்கப்பட்டார்!

''உதயன்'' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் தாக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ''உதயன்'' செய்தியாளரை விஞ்ஞானபீட மாணவர்களில் ஒரு பகுதியினர் சூழ்ந்து கொண்டு தாக்கினர்.

பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பகுதியில் நடந்த வியாழக்கிழமை (04.01.2001) முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது செய்தியாளரின் சைக்கிள் பறிக்கப்பட்டு கீழே விழுத்தப்பட்டது.

செய்தியாளரைச் சூழ்ந்து கொண்ட மாணவர்களில் சிலர் அவரைப் பிடித்தவாறு ''ஆளைக்கட்டி வையுங்கோடா'' ''அடித்துக் கொல்லுங்கோடா'' என்று கத்தினார்கள்.

நிலைமை மோசமடையலாம் என்றுகருதிய மாணவர்கள் இருவர் செய்தியாளரைக் கூட்டிச்சென்று பின் கதவால் செல்ல வழி செய்தனர்.

அவர் நடந்து வந்துகொண்டிருந்த போது இன்னொரு மாணவர் காற்றில்லாத நிலையில் இருந்த சைக்கிளைக் கொடுத்தார்.

''ராக்கிங்'' கில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஞ்ஞானபீட மாணவர்கள் நால்வர் இடை நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து அந்தப் பீட மாணவர்கள் கடந்த ஒருவார காலமாக வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகிறார்கள். பகிஷ்கரிப்புக் குறித்த செய்திகளை 'உதயன்' பிரசுரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுசன நூலகம்

# படையினரது வெற்றியில் புலிகளின் போர்த் தந்திரம்!

## பிடித்த பகுதிகளைத் தக்க வைத்துக்கொள்வதே பிரச்சினை

நாவற்குழிப்பாலம், அரியாலை, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து அரச படையினர் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். இதைப் புதுவருட பெருவிருந்தாகக் கருதி அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றனர்.

அரச படைகளின் கினிகிர 8 நடவடிக்கை முழு வெற்றி அளித்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையிலான பிரதான கண்டி வீதி (ஏ9) படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

பாலம் சேதமடைந்து உடனடியாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. திருத்த வேலைகளை மேற்கொண்டு முடிக்கச் சிறிது காலம் பிடிக்கும்.

தற்போது புலிகளிடமிருந்து படையினர் 30 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

எனினும் சாவகச்சேரிக்கு அப்பால் உள்ள பகுதியில் புலிகள் தன்னாதிக்கம் செலுத்துகின்றனர்.

ஆனையிறவு இன்னமும் புலிகளின் வசமே இருக்கிறது. கிளிநொச்சியும் அவர்களின் பிடியில் தான்.

அதனால் எவ்வளவு நிலப்பரப்பைக் கைப்பற்றியும் யாழ் குடா நாட்டுக்கும் வவுனியாவுக்கும் இடையிலான போக்குவரத்து மற்றும் விநியோகப்பாதை மூடப்பட்டே இருக்கிறது.

பூநகரியிலும் புலிகளின் ஆதிக்கம் தான். எனவே படையினர் யாழ் குடாநாட்டில் கூடுதலான பிரதேசங்களைக் கைப்பற்றியுள்ள போதிலும் குடா நாட்டிலுள்ள படையினருக்கு வேண்டிய பொருட்களையும் போராயுதங்களையும் கொண்டு வருவது தொடர்ந்து கஷ்டமாகவே இருக்கும்.

நாவற்குழிப்பாலம், அரியாலை, கிளாலி ஆகியவற்றைப் புலிகளின் எதிர்ப்பின்றியே கைப்பற்றியதாக இராணுவத்தினர் கூறுகின்றனர்.

படை நகரத் தொடங்கியதும் புலிகள் தங்கள் நிலைகளை விட்டுப் பின் வாங்கிவிட்டனர் என்று இராணுவத்தரப்புக் கூறுகின்றது.

புலிகள் பங்கர்களில் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள் சிலவற்றைக் கைப்பற்றியதாகவும் இராணுவம் தெரிவித்திருக்கிறது.

புலிகள் எங்கே போனார்கள்? ஏன் போனார்கள் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. புலிகள் இராணுவத்தைக் கண்டு பயந்து பதுங்கி ஓடினரா?

புலி பதுங்குவது பாய்ச்சலுக்குத்தான் என்று மக்கள் மத்தியில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

புலிகள் தாம் பலவீனமடைந்த நிலையில் இருப்பதாகப் படையினரை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

புலிகள் பலவீனமுற்று பயந்து நடுங்கிக் கொண்டு இருக்கிறார்களே என்று படையினர் மேலும் தப்புக் கணக்குப் போட்டால் அவர்கள் மேலும் தாக்குதல் நடத்தப் புறப்படுவார்கள். பல பிரதேசங்களைப் பிடிக்க புலிகள் எதிர்ப்பின்றி விட்டுக் கொடுப்பார்கள்.

பிடித்த பகுதி முழுவதையும் தக்கவைத்துக்கொள்வதற்குப் பெரும் எண்ணிக்கையிலான படையினர் தேவை.

அப்போது பலாலி, காங்கேசன்துறைப்பகுதிகளைக் காவல் செய்வதற்குப் போதுமான காவல் படையினர் இருக்க மாட்டார்கள். அந்த நிலைமையைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.


புலிகளுக்கு எப்பொழுதுமே பலாலியிலும் காங்கேசன் துறையிலும் ஒரு கண்.

குடாநாட்டு எல்லையில் உள்ள ஆனையிறவு முகாமைக் கைப்பற்றியது போலக் குடாநாட்டில் உள்ள பலாலி முகாமையும் கைப்பற்ற வேண்டும் என்பது புலிகளின் விருப்பம். பலாலி முகாமையும் கைப்பற்றினால் குடாநாட்டுக்குள் படையினரைப் புலிகள் சுற்றிவளைத்துக் கொள்வார்கள். படையினர் வெளியேறுவது முடியாத காரியமாகிவிடும்.

கடலில் ஏற்கனவே புலிகள் மிகப்பலம் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் அலசிப்பார்க்கும் ஆய்வாளர்கள் அரியாலை, தனங்கிளப்பு பகுதிகளில் இருந்து புலிகள் தற்காப்புப் போர் கூடச் செய்யாமல் உயிர் ஆபத்து, உடல் ஊனம் அனைத்தையும் தவிர்த்து போர்த்தந்திரமாகப் பின்வாங்கிச் சென்றுள்ளனர் என்று கூறுகிறார்கள்.

புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்றும் நினைவுபடுத்துகின்றார்கள்.




'மலை'க் காங்கிரஸில் இருந்து பிளவுபட்டு வெளியேறிய 'சுவாமி'யின் புதிய காங்கிரஸுக்குள் கசமுசாக்கள் நடக்கின்றனவாம். 'சுவாமி' ஊரில் இல்லாத வேளையில் நடக்கும் 'கசமுசா' பேச்சுக்களினால் கட்சி சுக்குநூறாகிவிடும் என்று பேசிக் கொள்கிறார்கள்.

கசமுசாவுக்குக் காரணம் திடீர்திடீர் எனத் தலைமை எடுக்கும் முடிவுகள் தானாம்.

கட்சியின் முடிவு எடுக்கும் விவகாரத்தில் வீட்டு நிர்வாகத்துக்குக் கொடுக்கும் மரியாதை, கட்சி அதிகாரிகளுக்கும் முக்கிய நிர்வாகிகளுக்கும் கிடைப்பதில்லையாம்.

***

அந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு கல்விமான்கள் சார்பான ஒரு வயது முதிர்ந்த கல்விமான் அழையா விருந்தாளியாகிப் போனார். தலைவர்களின் கருத்துக்களை காது கொடுத்துக் கேட்டார்.

விருந்தாளியை இனம் கண்ட கூட்டத் தலைவர் கல்விமானின் மனம் புண்படாமல் 'அனுமதிக்க முடியாது' என்று கூற 'டோன்ட் வேஸ்ட் யுவர் டைம்' என்ற படி ஆத்திரமாய் குடு குடென வெளியேறினார்.

எதிர்ப்பட்ட பேனாக்காரனிடம் 'நேரம் தான் வீணாயிற்று ஓல் பிளடி ஹம்பக்' என்றார். பேச்சுக் கொடுக்க முயன்ற பேனாக்காரரிடம் 'அது சரி, நீங்கள் யார் என்றார்.

பேனாக்காரர் அறிமுகம் சொல்ல இன்னும் ஆத்திரமான அந்தக் கல்விமான் நோமோர் டோக்' எனக்கூறி விட்டுப் போய் விட்டார்.

***

நாட்டுப்பிரஜைகளின் முன்னேற்றத்திற்காக உருவாக்கிய கட்சி பிரஜைகளினாலேயே நிராகரிக்கப்பட்டுப் போனது குறித்து டாக்டர் செயலாளர் இன்னொரு கட்சித்தலைவரிடம் மனவருத்தப்பட்டு பேசுறாராம்.

தேர்தல் செலவுகளுக்காக மட்டும் 300 லகரங்களை செலவழித்தும் 19 ஆயிரமளவு வாக்குகள்தான் கிடைத்தன என்று மனந் திறந்து பேசியிருக்கிறாராம். முக்கிய தலைவர் மட்டும் 100 லகரங்கள் செலவழித்தாராம்.

அப்படியானால் அக்கட்சி பெற்ற ஒரு வாக்குக்குச் செலவு 1579 ரூபாவாகிறது. அந்தத்தலைவர் மூக்கில் விரல் வைக்கிறார்.

***

பச்சைக் கட்சியில் சேர்ந்து நாட்கணக்கில் எம்.பியாயிருந்த 'தீன்' உறுப்பினர் தனது ஆரம்பக்கட்சிக்குக் கடைக் கண் வீச்சை நிகழ்த்தியிருக்கிறாராம்.

பச்சைக் கட்சி இவரை பச்சையாக நறுக்கி விட்டதால் கிழக்கில் அதிகாரமுள்ள கட்சியுடன் மீண்டும் இணைவதற்கான துணைவியையே துணையாக நாடித் தூதனுப்பியுள்ளாராம். எல்லாம் சுபமே நடந்தால் தலைவி சார்பில் இவருக்குத்தான் கிழக்கில் பிரதான பங்கு இருக்கும் என்று பேசிக் கொள்கிறார்கள்.

***

வன்னியில் 'டக்' என்று ஊடுருவ முயலாமல் படிப்படியாகக் காய் நகர்த்துகிறாராம் ஒரு தலைவர். இத் தமிழ்க்கட்சித் தலைவர் பின்பற்றும் தந்திரோபாயத்தை இன்னொரு கட்சியின் தலைவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறாராம்.

'டக்' என்று யாழ்ப்பாணத்தில் பெரிதாக எதுவும் செய்ய முடியாது. புனரமைப்பு, அபிவிருத்தி என்றால் வன்னியில் தான் செய்ய முடியும் என்பதை 'டக்' தலைவரே நன்கு அறிவார். அதனால் த[illegible]ணார் மீனவர்களையே வலைவீசிப் பிடித்திருக்கிறார். இதே மாதிரி இன்னும் பல முயற்சிகளை 'டக்' என்று செய்யவிருக்கிறார்" என்று புரிந்து கொண்டதற்கான காரணத்தைக் கூறுகிறார். அந்த இன்னுமொரு கட்சியின் தலைவர்.

***

கட்சி மாறி வந்தவர்களில் 'டக்' கென்று இணைந்து கொண்ட தலைவரைப்பற்றி தோழர்களைப் பறிகொடுத்த தலைவர் எதுவும் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறாராம்.

ஆனால், 'அதிகாரம் இருக்கும் பக்கம் பார்த்துப் போயிருக்கிறார்கள். போகட்டும் 'என்கிறார் கூடவே இருக்கும் ஒரு தோழர்.

தோழர்கள் கட்சியை விட்டுப் போவதும், புதியவர்கள் வருவதும் எங்களுக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பழக்கப்பட்ட விஷயம். என்று அந்தத் தோழர் பேசுவது வரட்டு 'வேதாந்தம் 'சீச்சி... இந்தப்பழம் புளிக்கும்' என்ற கதையை நினைவு படுத்துகின்றது என்கிறார்கள் தருணம் பார்த்திருக்கும் வேறு சிலர்.

***

"பச்சைக்கட்சித்தலைவருடன் குழுக் கூட்டங்களில் உறுப்பினர்கள் எல்லாவற்றுக்கும் ஓகே என்று தலையாட்டுவார்கள். முதுகுக்குப் பின்னால் நின்று ஏசுவார்கள்" என்று உள்வீட்டு சமாசாரத்தை அள்ளிவைக்கும் ஒரு உறுப்பினர் அக்கட்சிக்கு வைத்துள்ள பெயரைக்கேட்டு அலுவலகத்துக்குள்ளேயே 'கொல்' என்று சிரிக்கிறார்கள்.

கட்சிப் பெரும் பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களினால் "ரோயல் ஓல்ட் போய்ஸ் பார்ட்டி" யாக அக்கட்சி மாறியிருப்பதாக அவர் விளக்கம் கூறுகிறார்.

## புதைகுழித் தகவல்கள் உறுதியாகி உள்ளன

மிருசுவில் வடக்கில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஊகிக்கப்பட்ட பல தகவல்கள், சாட்சிகள் மூலம் உறுதியாகி இருக்கின்றன.

அப்பகுதியில் மற்றொரு புதைகுழி இருப்பதாக வெளியான தகவலையும் சாட்சி ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இந்தச்சம்பவத்தில் கொல்லப்பட்ட தனது கணவர் அப்பகுதியில் மஞ்சள் நிற சுடிதார் அணிந்த இளம்பெண் ஒருவரின் சடலத்தின் பாகங்களைக் கண்டதாகத் தன்னிடம் கூறியிருந்தார் என்ற தகவலை ஜெயகுதா தெய்வகுலசிங்கம் மரண விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக பரவலாகக் கண்டனங்கள் எழுந்துள்ளன. விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மூன்று நீதிபதிகள் கொண்ட 'ட்ரயல் அற் பார்' நீதிமன்றத்தில் விசாரணை இடம் பெறும் என்ற தகவலும் வெளியாகி உள்ளது. இதுவரை இரு அதிகாரிகள் உட்பட 13 படையினர் கைதாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


நடைபெற்றுவரும் மரண விசாரணைகளின் போது சாட்சியமளித்தோர் கூறும் தகவல்கள் வேதனையையும் அச்சத்தையும் தருகின்றன.

நீர் நிறைந்த மலசலக் குழி ஒன்றினுள் ஆட்கள் கைகால் அடிப்பது போன்ற சத்தம் கேட்டதாக இச்சம்பவத்தின் போது உயிர் தப்பிய பொன்னுத்துரை மகேஸ்வரன் கூறியுள்ளார். இவரே இந்தச் சம்பவத்தின் முக்கிய சாட்சி.

கடந்தகால சம்பவங்களைப் பார்க்கும்போது விசாரணைகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட்டு குற்றமிழைத்தோர் தண்டிக்கப்படுவது அண்மைக்காலத்துக்குள் இடம்பெறுமா என்பது தெரியவில்லை.

இப்படித்தான் எங்கும் பேச்சு அடிபடுகிறது.

# கடற்கரை மணலில் குதிரைச் சவாரி!



அயர்லாந்து நாட்டுக் கடற்கரைகள் பரந்து விரிந்து இருக்கின்றன. கடலுக்குள் இருக்கும் முருகைக் கற்களை அகழ்ந்தெடுத்து சுண்ணாம்பு தயாரிப்பவர்கள் அங்கு இல்லை. அதன் காரணமாகக் கடல் அரிப்பு ஏற்படும் அபாயமும் அங்கு இல்லை. கடல் அலைகள் நாட்டுக்குள் வராததால் அழகிய கடற்கரைகளின் அழகு தாராளம். குதிரைகளில் சவாரி செய்து குதூகலம் பெற வாய்ப்பும் அங்கு அதிகம்.

# விண்வெளி நிலையத்தில் மின்சார உற்பத்தி

அமெரிக்கா – ரஷ்யா ஆகியவற்றுடன் மேலும் சில உலக நாடுகள் இணைந்து விண் வெளியில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவிவருகின்றன. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மின்சார இணைப்புப் பணி நடந்து வருகிறது. எண்டோவர் விண்கலத்தின் மூலம் விண் வெளிக்குச் சென்றுள்ள ஐவரில் கனடா நாட்டு விண்வெளி வீரர் மார்க் கார்ணியோ மின்சார உற்பத்திக்குத் தேவையான கருவியைப் பொருத்துகிறார். விண்கலத்தில் வீரர்கள் மிதந்து கொண்டே தலை கீழாக நின்றும் பணியாற்ற வேண்டியிருக்கும்.



# சாய்ந்த கோபுரம் வரவேற்கிறது




இத்தாலியில் இருக்கும் "பைஸா" கோபுரம் சாய்ந்து போயிருக்கிறது. ஆயினும் அதன் சாயும் அழகினை உலகம் கண்டு ரசித்துக் கொண்டுதான் இருக்கிறது. சாய்ந்த கோபுரம் மேற்கொண்டு சாய்ந்து விடாமல் இருப்பதற்குத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகப் பொதுமக்கள் இந்தக் கோபுரத்தில் ஏறுவதற்குக் கடந்த பத்து வருடங்களாக அனுமதிக்கப்படவில்லை. புத்தாண்டில் ஜூன் மாதம் முதல் பொதுமக்கள் சாய்ந்த கோபுரத்தில் ஏறிப் பார்க்க அனுமதிக்கப்படவுள்ளனர்.

# மரக்கறி உணவுதான் எனக்குப் பிடிக்கும்



துள்ளி ஓடி வந்த ஆடு அந்தச் சிறுமியைக் கண்டதும் நின்றது. மெல்ல மெல்ல அவள் அருகில் வந்தது. தலையை நீட்டி முகர்ந்து பார்த்தது. சிறுமியும் குனிந்து ஆட்டின் காதில் எதையோ கூறினாள். ஆடும் அன்பாக ஒரு முத்தம் கொடுத்தது. "மரக்கறி உணவுதான் எனக்குப் பிடிக்கும்" என்று அந்தச் சிறுமி ஆட்டின் காதில் சொல்லியிருப்பாளோ?

# வீதி நாடகங்கள் மூலம் தகவல்கள்



நாட்டில் நடைபெறும் சம்பவங்களை மக்களுக்குச் சுலபமாக விளக்கும் சாதனமாக நாடகம் கருதப்படுகிறது. அதிலும் வீதி நாடகங்கள் மூலம் இந்தப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்யக் கூடியதாக இருக்கிறது. இலங்கையில் வீதி நாடகங்கள் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன. இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தில் வீதி நாடகங்கள் மூலம் சூழல் அனர்த்தம் பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆடுபவரின் வெற்றியை விளைவிக்கிறார் இந்தக் "கோமாளி"

# ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசம்பர் 24 "சுடர் ஒளி" மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் சிரிப்பு நடிகர் விவேக்கினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து "சுடர் ஒளிக்கு" எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

01. தே.மேரிதிரேசா, டயகம.
02. ஜே.சிவதர்ஷனி, கொழும்பு-06.
03. எம்.ஐ.எம். ரயாத்தினா, ஹெம்பாவலை

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய அனைவரையும் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (31.12.2000) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்துக்குரிய நடிகை யார்? தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பெயர், விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்தவாரம் பிரசுரமாகியிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது. வில்லன் நடிகனின் மகனாகப் பிறந்து தனது இனிய முகத்தால் பிரகாசிக்கும் நடிகர் இவர்.

இந்த முகத்துக்குரிய நடிகரைக் கண்டு பிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர் ஒளி"
36/2, பிரெட்ரிக்கா வீதி,
கொழும்பு-06.

மசாலா மிக்ஸ் மசாலா மிக்ஸ்

# பௌதிக உண்மையோடு ஒட்டியது முருக தத்துவம்

மனிதன் எவ்வளவு மேலோன் ஆக முடியும் என்பது ஒரு பெரிய கேள்வி.

இக்கேள்விக்கு விடையாக சிவகுமாரன் சுப்பிரமணியன் அமைந்துள்ளான்.

நலத்தின் கண் நல்லாசையை வளர்ப்பவன் என்றும், நல்லார்க்கு இனியவன் என்றும் சுப்பிரமணியனுக்கு விளக்கம் கூறலாம்.

பதமும் பதத்தினுடைய அர்த்தமும் சேர்ந்து பதார்த்தமாகிறது. பதார்த்தங்கள் அனைத்தும் பரம் பொருள் என்னும் பதார்த்தத்தினின்று வந்தவைகள்.

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்கிறது மறைமொழி. ஆக சுப்ரமணியன் என்னும் சொல்லை தெய்வத்துக்கு வழங்கும் போதெல்லாம் அதன் அர்த்தத்தை உணர்ந்து சொல்லுவோமானால் அது பொருள் சேர்ந்த பெருஞ்சொல் அல்லது மந்திரம் ஆகிறது.

சூரியன் போன்றவன் சிவன். சேய்மையில் இருப்பதால் அவன் சேயோன்.

அழலைப் போன்றவன் அண்ணலின் குமாரன். நமக்கு மிக அண்மையில் அவன் உள்ளான்.

நம் சொரூபமாக சுப்ரமணியன் இருக்கின்றான்.

இந்த சிவகுமாரனை அறியுமளவு நம்மையே நாம் உள்ளபடி அறிகிறோம்.

உலகை உய்வித்தற் பொருட்டு உண்டு பண்ணப்பட்டவன் முருகக் கடவுள். அவன் உண்டான விதம் வியக்கத்தக்கது.

சிவபெருமான் யாண்டும் தம் சொரூபத்திலேயே திளைத்திருந்தார். அவரது நிறைநிலையைக் கலைக்க முயன்ற காமனை அவர் சாய்ந்தார்.

ஆதிசக்தி அவரைக் குறித்து தவம் புரிந்து அவரை அடைந்தாள். பிறகு அவர்களுக்கு முருகன் மைந்தனானான்.

ஆதவே, அவன் தோற்றத்திற்கும் காமத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

தவத்தின் விளைவே முருகவேள். சிவனரது ஐம்பொறிகளினின்றும் ஐந்து ஒளிப்பிழம்புகள் மனதினின்று மற்றோர் ஒளிப் பிழம்பு ஆக ஆறு ஒளிப் பிழம்புகள் வெளிக்கிளம்பின.

அவைகளின் தேஜசைக் கண்டு அம்பிகையே திகைத்துப் போய் விட்டாள். மற்ற தேவர்கள் அஞ்சியதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

கங்கையை உலர்த்திவிட்டு அவ்வொளித் திரள் சரவணப் பொய்கையில் பிரவேசித்தது.

நாணல் காட்டில் உள்ள நீர்நிலை என்று சரவணப் பொய்கை பொருள்படுகிறது.

அங்கிருந்த ஆறு முகம், பன்னிரு தோள், ஓர் உடல்உடைய தெய்வக் குழவியொன்று உருவெடுத்து வந்தது. ஷண்முகன் என்பவன் அவனே.

கார்த்திகைப் பெண்கள் ஆறுபேர் அவனைப் பராமரிக்க முன் வந்தனர். அவர்கள் பொருட்டு அவன் ஆறு குழந்தைகளாகத் தன்னைப் பிரித்துக் கொள்வதுண்டு.

அவர்களிடம் பால் உண்டபிறகு ஓர் உருவமாக மாறிவிடுவான்.

விளையாட்டாகக் கணக்கற்ற வடிவங்களை அவன் எடுப்பான்.

படுத்துறங்கும் பொழுது ஒற்றை மேனியன்



ஆகிவிடுவான். இங்ஙனம் அவன் வளர்ந்து வருவானாயினன்.

கார்த்திகை மங்கையர்களால் வளர்க்கப் பட்டமையினால் அவனுக்குக் கார்த்திகேயன் என்னும் பெயர் வந்தது.

ஜீவர்களுடைய தோற்றத்துக்கே முருகக் கடவுள் முன்மாதிரியாகின்றான். சரவணப் பொய்கையானது கருப்பைக்குச் சமமானது.

அது முற்றிலும் சக்தி சொரூபம். சிவ சேதனம் அதன் கண் நாட்டப்பெற்றது.

அப்பொழுது பஞ்சேந்திரியங்களும் மனதும் ஒன்றுபட்டு விட்டன.

உயிர் வகைகளுள் ஆறு அறிவோடு கூடியது மிக உயர்ந்தது.

பரஞானம் அல்லது கடவுள் ஞானத்தைப் பெறுவதற்கு ஆறறிவு உயிரே முற்றிலும் தகுந்தது.

கண், காது, வாய் போன்ற ஒவ்வோர் இந்திரியமும் தனித்தனியே பயிற்சி பெறுகின்றன.

கார்த்திகை மாதர் ஆறுபேரிடம் ஆறுவடிவங்களில் இருந்து வளர்க்கப் பெறுவது என்பதன் பொருள் பஞ்சேந்திரியங்களும் மனதும் நல்ல பயிற்சி பெறுதலாம்.

உறங்கும் பொழுது எல்லா இந்திரியங்களும் மனதும் ஒடுங்கி விடுவதால் ஓர் உருவமாய் விடுகிறது.

பௌதிக உலகம் பரம்பொருளின் ஸ்தூல தோற்றமாம். காரண வஸ்து, காரியவஸ்து ஆகிய இரண்டும் வஸ்து என்று எடுத்துக் கொள்ளுமிடத்து ஒன்றேயாம்.

பரம்பொருளைக் காரணவஸ்து என்றும், பிரபஞ்சத்தைக் காரியவஸ்து என்றும் வைத்துக் கொள்வோம்.

பரம்பொருள் சண்முகம் ஆனான். கார்த்திகை மகளிர் ஆறுபேர் அவனைப் போஷித்தார்கள். இது பரம்பொருளைப் பற்றிய வரலாறு.

இனி பூதப்பொருளைப் பற்றிப் பௌதிக விஞ்ஞானிகள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

ஒவ்வொரு பூதப் பொருளும் காரண நிலையில் புரடோன் என்றும் எலக்ட்ரோன் என்றும் இரண்டு வடிவங்கள் எடுக்கின்றன.

புரடோன் என்பது அசையாத நடுவுநிலை எய்துகிறது. அதைச் சுற்றிச் சுற்றி எலக்ட்ரோன் என்பன பல சுழல்கின்றன.

அத்தகைய பூதப் பொருள்களில் கரி என்பது ஒன்று.

அதில் புரடோன் ஒன்று இருக்கிறது. எலக்ட்ரோன் ஆறு இருக்கின்றன.

இந்த எலக்ட்ரோன் எண்ணிக்கையில் ஆறுக்கு அதிகமாகப் போய்விட்டாலும் குறைவாகப் போய்விட்டாலும் உயிர்த் தத்துவத்தை விளக்கும் சக்தியை அது இழந்து விடுகிறது.

கரியில் ஆறு எலக்ட்ரோன் சேர்ந்திருந்து உயிர்த் தத்துவத்தை வளர்ப்பதில் இயற்கையின் நடைமுறையைப் பற்றிய பேர் உண்மை ஏதாவது ஒன்று விளக்கப் பெறலாம்.

இது பௌதிக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் பயன்.

இதற்கும் குமரன் ஆறு கார்த்திகை மாதர்களால் வளர்க்கப் பெற்றதற்கும் உள்ள ஒற்றுமை கவனிக்கத் தக்கது.

– சுவாமி சித்பவானந்தர்



கந்தளாய் சாஹிரா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியின் போது சிறுவர், சிறுமியர் விநோத உடைகளில்.

– எம்.ஜே.அன்வர் அலி

# கருணாநிதி-மூப்பனார் மீண்டும் ஒட்டுறவு




கருணாநிதி - மூப்பனார் நட்பை யாரால் கெடுக்கமுடியும்?

தமிழக சட்ட சபைக்கு ஏப்ரல் மாதத்தில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் அங்கு தேர்தல் பலப் பரீட்சை உச்சம் பெற்றிருக்கிறது.

தி.மு.கவும் அ.தி.மு.க வும் தான் நேரடியாக மோதும் நிலையில் இருக்கின்றன. இருப்பினும் ஏனைய கட்சிகள் எந்தக் கூட்டணியில் இடம் பெறுவது என்பது குறித்து முடிவு எடுப்பதில் குத்து வெட்டுகள் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

மரத்துக்கு மரம் தாவும் இந்த வித்தையில் மூப்பனார் இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாதவராக இருக்கிறார். இன்னும் கூறுவதானால் இதுவிடயத்தில் அவர் உடனடியாகவே ஒரு முடிவுக்கு வந்து விடுவதற்குத் தயாராக இல்லை என்பது புலனாகிறது.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவராக மூப்பனார் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இருப்பினும் தனிக்கட்சியாக இயங்கி காமராஜர் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தும் நிலையில் அவர் இல்லை.

தமது கட்சிக்கு தனியானதொரு ஆட்சியைத் தேடிக் கொள்ள முடியாதவர். ஆனால் இரு அணிகள் மோதும் போது ஏதோ ஒரு அணிக்கு பக்கபலமாக இருந்து வெற்றியைத் தேடித்தரும் வலு அவருக்கு இருக்கிறது. இதனால்தான் தேர்தல் காலத்தில் கூட்டணிப் பங்காளியாக இருப்பதற்கு மூப்பனார் எப்போதும் விரும்புவது உண்டு. சில சட்டசபை, லோகசபை உறுப்பினர்கள் கட்சிக்கு கிடைப்பார்களே.

கருணாநிதியின் கூட்டணியாக இருந்து கடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றிக்கு வழி சமைத்தவர் மூப்பனார். பின்னர் வாஜ்பாய் அணியில் கருணாநிதி சேர்ந்ததால் அவரை விட்டு விலகியவர்.

ஜெயலலிதாவுடன் மூப்பனார் கூட்டுச் சேர்ந்த போது அந்த அணியில் மிகவும் செல்வாக்குள்ள தலைமைத்துவம் தமக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் வெறும் கருவேப்பிலையாகவே மூப்பனாரின் பங்களிப்பு கருதப்பட்டது.

இந்த நிலையை மாற்றி அ.தி.மு.க கூட்டணியில் தேர்தல் காலத்தில் மாத்திரமல்ல, தேர்தலில் வென்றபின் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அரசாங்கத்திலும் பங்கு கொள்ளும் நிலையை மூப்பனார் இன்று எதிர்பார்க்கிறார்.

ஆனால் ஜெயலலிதாவோ தேர்தலில் மாத்திரம்தான் கூட்டு. ஆட்சியில் அ.தி.மு.க வுக்கு மட்டுமே பங்கு என்று கூறிவிட்டார்.

ஜெயலலிதா ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் சிறைத்தண்டனை பெற்றிருக்கிறார். அவர் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஜெயலலிதாவின் தேர்தல் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டால் அ.தி.மு.க கூட்டணியின் இணைத் தலைவர் என்ற முறையில் தமக்கே தலைமைப் பொறுப்புக் கிடைக்கும் என்று மூப்பனார் எதிர்பார்த்தார்.

ஜெயலலிதாவுக்கு அடுத்த தரத்தில் அ.தி.மு.க வில் தலைமை தாங்க யாரும் இல்லை. காளிமுத்துவுக்கு சிறிது கௌரவம் கொடுத்து அவரை ஜெயலலிதா தூக்கி வைத்திருந்தாலும் உடன் பிறவா சகோதரியும் வளர்ப்பு மகனும் காளிமுத்துவை ஏற்பார்களா என்பது தெரியவில்லை.

எனவே ஜெயலலிதாவே கதியென்று இருக்காமல் தமது இலக்கை விரிவு படுத்த வேண்டிய நிலைக்கு வந்து விட்டார் மூப்பனார்.

தி.மு.க.கூட்டணியில் வெளிப்படையாகவே பிளவு இருப்பது போல் தென்படவில்லை. ஆயினும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் கருணாநிதிக்குத் தலையிடியைக் கொடுத்த வண்ணமே இருக்கிறார்.

அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ராம்தாஸ் தமது ஆதரவாளர்களைக் கொண்டு நடத்திய வண்ணமே இருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சியினர் பெருமளவில் கைது செய்யப்படுகிறார்கள். அரசாங்கச் சொத்துக்களை அவர்கள் அழித்தும் வருகிறார்கள்.

இந்தச் செயல்களை முதலமைச்சர் கருணாநிதி கண்டிக்கும் வேளையில் ராம்தாஸ் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். இதனால் தமிழக அரசியலில் பெரும் மாற்றம் ஏற்படுமா என்ற பரபரப்பு ஏற்படுகிறது.

ஆயினும் ராம்தாஸ் தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவிக்கும் போது தி.மு.க கூட்டணியிலிருந்து வெளியேறி விடமாட்டோம் என்று தெரிவித்து வருகிறார்.

ராம் தாஸின் கெடுபிடியை மட்டுப்படுத்துவதற்காக வாழப்பாடி ராமமூர்த்தியை முடுக்கிவிடுகிறார் கருணாநிதி என்றும் புகார் எழுப்பப் படுகிறது.

தமிழகத்தில் வன்னியர் இனத்தவர்களின் வாக்கு வங்கி பலம் வாய்ந்தது. அதனைத்தன்வசம் வைத்துக் கொண்டு ஆட்டிப் படைக்கிறார் ராம்தாஸ். அதே இனத்தவரான வாழப்பாடியைத் தூக்கிவிட்டால் ராம்தாஸை மடக்கி விடலாம் என்ற எண்ணம் சில பேருக்கு இருக்கிறது.

ஆயினும் ராம்தாஸோ தமது கட்சிக்கு கருணாநிதியை விட மேலதிகமான சட்டசபை ஆசனங்களை ஜெயலலிதா தந்தால் அணி மாறுவதற்குத் தயாராக இருக்கிறார்.

இந்நிலையில் மூப்பனாரின் பங்களிப்பு கருணாநிதிக்கு தேவைப்படும். அண்மைக்கால நிகழ்வுகள் சில மூப்பனாரையும் கருணாநிதியையும் இணைய வைத்திருக்கிறது.

மூப்பனார் தமிழக அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியபோது கருணாநிதி ஆத்திரம் அடைந்தார். "மூப்பனாருடன் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை" என்று அறிவித்தார். ஆயினும் ஏதாவது பொது நிகழ்ச்சிகளில் இருவரும் சந்திக்கும் போது மலர்ச்சியுடன் உரையாடிக் கொண்டார்கள்.

தமிழக காங்கிரஸ் பிரமுகர் குமரி ஆனந்தன் தமது இலக்கிய பொன் விழாவை அண்மையில் கொண்டாடினார். அந்த விழாவில் கருணாநிதியும் மூப்பனாரும் கலந்து கொண்டார்கள். இருவரும் மேடையில் மிகவும் கலகலப்பாகக் காட்சி தந்தார்கள்.

கருணாநிதி பேசும் போது "உங்களோடு ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று நான் மூப்பனாருடைய தலைமையிலான கட்சியைப் பற்றிப் பேசிவிட்டாலும் கூட அது கட்சி அளவிலேதான். எங்களுடைய உறவும் நட்பும் எங்கே போய்விடும்? யார் அதை அழிக்க முடியும்? யாரால் அதைக் கெடுக்க முடியும்?" என்று கூறினார். பலத்த கைத்தட்டல் விழுந்தது.

"ஒரு நாள் இரவு மருத்துவ மனையில் முரசொலிமாறன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த போது பிழைப்பது அரிது என்று மருத்துவர்கள் எல்லாம் கைவிட்ட போதிலும் இரவு 10.00 மணியிலிருந்து விடியற் காலை 3.45 மணிவரை என்னோடு மூப்பனார் விழித்திருந்தாரே அந்த நட்புக்குப் பாதகம் ஏற்படுத்த யாரால் முடியும்?" என்றும் கருணாநிதி கேட்டார்.



ஜெயலலிதா

கருணாநிதியும் மூப்பனாரும் ஓரணியில் திரளுவது நிச்சயமே என்பதை உறுதிப்படுத்தக் கூடிய வித்தில் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. தி.மு.க. பக்கம் சாயும் அளவுக்கு மூப்பனாரின் தளபதி சிதம்பரம் ஏற்கனவே செயற்படத்தொடங்கி விட்டார்.

மத்தியில் வாஜ்பாய் அரசுடன் இணைந்துள்ள கருணாநிதியுடன் அதாவது இந்து தீவிரவாதிகளுடன் பிணைந்து விட்டவருடன் எவ்விதம் கூட்டுச் சேருவது? இவ்விதம் கேள்விகள் எழுப்பப்படக்கூடும்.

ஆயினும், "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்று ஒரு கோஷத்தை எழுப்பி இந்தப்பிரச்சனைக்கு முன்னர் ஒரு தடவை தீர்வு கண்டவர் கருணாநிதி. எனவே தமது கட்சிக்கு நடு நிலையான தன்மையை ஏற்படுத்தி தமக்கென ஒரு ஸ்திரப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக மூப்பனார் கருணாநிதியின் ஒட்டுறவை நாடத்தான் செய்வார் என்று தெரிவிக்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

## வாசகர் இதயம் பேசுகிறது

*தோண்டிப் புதைக்கப்பட்ட உண்மை களைக் கிண்டிக் கிளறி வெளிக் கொண்டு வரும் வலிகாமத்தானும் வன்னிமைந்தனும் எம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டார்கள்.*
*அ.அரசரெத்தினம், சேனையூர் —06.*

*சண்டை... சண்டை... என்று போர் முரசு கொட்டும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் படத்தை அட்டையில் பிரசுரித்து ஆளை அடையாளம் காட்டிவிட்டீர்கள்!*
*ம.சிவகுமார், வவுனியா.*

*"சுடர்ஒளி" தரும் அரசியல் செய்திகள் அபாரம்... உனது சேவை எமக்கு நிச்சயம் தேவை.*
*—ஜே.எம்.பாரிஸ், தெல்தெனியா.*

*வித்தியாசமான விடயங்கள் வாசகர்களை வெகுவாக வசீகரிக்கும் தலைப்புகள். கூடவே அலங்காரமான எழுத்துக்கள். "சுடர்ஒளி" பேரொளி விட்டுப் பிரகாசிக்கிறது.*
*—முத்துமணி, பதுளை.*

*ராக்கிங் கொடுமை பற்றிப் பல தரப்பட்டவர்களின் கருத்துகளைத் தந்திருந்த விதம் அபாரம்.*
*—த.தி.மூர்த்தி, இறம்பொடை.*

*சுடர்ஒளியே! சமீப காலமாகவே உன்னில் ஆழ்ந்து போனவன் நான். ஒவ்வொரு பக்கமும் அற்புதம்.*
*—த.பாலசுப்பிரமணியம், வேதமுல்லையூர்*

*வவுனியா வைத்தியர்களின் ஊழல்கள், பாலியல் குற்றங்கள் ஆகியவற்றை அம்பலப்படுத்தியதற்கு நன்றி. இந்தப்பணி தொடரட்டும்.*
*—எல்.கணேசன் சேகர், கொழும்பு—13.*

*குறுகிய காலத்தில் உனது சிறப்பான சேவையால் வாசக இதயங்களை கொள்ளையடித்து விட்டாய்.*
*—ஆர்.செல்வராஜ், ஹாலிஎல*

*தங்கள் பத்திரிகையின் புதிய வாசகன் நான். அனைத்துப் பகுதிகளும் புதுமையாக அமைந்திருக்கின்றன.*
*—பீ.அலன், கொழும்பு—06.*

*"சுடர்ஒளியே" நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்துமே அபாரம். அதிலும் குறிப்பாக "வடபுலத்தில்" பகுதி எம்மை யாழ்ப்பாணத்துக்கே அழைத்துச் சென்று விடுகிறது.*
*—தினேஸ், முருங்கன்.*

*கவிதைப் பகுதியைச் சிறப்பாக வெளியிட்டு என் போன்றவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நன்றி.*
*—எஸ்.டி.எம்.இர்ஹாம், காத்தான்குடி—06.*

*என் போன்ற ஆர்வமுள்ளவர்களுக்கு 'சுடர்ஒளி' மூலம் வாய்ப்புகள் கிடைத்தால் மகிழ்வோம். தொடர்ந்து புதிய அம்சங்களைத் தாருங்கள்.*
*—எஸ்.டி.கனகரட்ணம், கந்தப்பளை.*

*"யுத்த முழக்கத்தின் மத்தியில் சமாதானம் சாத்தியமா?" என்ற கட்டுரை எம்மைச் சிந்திக்க வைத்திருக்கிறது.*
*—த.செல்வராசா, வத்தளை.*

*வவுனியா நலன்புரி நிலையங்களில் இன்று என்ன நடக்கிறது? என்ற தலைப்பில் வெளியான கட்டுரை எம்மை அதிரவைத்துவிட்டது.*
*—எம்.எம்.கைரூஸ், மருதானை.*

*"ஈழப்போரைக் கைவிட்டு நிற்கும் தமிழ்க் கட்சிகள் கூறுவது என்ன?" என்ற அட்டைப் படக் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.*
*— ம.தருமரத்தினம், திருகோணமலை*

பொதுசன நூலகம்

# வன்னிப் பயண தில்லுமுல்லுகள் பணத் தரகர்கள் பெரும் பங்கு !

படையினர் பாதுகாப்புக்கானகெடுபிடிகளை அதிகரிக்கும் போதெல்லாம் அது பலருக்குப் பெரும் வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பது வழக்கம்.

* வடபகுதிக்குப் பொருள்களை அனுப்புவதற்கான தடையை அடுத்து தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் சென்று விற்றுப் பலர் லட்சங்களைச் சம்பாதிக்கின்றனர்.

* வவுனியாவில் வதிவிடப் பாஸ் கெடுபிடியை வைத்துப் பலர் போலிப் பாஸ்களைத் தயாரித்துப் பணம் பண்ணுகிறார்கள்.

* வவுனியாவிலிருந்து தென்மாவட்டங்களுக்குச் செல்வதற்காக நடைமுறையில உள்ள போக்குவரத்துப் பாஸ் கெடுபிடியால் ஆட்களை பாஸில்லாமல் கடத்திச் சென்று பலர் காசு சம்பாதிக்கிறார்கள்.

* வவுனியாவில் நடைமுறையில் உள்ள எரிபொருள் பெர்மிட் திட்டத்தால் கள்ள பெர்மிட்களை அச்சிட்டு விற்றும், கள்ளச் சந்தையில் எரிபொருளை விற்றும் பலர் நோட்டுக்களை அள்ளிக் கொள்கின்றனர்.

இந்த வரிசையில் தற்போது வவுனியாவில் சூடு பிடித்துள்ள வியாபாரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்குச் செல்லும் மக்களுக்கு பயண அனுமதி பெற்றுக் கொடுத்துப் பணம் கறப்பதாகும்.

பயணம், அனுமதி அதற்குப் பணம் எல்லாம் குழப்பமாக இருந்தால் அது பற்றிய தெளிவுக்காக –முதலில் நடைமுறை விவகாரங்களைப் பார்ப்போம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்கும் படையினர் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாவிற்கும் இடையில் பெரிய தம்பனையூடாக வாரத்தில் இரண்டு நாட்கள் பயணிகள் போக்குவரத்து நடைபெறுகிறது.

செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் நடைபெறும் இந்தப் போக்குவரத்தில் தினமும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பயணிகளே போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

முன்னர் பயண நாட்களில் 500 பேர் மட்டுமே ஒவ்வொருவரும் கைகளில் 2 பைகளை மட்டுமே எடுத்துச் செல்லலாம் என்ற கட்டுப்பாடிருந்தது. ஆனால் தற்போது போகிறவர்களின் எண்ணிக்கை 700 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பயணி ஒவ்வொருவரும் 40 கிலோ பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்லலாம்.

வன்னிக்குச் செல்லும் பயணிகள் மூட்டை முடிச்சுக்களுடன் வவுனியாவிலிருந்து அலுங்காமல், குலுங்காமல் பஸ்ஸிலே போய் இறங்கிச் சென்று விட முடியாது.

வவுனியாவிலிருந்து புறப்பட்டு பெரிய தம்பனையிலுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களைத், தாண்டிச் செல்வதற்கு முன்னர் ஏக கெடுபிடிகளைத் தாண்டி நொந்து, நூலாகித்தான் போய்ச் சேர வேண்டும்.

வன்னிக்குப் போவதென்று முடிவெடுத்தபின் வவுனியா செயலகத்திற்குச் சென்று அடையாள அட்டை, வதிவிடப்பாஸ் என்பனவற்றின் போட்டோப் பிரதிகளைக் கொடுத்துத் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

செவ்வாய்க்கிழமை பயணம் செய்பவர்களுக்கான பதிவு சனிக்கிழமையும், வெள்ளிக்கிழமை பயணம் செய்பவர்களுக்கான பதிவு புதன்கிழமையும் இடம்பெறும்.

அவ்வாறு பதிவு செய்தபின் பயணிகளுக்கு அனுமதி அட்டை ஒன்று தரப்படும். அந்த அட்டையை எடுத்துக் கொண்டு பயணி பயணம் செய்யும் நாளில் வவுனியா செயலகத்திற்குக் காலையில் செல்ல வேண்டும்.

அங்கு அனுமதி அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு பயணிகள் செயலக வளவில் நிற்கும் பஸ்களில் ஏற்றப்பட்டு இராணுவப் பாதுகாப்புடன் பெரிய தம்பனைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவர். பின்னர் அங்குள்ள முன்னரங்க காவலரணூடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். இராணுவ முன்னரங்கப் பகுதிகளுக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ள மனித நடமாட்டமற்ற பகுதியில் (No man area) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் நின்று கண்காணித்தபடி பயணிகள் பயணம் செய்ய ஒத்தாசை வழங்குவர்.

இதுதான் பயணிகள் போக்குவரத்தில் உள்ள வழமையான நடைமுறை . இதில் தில்லுமுல்லு எங்கே நடைபெறுகிறது?

வன்னிக்குப் பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பயணம் செய்ய ஆயிரத்திற்கு மேற்பட்ட பயணிகள் முன்வருகின்றார்கள். ஆனால் வவுனியா செயலகத்தில் வைத்து 700 பேர் மட்டுமே பயணம் செய்ய அனுமதி அட்டை வழங்கப்படுகிறது.

இதிலும் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பதியப்படும் 700 பயணிகளும் வன்னிக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறார்களா என்றால் அதுவுமில்லை. கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தமது கண்காணிப்பு நடவடிக்கையை

**அவசர தேவைக்கும் முன்னுரிமை வழங்குவதற்கும் என்று வவுனியா செயலகத்தில் ஒவ்வொரு தடவையும் 100 வரையான பிரயாண அனுமதி அட்டைகள் அங்கே காத்து நிற்பவர்களுக்கு வழங்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்படுகின்றன.**

**இந்த அட்டைகள் கடைசியில் சிலரிடையே பங்குபோடப்படுகின்றன.**

**பெரும்பாலும் இந்த அட்டைகள் தான் தரகர்களினால் பணத்துக்கு விற்கப்படுகின்றன.**

மாலை 5 மணியுடன் நிறுத்தி விடுகின்றனர். இதனால் படையினர் கவிழ்த்துக் கொட்டி மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கையெல்லாம் முடிந்து பயணிகள் பயணத்தைத் தொடரத் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது.

ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் 100 முதல் 300 பேர் வரையானோர் பயணத்தைத் தொடர முடியாது திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு திரும்பி வருவோர் மறுமுறை மீண்டும் பயணம் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படுவர். அவ்வாறான வேளைகளில் புதிதாக 400 முதல் 500 பேர் வரையினரே பயணம் செய்யப் பதிவு செய்யப்படும் சூழ்நிலை உருவாகிறது.

இதனால் பயணம் செய்யக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான பயணிகள் வாரக் கணக்காக லொட்ஜ்களில் தங்கி, கடைகளில் சாப்பிட்டு நூற்றுக் கணக்கில் பணத்தைச் செலவிட்டு அநியாயமாக வவுனியா செயலகத்திற்கு அலைய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இப்படி அலைந்து திரியும் பயணிகள் ஏதோ 5ஐ 10ஐக் கொடுத்து விரைவிலே வன்னிக்குப் போய்ச் சேர்ந்து விட்டால் போதுமென்ற நிலையில் இருக்கின்றனர். அப்படியான பயணிகளிடம் பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொடுத்து அடுத்த நாளே அவர்களை ஊருக்கு அனுப்பி வைக்க தரகர்கள் தயாராகக் காத்திருக்கிறார்கள்.

அலைச்சலின்றி, ஏமாற்றமின்றி இருந்த இடத்திலேயே அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்டு பயணத்தை மேற்கொள்ளப் பலரும் இப்போது முண்டியடிக்கிறார்கள். எதுவித சிரமமுமின்றி அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள 300 முதல் 500 ரூபா வரை தற்போது தரகர்களால் அறவிடப்பட்டு வருகிறது.

வன்னிக்குச் செல்லத்தயாராகிவிட்ட பயணிகளுக்கு இந்தப் பயணம் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடுவதில்லை. ஏனென்றால் அனுமதி கிடைக்காமல் வாரக் கணக்கில் கடைச்சாப்பாட்டிற்கும், தங்கும் விடுதிகளுக்கும் பணத்தை அள்ளிக் கொடுப்பதை விட இது லாபமென்றே அவர்கள் கருதுகிறார்கள். இதனால் தற்போது வவுனியாவிலுள்ள லொஜ்களில் இந்தத் தரகர்களின் நடமாட்டம் அதிகரித்தே காணப்படுகிறது.

சரி... அரச அதிபர், திட்டப் பணிப்பாளர் ஆகியோரின் கடுமையான கண்காணிப்பிற்கு மத்தியிலும் இது எவ்வாறு நடைபெறுகிறது என்று விசாரித்துப் பார்த்தோம்.

செயலகத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் சொன்னார்:–

ஒவ்வொரு புதன், சனி ஆகிய நாட்களும் அனுமதி அட்டைகள் வழங்கப்படும் போது ஒரு குறிப்பிட்டளவு அனுமதி அட்டைகளையே வழங்க வேண்டும் என்றும், சுமார் 100 வரையான அட்டைகள் வழங்கப்படக் கூடாதென்றும் உத்தரவு. அந்த அட்டைகள் அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் அவசர தேவைக்காக வருவோருக்கு முன்னுரிமை வழங்கவெனவே ஒதுக்கப்படுகின்றன.

ஆனால் அவ்வாறாக முன்னுரிமைக்கு ஒதுக்கப்பட்ட அளவு பயணிகள் வராத பட்சத்தில் எஞ்சியிருக்கும் அனுமதி அட்டைகள் இவ்வாறாகப் பங்கிடப் படுவதென்பதை அவர் உறுதிப்படுத்தினார். ஆனால் நாம் அறிந்தவரையில் அதைவிடக் கூடுதலாகவே பணியாளர்கள் அனுமதி அட்டைகளைப் பகிர்ந்து கொள்கிறார்களாம். கேட்டால் செயலகத்தின் உயரதிகாரி ஒருவர் தலையில் பழியைப் போட்டு விடுகின்றனராம்.


இதில் பெரிய பரிதாபமென்னவென்றால் ஏற்கனவே பயணம் செய்ய முடியாது திரும்பி வந்த பலரே மறுமுறை முன்னுரிமை வழங்கப்படாமல் தூக்கி அடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக பாதிக்கப்பட்ட பலரும் பணவசதி இல்லாத பலரும் அதிகாலை வேளைகளிலேயே சென்று செயலக வளவில் காத்திருந்து பெயர்களைப் பதிவு செய்தும் பயணம் செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்புவர்.

பணவசதி படைத்த பலர் பணத்தைக்கொடுத்து ''அல்லுத் தொல்லு'' இல்லாமல் போய்ச் சேர்ந்து விடுகின்றனர். இது பாதிக்கப்பட்டவர்களை எரிச்சலடைய வைக்கிறது.

**–வன்னிமைந்தன்**


## ஒரு யுக புருஷரின் மறைவில் ஓராண்டு நினைவில்



அன்று சுகவை அறுபது கண்டாய் அண்ணலே
அடங்காத் தமிழன் என்றே வாழ்த்தினேன்
தம் தமிழன் துயரதனை உரிமைக்குரலாய்
உலகெலாம் உணரவைத்த தமிழ்த் தேசியத் தலைவ
இன்று மறைவிலும் மாமனிதனானாய்

- கைதையூரான்

**நின் பணியில்**

அ. விநாயகமூர்த்தி (பா.உ.)
தலைவர்

கலாநிதி ந. குமரகுருபரன்
பொதுச்செயலாளர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

# புதைகுழி விவகாரத்தில் சட்டத்தரணிகள் சங்கடம்!

முழங்காலில் தலைசாய்த்து நித்திரையில் இருந்தாள் சின்னாச்சி.

''என்ன, கடலை வியாபாரத்தை விட்டிட்டு நித்திரையோ?'' பரமலிங்கம் மாஸ்டருடன் தேரடியில் வந்தமர்ந்த விநாசியரின் குரல் சின்னாச்சியை எழுப்பியது. துணுக்குற்று கண்விழித்த அவள் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''நேற்று ராத்திரி நடுச்சாமம் வீட்டுக்குப் பக்கத்திலை கண்டபாட்டுக்கு சூட்டுச் சத்தம். பயத்திலை பிள்ளைகளை எழுப்பி சுவரோட ஒட்டிக் கொண்டிருந்தம். விடிஞ்ச பிறகுதான் ராத்திரி புதுவருஷம் பிறக்கேக்கை வீட்டுக்குக் கிட்ட நிக்கிற 'அவை' வெடிதீர்த்து கொண்டாடினது தெரிஞ்சிது.

பூனைக்கு விளையாட்டாம், சுண்டெலிக்கு சீவன் போகுதாம் என்டு அவை புதுவருஷம் கொண்டாட நாலும் பிள்ளையளும் பயத்திலை நித்திரையில்லாமல் கிடந்ததுதான் மிச்சம்'' என்றாள் சின்னாச்சி. அவள் பேசி முடிக்கவும் டானியலுடன் லோகன் வரவும் சரியாக இருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்திலை புது மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடந்ததாம். வழக்கமா இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் அலங்கோலமா சினிமாப் பாட்டுப் பாடுகிறவர்கள் இந்த முறை 'பூத்த கொடி பூக்கள் இன்றி ...' என்று நல்ல பாட்டுகளெல்லாம் பாடிச்சினமாம்''. மணலில் சாய்ந்தபடி லோகன் சொன்னான்.

''முன்பு மாணவர் ஊர்வலத்துக்கு அனுமதியளிக்காத உயர் தலைமை கூட சுயநிர்ணய உரிமை பற்றி மாணவர்கள் நடத்திய விழிப்புணர்வு நிகழ்வில் பங்குபற்றி உரை நிகழ்த்தியதாம். இதுக்கெல்லாம், யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னர் பெயரிலை அனுப்பப்பட்ட கடிதமும் ஒரு காரணம் என்று கதை அடிபடுகுது'' என்றான் டானியல்.

''அங்கேயும் வித்தியாசமானவை இருக்கினம்'' என்று மாஸ்டர் தொடங்கினார்.

''திருநெல்வேலிச் சந்தியிலை ஒரு தம்பி சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்குப் போனவராம். அப்ப பக்கத்திலை காவலுக்கு நின்ற அவையிலை ஒருத்தர் சைக்கிள் சில்லில் காற்றைக் கழட்டிவிட்டாராம்.''

''போன தம்பி திரும்பி வந்து ஏன் காற்றை கழட்டினீங்கள்?'' என்று கேட்க இங்கே சைக்கிள் நிறுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டதாம்.

''மற்ற சைக்கிள்கள் நிற்கும் போது எனது சைக்கிள் மட்டும் நிற்கக் கூடாதோ'' என்று கேட்டு தங்கடை பாணியைப் பாவிக்க வழக்கமாக நடக்கிறது மாறி நடந்ததாம்.

''பக்கத்திலை நின்ற மற்ற அவையும் கிட்ட வராமல் தள்ளித்தான் நின்றார்களாம்.''

''அந்த நேரம் பார்த்து மோட்டார் சைக்கிளில் வந்த அவையின்ரை ஆக்கள் வந்து விசாரித்து விட்டு கூடி நின்றவர்களைப் பார்த்து நீங்கள் ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்க, செம்மணி, மிருசுவில் மாதிரி இங்கேயும் நடக்கக் கூடாதென்றுதான் பார்க்கிறம் என்று கூட்டத்தில் இருந்த வயோதிபக் குரல் ஒன்று எழுப்பிய தாம்.

'இதுக்குப் பிறகும் நின்றால் சிக்கல் என்று தம்பியை தங்கடை இடத்துக்கு வரச் சொல்லிப்போட்டு போயிட்டினம். தம்பி அங்கே போக அங்கிருந்த பெரியவர், நல்லபடியாகக் கதைத்து திருப்பி அனுப்பினாராம்'' என்றார் மாஸ்டர்.

''பூவோட சேர்ந்த நார் போல சில தம்பிமார் இருக்கத்தான் செய்யினம்'' என்று புளகாங்கிதம் அடைந்தாள் சின்னாச்சி.

"ஆனால் தமிழ் சட்டத்தரணிமார் அப்படியில்லையே" என்று கவலைப்பட்ட விநாசியர் காரணத்தைக் கூறினார்.

"மிருசுவில் புதைகுழி வழக்கு நடக்கிறபோது சாட்சிகளை நெறிப்படுத்தி நீதியை வெளி வரச் செய்ய சட்டத்தரணிகள் ஒருவரும் முன்வரவில்லையாம்.

நீதிவான் சாட்சிகளை விசாரித்து, பிறகு பொலிசுக்கு தெளிவுபடுத்தி அதனை, பதிவு செய்கிற எல்லாவற்றையும் ஒரே ஆளாகப் பார்த்தவராம்.

புதைகுழிப்பிரச்சினையில் நீதி கிடைக்க நீதிவானுடன், ஈ.பி.டி.பியும், பொலிசும் முயற்சி எடுக்க யாழ் சட்டத்தரணிகள் எங்களைக் கூப்பிடவில்லை என்று சாட்டுக் கூறிவிட்டு நழுவிவிட்டினமாம்'' என்றார் விநாசியர்.

'வாக்குக் கேட்டு வந்த சட்டத்தரணிகள் 'பக்ஸ்' அனுப்புற வேலைகளை விட்டுட்டு இதைக் கவனிச்சிருக்கலாமே'' கேட்டாள் சின்னாச்சி.

''அதுக்கு இப்ப இன்னொரு தேர்தல் எல்லே நடத்த வேணும்'' நெத்தியடி அடித்தான் லோகன்.

"எப்படியோ ஒரு மாதிரி கஷ்டப்பட்டு மரண விசாரணைகளை முடித்து எட்டுப்பேரின் மரணங்களுக்கும் படையினரே காரணம் என்று தீர்ப்பளித்து விட்டார்.

அத்தோட. மிருசுவில் பகுதியில் காணப்பட்டதாகக் கூறப்படும் இளம் பெண் ஒருவரின் புதைகுழி பற்றியும் பணிப்புரை வழங்கியுள்ளாராம்.

இனி வழக்கு எப்படிப் போகுது என்று பார்ப்பம்'' கூறி முடித்தார் விநாசியர்.

தமிழ்ப் பகுதிகளில் நிலவிய மருத்துவர்கள் பற்றாக்குறை தீரும் போல கிடக்கு என்று ஆரம்பித்த டானியல்.

''யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் படிப்பை முடித்து 70 மருத்துவர்கள் வெளிவருகிறார்களாம். 94 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பில் சேர்ந்த இவர்கள், போரினால் படிப்பை முடிக்க 7 ஆண்டுகள் ஆகியிருக்காம்.

இவர்களில் 40 பேர் உள்ளூரிலும், 30 பேர் வெளிமாவட்டங்களிலும் பணியாற்றச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இதனால் தமிழ்ப் பகுதிகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை தீரும் என்று சொல்லுகினம்'' என்று முடித்தான்.

''இப்ப இருக்கிற நிலைமையிலை, இவையை கடவுளுக்குச் சமமா எங்கடை சனம் நினைக்கும், டொக்டர்மாரும் அதை மனசிலை வைச்சு நடந்தால் புண்ணியமாய்ப் போகும்'' என்றாள் சின்னாச்சி.

''தொடக்கத்திலை இருக்கிற வேகம் எல்லா இடத்திலயும் தொடர்ந்தால் நல்லது தான்'' என்ற மாஸ்டர்,

யாழ் மாவட்ட இளைஞர் புனர்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கம் என்று சிறையில் தடுத்து வைக்கப்பட்டு வெளிவந்தவர்களுக்காக சங்கம் ஒன்று போன வருடம் யாழ். கச்சேரியிலை விழாவைச்சு தொடங்கப்பட்டதாம்.

120 இளைஞர்கள் சங்கத்திலை 100ரூபா செலுத்தி உறுப்பினரும் ஆகினார்களாம். அந்த நேரத்திலை இவர்கள் புலிகள் அல்ல என்பதற்கு என்ன ஆதாரம் என்று 'அவை' தரப்பிலை கேள்வி கேட்கப்பட்டதாம்.'

''அவ்வளவுதான், கேள்விக்குத் தகுந்த பதில் கூறி சங்கத்தை நடத்துவதற்குப் பதிலாக மங்களம் பாடாத குறையாய் கூட்டுறவுச்சங்கத்திட்டம் கைவிடப்பட்டதாம்.

இனியாவது அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி சிறையில்



## தேரடி அரட்டை

இருந்தவர்களுக்கு நல்வழி காட்டினால் நல்லது'' என்று கூறி முடித்தார்.

''பிச்சைக்காரனுக்குப் பயந்து அடுப்பு மூட்டாதது போல ஆருக்கோ பயந்து நல்ல திட்டங்களைக் கைவிடுகினம்'' கவலைப்பட்டாள் சின்னாச்சி.

சில திட்டங்களாலை பெரிய பிரச்சினைகள் வருமோ என்று பயப்பட வேண்டியிருக்கு. ஊர்காவற்றுறைத் தொகுதியில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிப் படிப்பை முடித்தவர்களுக்கும், தற்போது படிப்பவர்களுக்கும் அரசியல் ரீதியாக உதவிக்கரம் நீட்டப்படுகுதாம். படிப்பை முடித்தவர்களுக்கு வேலை வாங்கித் தருவதாக உறுதியளிக்கப்பட்டதாம் என்ற விநாசியரை இடைமறித்த மாஸ்டர் ''யார் குத்தியோ அரிசியானால் சரி, அந்தப் பிள்ளைகளுக்கு வேலை வாங்கித்தாறது நல்லது தானே'' என்றார்.

அதில் பிழையில்லை மாஸ்டர். இப்ப படிக்கிறவர்களுக்கும் பகுதி நேர வேலைகள் வழங்குவதாக் கூறப்பட்டதாம். பல்கலைக்கழக விதிப்படி அங்கு படிக்கும் போது வெளியே வேலை செய்யக்கூடாதாம். அதனால் இது எப்படிச் சாத்தியம் என்று மாணவர்கள் குழம்புகிறார்களாம் விநாசியர் விளக்கினார்

"தேர்தலுக்குப் பிறகு வராதவைக்கு மத்தியிலை, இங்கேயிருந்து ஏதோ தங்களால் முடிந்ததை செய்யினம். அதிலை நீங்கள் ஏன் நொட்டை சொல்லுறியள்" கூறுவது சின்னாச்சியா என்று நம்பமுடியாமல் அனைவரும் திகைத்தனர். அதனை அலட்சியப்படுத்திய சின்னாச்சி தொடர்ந்தாள்.

"கூடாததைக் கண்டிக்கிற நாங்கள் நல்லது செய்தா பாராட்டவேணும், மாணவர்களுக்கு நல்லது செய்யப்போய், பல்கலைக்கழகத்துக்குள்ள அரசியல் மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் இன்னும் பாராட்டலாம்.

எந்த மோதல் வருகுதோ, இல்லையோ குடிக்கிற தண்ணியாலை பிரச்சினை வரும்போலை இருக்கு என்ற டானியல் யாழ் மாநகராட்சி பகுதிக்கு குடிதண்ணீர் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலியிலை இருந்துதான் போகுதாம். நிலத்தடி நீரை அதிகமாக எடுப்பதால் அப்பகுதிக் கிணறுகளில் நீர் உவர்ப்பாக மாறுகிறதாம்.

"இந்த நிலையில் மாநகராட்சி எடுக்கும் குடி தண்ணீருக்கு வரி பெற்றுக் கொள்ளலாமா? அதற்குச் சட்டத்தடைகள் உண்டா?'' என்று ஆராயப்பட்டு வருவதாக செய்திகள் பரவியிருக்கு என்றான்.

குடிதண்ணியை வைச்சு மல்லுக்கட்ட நினைக்கிறவைய திருகோணமலையிலை கொண்டுபோய் விடவேணும்'' என்றாள் சின்னாச்சி. தொடர்ந்து அவளே பேசினாள்.

''திருகோணமலையிலை கப்பலுக்குக் காத்திருக்கிற சனங்கள் முந்தியே கஷ்டப்படுதுகள். இப்ப புயலும் அடிச்சபிறகு குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடாம். இதால வயசானவையும், குழந்தைகளும் படுறபாடு சொல்லேலாது. கப்பலும் ஓடாத நிலையிலை சனம் தவிக்குதாம்''.

மணலில் சாய்ந்திருந்த லோகன் சின்னாச்சி கூறியதைக் கேட்டு நிமிர்ந்தான்.

''ஏற்கனவே முகாம்களிலும், இடம் பெயர்ந்து வேறு இடங்களிலும் தங்கியிருந்த எங்களது ஆட்கள் புயலாலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கினம். அரசாங்கம் உதவி செய்தாலும் நாங்களும் எங்கடை கடமையைச் செய்ய வேண்டாமோ. எல்லோருமாச் சேர்ந்து எங்களாலை இயன்றதைச் சேகரித்து புயலால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அனுப்ப முயற்சி எடுக்க வேணும். எங்கடை பக்கம் நானும் டானியலும் இதைச் செய்யப்போறம்'' சொல்லி முடித்தான் லோகன். லோகன் முடிக்க மாஸ்டர் ஆரம்பித்தார்.

''யாழ்ப்பாணத்துக்கு பொருட்களைக் கப்பலில் கொண்டு செல்ல அறவிடப்படும் கட்டணத்தைக் குறைக்கும்படி, கோரிய குடாவுக்கு பொருள்களை ஏற்றுவோர் சங்கம், கட்டணம் குறைக்கப்படும்வரை கப்பலில் பொருள்களை ஏற்றப் போவதில்லை என்று கூறியிருந்தினம்.

இதுவரை குடாவுக்கு பொருள்களை ஏற்றுவதில் ஏகபோக உரிமை கொண்டிருந்த மெர்கண்டைல் சிப்பிங் கொம்பனி கட்டணத்தைக் குறைக்க முன்வரவில்லையாம்.

இந்தக் கொம்பனி தனிக்காட்டு ராஜாவாக வலம்வர யாழ்ப்பாண 'சண்முகக்' கடவுளின் ஒத்துழைப்பு இருந்ததாம்.

அதோட பெருங்கைகளின் பிள்ளைகளுக்கு இந்தக் கொம்பனியில் பங்குகள் இருப்பதும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அதுதான் யுத்தத்தை நிறுத்தக் கனபேர் விரும்பேல்லை. உண்மையை உடைத்தாள் சின்னாச்சி.

ஓம் சின்னாச்சி, யுத்தம் தொடந்தாத்தானே கப்பலில் சாமான் ஏத்துறது நீடிக்கும் என்று ஒத்துக்கொண்ட மாஸ்டர்.

பொருள்களை ஏத்திற வர்த்தகர்களின் போராட்டத்தாலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியாலும் மெர்கண்டைல் சிப்பிங் கொம்பனியின் ஏக போக உரிமை இப்ப ஆட்டம் கண்டிருக்காம். குறைந்த செலவிலை பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கு. சரி மாஸ்டர், மற்றக் கப்பல்களிலும் ஏற்ற உரிமை கிடைச்சிருக்கலாம். ஆனால் பொருள்களை ஏற்றயாதுகாப்பு அமைச்சின் அனுமதி கொழும்பிலை தானே வழங்கப்படுகுது. இதாலை ஒரு கப்பல் நிறுவனத்துக்குச் சாதகமாக, அதன் மூலம் ஏற்றப்படும் பொருள்களுக்கு விரைவாகவும், மற்றவற்றில் ஏற்றினால் வீணான கால தாமதத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். இதை அமைச்சர் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று வர்த்தகர்கள் அபிப்பிராயப் படுகிறார்களாம்.

மாஸ்டருக்குத் துணையாக கதையை முடித்தார் விநாசியர்.

''கடவுளே, இந்த ஆண்டாவது எங்கடை பிரச்சினைகள் தீருமோ? அங்கலாய்த்தபடி கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி. அதே ஏக்கத்துடன் மற்றவர்களும் புறப்பட்டனர்.

-கண்ணன்

## பல்கலை மாணவர் தரும் விளக்கம்

*யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்புப் பற்றிக் கடந்தவாரம் தேரடி அரட்டையில் குறிப்பிடப்பட்டு இருந்தது அல்லவா?*

*''பகிஷ்கரிப்புக்கு எதிரான மாணவன் என்றும் பகிஷ்கரிப்பில் கலந்து கொள்ளாமல் வகுப்புக்குச் சென்றவர் என்றும் தேரடி அரட்டையில் குறிப்பிடப்பட்ட மாணவன் நான்தான்'' என்று சத்தியேந்திரா என்ற மாணவன் 'சுடர் ஒளி'க்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.*

*அந்தக் கடிதத்தில் சத்தியேந்திரா மேலும் தெரிவித்திருப்பதாவது: —*

*நாம் நின்ற இடத்துக்கு விரிவுரையாளர் வந்தபோது வகுப்பு நடத்தக்கூடாது என்று எனது வகுப்பு மாணவர்கள் விரிவுரையாளருடன் வாதாடினர். நான் வகுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வாதாடினேன். தேரடி அரட்டையில் குறிப்பிடப்பட்டது போல் கல்வியில் இருந்த ஆர்வத்தினால் அல்ல. வகுப்பு பகிஷ்கரிப்பு என்ற அநீதிக்குத் துணைபோக விரும்பவில்லை. அதனால் தான் அப்படி வாதாடினேன்.*

*விரிவுரையாளர் வகுப்பு நடத்தவில்லை. வகுப்பு நடத்தக் கூடாது என்று வாதாடிய மாணவர்களுக்கு அவர் புத்திமதி கூறினார்.*

*''உங்கள் பகிஷ்கரிப்புக்கு நான் உடந்தை அல்லன். நீங்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது நியாயமற்றது. புதுமுக மாணவர்களை 'ராக்கிங்'' செய்ய வேண்டாம். அவர்களை அன்போடு அழைத்து வந்து தேநீர் கொடுக்கலாம். நூல்நிலையத்தை அவர்களுக்குக் காட்டலாம். கல்வி பயிற்றுவிக்கலாம். அதைவிட்டுவிட்டு அவர்களை அடித்துத் துன்புறுத்துகிறீர்களே. இது சரியா? இது நீதியா? இப்படி விரிவுரையாளர் கேட்டார்.*

*விரிவுரையாளர் பற்றித் தேரடி அரட்டையில் இடம் பெற்றிருக்கும் குறிப்புக்கள் ஆசிரியர் சமூகத்தையே கேலி பண்ணுவது போல் அமைந்துவிட்டன.*

*இவ்வாறு சத்தியேந்திரா தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அடையாள அட்டை போய் இப்போது குடும்பப் படங்கள்!

## இந்தத் திட்டத்துக்கும் மலையகத்தில் கடும் எதிர்ப்பு

மலையகத்தவர்களுக்கு விசேஷ அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் தற்காலிகமாகப் பின் போடப்பட்டிருக்கிறது. எனினும் அதனை மாற்று வடிவத்தில் செயல்படுத்த முனைகிறார் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம். ஜயரத்ன.

மலையகத்தமிழர்களுக்கு விசேஷ அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் ஜயரத்ன அழுத்தம் கொடுத்து வந்தார்.

மலையக அரசியல் கட்சிகளிடமிருந்தும் தொழிற்சங்கங்களிடமிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எனவே இது அரசாங்கத்தின் திட்டம் அல்ல. அமைச்சரின் திட்டம் எனக்கூறி விசேஷ அடையாள அட்டை வழங்குவதை அரசாங்கம் பின்போட்டது.

இதனால் கொதிப்படைந்த அமைச்சர் தனது பிரதேசத்தில் அதாவது கம்பளை, புசல்லாவ, கலஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் மாற்றுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறார்.

அதாவது தோட்டங்களில் வசிக்கும் (குடும்பத்தலைவன்-தலைவி, பிள்ளைகள் அடங்கலாக) அனைவரும் குடும்பப் படங்கள் எடுக்க வேண்டும்.

ஒரு படப் பிரதி தோட்ட நிர்வாகத்திடமும், மற்றுமொரு பிரதி பொலிஸாரிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மூன்றாவது பிரதி தத்தமது வீடுகளில் கண்ணாடிச் சட்டம் போட்டு மாட்டி வைக்கப்பட வேண்டும்." எனக் கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது?

பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை எனக் கூறப்படுகிறது. என்றாலும் அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்குத் தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. தோட்ட நிர்வாகங்களோ தமக்குள்ள பணிப்புரைக்கு இணங்கத் திட்டத்தை நிறைவேற்றுவதில் விடாப்பிடியாக நிற்கின்றன. புகைப்படம் பிடிப்பதற்கான கட்டணமும் தொழிலாளர்களின் சம்பளத்திலேயே அறவிடப்படுகிறது.



எஸ். பாலசண்முகம்

கம்பளை பொலிஸ் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் அரசியல் பிரிவு அமைப்பாளருமான பாலசண்முகம் இவ்விடயம் தொடர்பாகப் பின்வருமாறு கூறினார்.

"கம்பளை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட லெவலன், புப்புரஸ்ஸ, அத்திசேனை, சங்குவாரி முதலான பல தோட்டங்களில் குடும்பம் குடும்பமாகப் படங்கள் பிடிக்கப்படுகின்றன.

புகைப்படம் பிடிக்கும் நடவடிக்கைக்குத் தோட்ட நிர்வாகங்கள் பெரிதும் ஒத்தாசை வழங்குகின்றன. தோட்டங்களில் நலன்புரி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுபவர்கள் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தரகர்களாகச் செயல்படுகின்றனர். இவர்களை விட்டு வேறு இடங்களில் படங்கள் பிடிக்கப்பட்டால் அந்தப் படங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. காரணம் தரகர் கமிஷன் கிடைக்காமல் போய்விடும் என்பதால்.

குடும்பம் குடும்பமாகப் புகைப்படம் பிடிப்பதையோ தனிப்பட்ட அடையாள அட்டை வழங்குவதையோ நாம் வன்மையாக எதிர்க்கிறோம். இதற்கு ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

**மலையகக் கண்ணோட்டம்**

அண்மையில் லெவலன் குரூப் அத்திசேனை என்ற டிவிசனில் எங்கள் கட்சியின் அமைப்பாளரும் கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளருமான எஸ்.கிட்ணன் தலைமையில் இப்படிப் புகைப்படம் பிடிப்பதை ஆட்சேபித்து மறியல் செய்தோம்.

அமைப்பாளர் கிட்ணன் பொது அலுவல் நடைபெறுவதற்கு இடையூறு விளைவித்ததாகவும் நலன்புரி உத்தியோகத்தரைத் தாக்கியதாகவும் குற்றம் சுமத்தி அவர் மூன்று நாட்கள் கம்பளை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டார். இறுதியில் எந்த விதமான விசாரணைகளும் இன்றி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நடவடிக்கை மலையகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸார் வந்து பார்க்கும் போது குடும்பப் படங்களில் இருப்பவர்களுள் எவராவது வீட்டில் இல்லாவிட்டால் பெற்றோர் கடுமையாக விசாரிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

அதே வேளை படம் பிடிக்கும் சமயத்தில் தொழில் நிமித்தமாக வெளியிடங்களில் இருந்த பிள்ளைகள் வீட்டிற்கு வந்திருந்தால் இவர்களும் விசாரணைக்கு என பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்தப் படம் பிடிக்கும் திட்டத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்திட்டம் கைவிடப்படாவிட்டால் மலையகம் எங்கும் விரிவான போராட்டம் ஒன்று நடத்தத் திட்டமிட்டுள்ளோம்." என பால சண்முகம் சுடர் ஒளிக்குத் தெரிவித்தார்.

— இரா. புத்திரசிகாமணி

# ஆவேசப் பேச்சுக்கள் ஆனால் ஆவது ஒன்றுமில்லை

## 18 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் மாறுபட்டகருத்துகள்

மலையகத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் கூட்டங்களில் ஆவேசமாகப் பேசுவதில் விண்ணர்கள். ஆனால் அந்தப் பேச்சுக்களால் ஆவது ஒன்றுமில்லை.

சமீபத்தில் "இன்றைய மலையகமும் கூட்டமைப்பின் அவசியமும்" என்ற தலைப்பில் 12 மலையகத் தொழிற்சங்கங்களையும் 6 அரசசார்பற்ற நிறுவனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கூடிப் பேசினார்கள்.

ஆவேசப் பேச்சுகள், கனல்கக்கும் பேச்சுகள், கண்டனப் பேச்சுகள், கிண்டல் பேச்சுகள், கேலிப்பேச்சுகள் எல்லாம் நடந்தன.

ஒரு பிரதிநிதி பேசும் போது கூட்டத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது. பலர் கொதித்து எழுந்து குறுக்கீடு செய்தார்கள். நிலைமை சரியில்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் அந்தப் பேச்சாளர் கூட்டம் நடந்த இடத்திலிருந்து நழுவிச் சென்று விட்டார்.

சில பிரதிநிதிகள் மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூட்டமைப்பு ஒன்று வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

வேறு சிலர் மலையகத் தலைவர்கள் அரசாங்கம் அமைக்கும் பலம்வாய்ந்த பெரிய கட்சிகளில் இருக்க வேண்டும். ஆயினும் மலையக மக்களுக்கு முக்கிய பிரச்சினைகள் எழும்போது அவற்றைத் தீர்த்து வைக்க ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பலருக்குத் தலைமைப் பதவி ஆசை. சொந்தச் சங்கங்களை வளர்த்து எடுப்பதில் ஆசை. அவர்களுக்கு மலையக மக்கள் நலனில் போதிய அக்கறை இல்லை என்ற கண்டனக் குரல்களும் கூட்டத்தில் ஒலித்தன.

கூட்டம் பேராதனை வீதி, தனசிறி ஷொப்பிங் கொம்பிளக்ஸில், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை, தொழிலாளர் முன்னணியின் பி.ஏ.காதர், ஐக்கிய சேமநல அமைப்பின் எஸ். முருகையா, அஸிஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆர். தர்மலிங்கம் ஆகியோரின் வழிநடத்தலில் நடந்தது.

முன்னாள் எம்.பிக்களான எஸ்.இராஜரட்ணம், வி.புத்திரசிகாமணி மற்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் எம்.பியுமான பெ சந்திரசேகரன் உட்பட (இ.தொ.கா நீங்கலாக) 14 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் சில புத்திஜீவிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் முருகையா கலந்துரையாடல் நடத்த வேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்.

**பீ.ஏ. காதர்** பேசுகையில் வடக்கில் யுத்தம் ஒரு புறம். மலையகத்தில் ஏற்பட்ட பிந்துனுவெவ, தலவாக்கலை சம்பவங்கள் ஏற்படுத்திய தாக்கம் மறுபுறம். பூனைக்கு மணி கட்டுவது யார்? இந்த மனப்பாங்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. இதற்கிடையில் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற ஆசையும் அவசரத் தேவையும் ஏற்பட்டுள்ளன என்றார்.

**டி. அய்யாத்துரை** பேசுகையில், 50 ஆண்டுகளாக மலையக மக்களுக்கு அடிப்படை உரிமைகள் கிடைக்கவில்லை. தொழிலாளர்கள் உரிய வழியில் இட்டுச் செல்லப்படவுமில்லை. பிந்துனுவெவ சம்பவத்திற்கு ஒட்டுமொத்தமான எதிர்ப்பு தெரிவிக்கப்படவும் இல்லை.

நுவரெலியாவில் மக்கள் இன்னும் அச்சத்தோடுதான் வாழ்கின்றனர் என்று கவலை தெரிவித்தார்.

**எஸ். இராஜரட்ணம்** பேசுகையில் அரசியல் ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டு முன்னுக்கு வந்தவர்கள் எமது இந்தக் கலந்துரையாடல் தொடர்பான விடயத்தில் எதிர்ப்புச் சக்தியாக இயங்கினால் எமது நோக்கம் நிறைவேறுமா என்று கேள்வி எழுப்பினார்.

சமூக அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த **அந்தனிஜீவா** பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

"மலையகத்தலைமையில் இப்பொழுது சந்தேகம் ஏற்படத் தொடங்கி விட்டது. நடேசன்கூட மறைக்கப்பட்டு விட்டார். திட்டமிட்டு அவரை ஒதுக்கிவிட்டனர். இங்கு இருப்பவர்களில் சிலர் சந்தர்ப்பவாதிகள். அரசியல் லாபத்திற்காக எதையும் செய்ய அவர்கள் பின்னிற்பதில்லை.

ஐ.தே.கட்சியில் இருந்த புத்திரசிகாமணி இன்று ஆறுமுகத்தோடு இணைந்து விட்டார். தேர்தல் காலத்திலும் இப்படியான ஞானோதயம் ஏற்படுவது கேலிக்குரியதாகும்." இப்படி அவர் கூறினார்.

அப்போது முருகையா, காதர், எஸ்.இராமநாதன் (ல.தோ.தொ யூனியன்) முதலானோர் வெகுண்டு எழுந்தனர்.

**காதர் :** இங்கு கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். நீங்கள் இப்படிப் பேசினால் உங்கள் உரையை (அந்தனிஜீவாவுக்கு) நிறுத்த வேண்டி ஏற்படும். எவரையும் சண்டை போட இங்கு அனுமதிக்க முடியாது.

**எஸ்.ராமநாதன்:** மலையகத்தில் தொழிற்சங்கங்கள் மலிந்து விட்டன. பிந்துனுவெவ, தலவாக்கலை சம்பவங்கள் தொடர்பாகத் தொழிற் சங்கங்கள் பல இருந்தும் ஒன்று கூடிப் பேசவே இல்லையே.

**முருகையா:** கருத்து வேறுபாடுகளைச் சமூக அறிவுக்குப் பயன்படுத்த இயலாது. இது சண்டை போடும் இடமும் அல்ல.

**இராமநாதன்:** தோல்வியில் முடிந்த அண்மைக்கால தொழிலாளர் போராட்டம் தொண்டமானோடு போகட்டும். பிந்துனுவெவ சம்பவம் தொடர்பாக தொழிற்சங்கங்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தனவே தவிர ஆக்க பூர்வமான பணியில் இறங்கவில்லை. இந்தச்சம்பவத்தின் பின்னணியில் நின்றவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

**வீ.புத்திரசிகாமணி:** இலங்கையில் ஆட்சி நடத்தும் வல்லமையுடைய இரு பெரும் கட்சிகள் உண்டு. இவற்றோடு இணைந்திருப்பதன் மூலமே மலையகத்தில் சிவில் நிருவாக முறையைச் சீராக்கலாம்.

பொதுப் பிரச்சினைத் தீர்வுக்கு நாம் ஒன்றுபடுவோம். தேர்தலுக்காக ஒன்று படுவதைவிட தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக ஒன்று படலாம்.

**பிதா-மரியாந்தனி:** அரசியல் கட்சிகள் ஒரே தலைமைத்துவத்தை உருவாக்க முடியாது. நாம் சிறுபான்மையினர். பல பிரச்சினைகள் எமக்கு உண்டு. அரசியல் வாதிகள் பல கட்சிகளில் இருப்பது நல்லது.

**எஸ்.சந்திரசேகரன் எம்.பி:** இந்த முயற்சி காலத்தின் தேவை. பிந்துனுவெவ சம்பவத்தை விசாரிக்க கமிஷன் வேண்டும். 80 பேர் அதில் கைதாகினர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் அவர்கள் தடுத்து வைப்பு. வடக்கு — கிழக்கு பகுதிகள் போன்று மலையகத்திலும் காரியங்கள் நடைபெறும் நிலைமை தோன்றியுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழர் ஒருவருக்கு நஷ்டஈடு ரூபா.50,000. பெரும்பான்மையினத்தவருக்கு மூன்றரை இலட்சம் ரூபா. இதில் என்ன நியாயம் இருக்கிறது?

இராணுவம் விளைவித்த அனர்த்தங்கள் வெளிச்சத்துக்கு வரவில்லை. 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மரண விசாரணையே கிடையாது.

மலையக மக்களின் பிரச்சினையைத் தீர்க்க யார் தலைமை தாங்குவது என்பது முக்கியம் அல்ல. அநீதியை எதிர்க்க வேண்டும். அதுதான் முக்கியம்.

**ஆர்.தங்கவேல்:** இராணுவம் மலையகத்தில் காலூன்றியதால் தமிழர் பலம் குறைந்துவிடும். எல்லா தொழிற்சங்கங்களும் இணைந்து ஒருமித்த குரலை எழுப்புவோம்.

தீர்மானங்கள் பின்னர் இன்னொரு தினத்தில் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

— கண்டியூர்க்காவலன்

# மீனாவுடன் நெருக்கம்: சரத்குமார் விளக்குகிறார்



**கா**ல்ஷீட் கொடுத்தோம், நடித்தோம், காசு கிடைத்து விட்டது டாட்டா என்று சொல்லும் ரகமல்ல நடிகர் சரத்குமார். சராசரி சினிமாக்காரராகத் தன்னைக்கருதாது தனக்கு சமூகப்பொறுப்புண்டு. நாட்டு நலனில் அக்கறை உண்டு என்று கூறுவதுடன் அதை அவ்வப்போது செயற்படுத்தியும் வருபவர்.

சரத் ஒரு முன்னாள் மிஸ்டர் மெட்ராஸ் (சென்னை-ஆணழகன்) என்பது நம்மில் பலர் அறியாத ஒன்று.

சரத்- மீனா ஜோடியாக நடித்த 'ரிஷி' முடிவடைந்து விட்டது. அடுத்து அவர் நடிக்கும் படம் 'புகழ்'.

'சூரியன்' படம் மூலம் வெற்றிக்கொடி நாட்டிய பவித்ரன்-சரத் கூட்டணி மீண்டும் இணைகின்றது.இதன் படப்பிடிப்பு கேரளா வயல் நாட்டில் உள்ள மானந்த வாடியில் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டோம்.

நாங்கள் சென்றபோது-


உருக்கமான காட்சியொன்றைப்படமாக்கத் தயாராக இருந்தனர். சரத்குமார் தலையில் முண்டாசு கட்டி கையில் பெரிய கயிறுடன் காணப்பட்டார். அவருடன் இரண்டு உதவியாளர்கள் நின்றனர். டைரக்டர் பவித்ரன் ஸ்டார்ட் - அக்ஷன் சொன்னதும் -

பள்ளத்திலிருந்த 2 யானைகளை கயிற்றால் கட்டி மிகுந்த போராட்டத்தின் மத்தியில் வெளியே கொண்டு வருகிறார்கள். இந்தக் காட்சியில் நடித்து விட்டு வந்த சரத்குமாரை எமது பேட்டிக்காக ஓரங்கட்டினோம்.

பேட்டி என்றதும் நான் ரெடி நீங்கள் ரெடியா? என்று அவர் சன் டி.வியில் நடத்தும் கோடீஸ்வரன் நிகழ்ச்சி பாணியில் கேட்டார்.

நாங்கள் ரெடி என்றதும் பேசத் தொடங்கினார்.

"ரொம்ப நாளைக்குப்பிறகு ஒரு வித்தியாசமான அதுவும் நல்ல கதையம்சத்தோடு கூடிய படத்தை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். 'புகழ்' படத்தில் எனக்கு ஜோடியாக பூனம் செங்கர் நடிக்கின்றார். வித்தியாசமான வலுவுள்ள பாத்திரத்தில் பாட்டியாக மனோரமா நடித்து அசத்தியிருக்கிறாங்க.நிச்சயம் இந்தப்படம் வெற்றி பெறும்"



**"அண்மைக்காலத்தில் வெளி வந்த 'மாயி' யில் எதிர்பார்த்த சரத்குமாரைக் காணவில்லையே"**

" இரவும் பகலும் மாறி மாறி வருவதுதான் இயற்கை. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருவது தான் வாழ்க்கை. எனது அண்மைய வாழ்வில் இரண்டும் கலந்து தான் வந்திருக்கின்றன. கடந்த ஆண்டில் சில ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டது உண்மை.

என்னைப் பொறுத்த வரைக்கும் எப்போதுமே என்னைச் சுற்றி ஒரு பிரச்சினை இருக்கும் . அதை எப்படிச் சமாளித்து மேலே வருகிறேன் என்பதில் தான் எனக்கு சுவாரஸ்யமே இருக்கிறது. போராட்டமில்லா விட்டால் வாழ்க்கையே போரடித்து விடும்.

எனது 'ஒருவன்' படத்தில் வித்தியாசமான 'ஹீரோவாக நடித்திருக்கின்றேன். ஆனால் அதை மக்கள் ஏற்கவில்லை. அக்ஷன் ஹீரோ கண்களைக்கசக்கலாமா? என்று தியேட்டரிலேயே கமென்ட்ஸ் எழுந்தது. விளைவு எதிர் மறையாகி விட்டது. ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைத்துப் படத்தை எடுக்கின்றோம் அவர்கள் எதிர் பார்க்கும் அம்சங்கள் இல்லா விட்டால் அவர்கள் ஏற்க மறுத்து விடுகிறார்கள்"

**"இதற்கெல்லாம் காரணம் நீங்கள் கதை கேட்பதில்லை என்று ஒரு செய்தி அடிபடுகின்றதே?"**

"வேறும் சில பத்திரிகை நண்பர்கள் இதே கேள்வியை என்னிடம் கேட்டார்கள்.கதையை அக்கு வேறு ஆணி வேறாகக் கேட்டாலும், அதை சுவைபடஎடுக்க வேண்டியது அவசியம். எடுக்க முடிந்தாலும் ஆர்வம் இருந்தாலும் தயாரிப்பாளர்களின் பட்ஜெட் இடம் தர வேண்டும்"

**" 'மாயி' படத்தின் தோல்விக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?"**

"அந்தப்படத்துக்கு சாதி சாயம் பூசி வேண்டுமென்றே பெரிய எதிர்பார்ப்பைக் கிளப்பி விட்டு விட்டார்கள். படம் பார்க்கும்போது ரசிகர்கள் கேள்விப்பட்ட எதுவும் படத்தில் இல்லாததுதான் காரணம்"

**"'புகழ்'படத்தினை 'சூரியன்', 'ஐ லவ் இந்தியா'படங்களை இயக்கிய பவித்ரன் இயக்குகின்றார். உங்கள் வெற்றிக் கூட்டணியில் இருந்து படங்கள் வெளிவரத் தாமதமானதற்கு உங்கள் இருவருக்கிடை யேயும் இருந்த தகராறுதான் காரணமெனக் கூறப்பட்டதே. இப்போது எப்படி?"**

"நாங்கள் எப்போதுமே நல்ல நண்பர்கள் அவ்வளவுதான் கூற முடியும்"

**"சமீப காலமாக சன் டி.வியில் கோடீஸ்வரன் நிகழ்ச்சியினை நடத்தி வருகிறீர்கள். இது நடிப்புத்தொழிலைப் பாதிக்காதா? இரண்டு தோணியில் கால் வைத்துப் பயணிக்க முடியுமா?"**

"திட்டமிட்டுச் செயற்படுவதனால் பிரச்சினையில்லை"

**"நீங்கள் ஒரு முன்னாள் "மிஸ்டர் மெட்ராஸ்" என்ற ரீதியில் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு ஏதாவது உதவிகள் செய்திருக்கிறீர்களா?"**

"பொதுவாக ஆணழகன் போட்டிகளுக்கு அழகிப்போட்டிகள் போல் வரவேற்பு இருப்பதில்லை. விளம்பரமும் கிடைப்பதில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரு ஆணழகன் போட்டியை ஒழுங்கு செய்து நடத்தி பரிசில்களும் வழங்கினோம்"

**"தீயவற்றை எதிர்க்கும் துடிப்புள்ள இளைஞனாகப் பல படங்களில் நடித்திருக்கிறீர்கள். இன்றைய இளைஞர் களுக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன?"**

"திறமைசாலிக்குத்தான் எதிர்காலம். அதனால் உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் இந்த வயதில் எவ்வளவு கல்வி,கலைகளைக் கற்க முடியுமோ அவ்வளவையும் கற்றுத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். எதிர்காலம் இளைஞர்கள் கையில்! "

**" 'மாயி' படத்தில் நடிக்கும் போது நடிகை மீனாவுடன் கிசுகிசுக்கப்பட்டீர்கள். பாடல் காட்சியொன்றில் மிக நெருக்கமாக நடித்துமிருக்கின்றீர்கள். ஆனால் இப்போது மீண்டும் 'ரிஷி'படத்தில் மீனாவுடன் நடித்திருக்கின்றீர்கள். இது அந்த கிசு கிசுவை உறுதிப்படுத்தாதா?"**

"மீனா தமிழ் சினிமா இன்டஸ்ரியில் நல்ல பெயரெடுத்த நடிகை. அவருடன் முன்பே பல படங்களில் நான் நடித்திருக்கிறேன். அதுபோலத் தான் இதுவும். பாடல் காட்சிகள் எங்கள் விருப்பத்தின்படி எடுக்கப்படுவது இல்லை. டைரக்டர்களே அதற்குப்பொறுப்பு. மக்கள் ஜனரஞ்சகத்துடன் சேர்ந்த கதையுள்ள படங்களையே விரும்புகிறார்கள்.அதில் கவர்ச்சியும் ஒன்று"

**" 'புகழ்' படத்தில் யானைகளுடன் நடிக்கிறீர்கள் இப்படத்தில் உங்களுக்கு யானைப்பாகன் வேடமா?"**

"இல்லை. தந்தை, மகன் என்ற இரட்டை வேடங்களில் நடிக்கின்றேன். சந்தர்ப்பவசத்தால் காட்டில் வந்து தங்கும் சூழ்நிலை ஏற்படுகின்றது"

**"இப்போது நடித்து வரும் வேறு படங்கள்"**

"'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'தம்பி யுடையான்' போன்ற படங்கள்.

ஷாம்

## நடிகையின் "காதலிசம்"



மீனா

சிவகாமியில் நடித்து வரும் மீனா தான் சொந்தமாகத் தயாரிக்கும் 'காதலிசம்' அல்பத்தில் கவனம் செலுத்தி வருகின்றார்.

அல்பத்தை வெளியிட மும்பை முதலீட்டாளர்கள் சிலர் மீனாவுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

## ரம்யாவின் ஆசை

'படையப்பா'வில் நடித்தபின் எங்கு பார்த்தாலும் நீலாம்பரி புராணம் தான். அதில் நீலாம்பரியாக நடித்த ரம்யா கிருஷ்ணன் 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி', 'நாகதேவதை', 'அத்தை மகன்', 'வாஞ்சிநாதன்' போன்ற படங்களில் நடித்து வருகிறார்.விரைவில் சொந்தப்படம் எடுக்க ஆசை. தீவிர ஆலோசனையில் இறங்கியுள்ளார் ரம்யா



ரம்யா

✦பிரகாஷ்ராஜ் தான் மூன்று வேடங்களில் நடிக்கும் சொந்தப்படம் ஒன்றை ஜனவரியில் எடுக்கப்போகின்றார்.

✦அபிதாவுடன் ஒரு படத்தில் நடித்துவரும் கராத்தே வீரர் இசாக் ஹூசைனி பிரைம் ஸ்டார் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ளப் போகின்றார்.

✦'பத்ரி'படத்தில் நடித்து வரும் விஜய் அடுத்து சூப்பர் குட்பிலிமிஸினருக்கும் லட்சுமி மூவி மேக்கர்ஸினருக்கும் கால்ஷீட் கொடுத்திருக்கிறார்.

# திரை மறைவில்


பிரபு

பெரிய பட்ஜெட் படங்களில் நடித்துவந்தவர் குண்டான வாரிசு நடிகர். இப்போது சிறிய பட்ஜெட் படங்களில் நடித்து வருகிறார். இவர் சமீபத்தில் மிகவும் பிரபலமான 'கட்டிப்புடிடா கட்டிப்புடிடா' என்ற பாடலுக்கு ஆடிய மும்பைவரவின் நடனத்தைப்பார்த்து குஷியாகி விட்டாராம்.

உடனே தான் நடிக்கும் 'பெரிய பண்ணை' படத்தில் ஒரு கரெக்டரை உருவாக்கச்சொல்லி அந்த நடிகையின் நட்பை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

****

'விழிக்குள் விழியாக' படத்தின் ப்ரிவியூ ஷோவின்போது காமெடி நடிகரான வைகைப்புயலும் வந்திருந்தார். விழாவில் படத்தில் நடித்த, நடிக்காத பல சினிமா நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர். விழாவுக்கு வந்திருந்த 'தேவ' நடிகையுடன் கை குலுக்குவதற்காக ஹலோ என்று கைநீட்டியவாறு முன்னேறினாராம் வைகைப்புயல். மேடம் நோ சொல்லி நகர்ந்திருக்கின்றார். இதை போதையிலிருந்த வைகைப்புயல் எதிர் பார்க்காததால் கால்தடுக்கி அப்படியே படிக்கட்டுக்களில் உருண்டாராம்.

****

'என்னம்மா கண்ணு' படத்தில் இடம்பெற்ற 'நான் ஒரு பொம்பள ரஜினி' என்ற பாடலில் வெளுத்துக்கட்டிய போனஸான கவர்ச்சி நடிகையின் காட்டில் அடை மழை. புதிய படமொன்றில் கதாநாயகியாக நடிக்கும் அதிஷ்டம் கிடைத்திருக்கிறது. இதே சமயத்தில் இவர் முக்கிய பாத்திரத்தில் நடித்த 'பருவ மழை' என்ற படமும் வெளிவந்திருக்கிறது. ஆனாலும் அம்மணி சந்தோஷத்தில் இல்லை.

ஏன் தெரியுமா? அம்மணி காதல் தோல்வியில் துவண்டு கொண்டிருக்கிறாராம். தற்கொலை ஸ்டேஜ் வரை சென்று ஏகப்பட்ட தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாராம் நெருங்கியவர்கள் காப்பாற்றி ஹொஸ்பிட்டலில் சேர்த்திருக்கிறார்கள். அம்மணியின் மனதை மாற்ற மலையாள மாந்திரீகரின் உதவியை நாடியிருக்கின்றார்களாம்.

****

ரெயின்போ படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போது தன்னுடன் நடித்த புதுமுக நடிகையிடம் ஏராளமான வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றாராம் மகாபாரதத்தில் வில் வித்தையில் சிறந்தவரின் பெயர் கொண்ட நடிகர்.

படம் வெளியாகியதும் நிறையப் படங்களில் நடிக்கலாம் என்று கலர் கலராகக் கனவு கண்டு கொண்டிருந்தார் நடிகை. பல நாட்களாகியும் வாய்ப்பு ஒன்றும் வரவில்லையாம். (நடிகருக்கே தாளம் போட்டு, அவர் சொந்தப்படம் எடுக்கும் முயற்சிக்குத்தாவி விட்டார்). அம்மணிக்கு விஷயம் புரிய ஆரம்பித்ததும் சுயமாக வாய்ப்புத்தேடும் நடவடிக்கையில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார். அம்மணி கைவசம் இப்போது மூன்று படங்கள் இருக்கின்றன.


அபிராமி

# முக்கோணக் காதல்

முக்கோணக் காதல் கதையாக தங்கை பாசத்துடன் உருவாகிவரும் படம் 'சொன்னால் தான் காதலா'. இதைத் தன் வழக்கமான பாணியில் டி.ராஜேந்தர் உருவாக்கி வருகின்றார்.

எகிப்து நாட்டு இளவரசி உடையில் ரோஜா கம்பீரமாக அரண்மனையில் அமர்ந்திருக்க அங்கே முரளி ஒரு கைதியாக பெண்களால் இழுத்து வரப்படுகின்றார். அவர் மீது காதல் கொண்டு ரோஜா பாடுவது போன்ற காட்சியொன்று அண்மையில் படமாக்கப் பட்டது. டி.ராஜேந்தர் ஒளிப்பதிவு செய்தார்.


ரோஜா

# முகம் சிவந்தார் சிம்ரன்

**ஜோதிகா தானே இப்போது நம்பர் வன்! அவர் வரவால் உங்களுக்கு வாய்ப்புக் குறைந்து விட்டதே? என்று சிம்ரனிடம் கேட்டபோது-**

ஏதோ ஒரு நடிகை நடித்து ஒரு படம் ஓடி விட்டால் உடனே நம்பர் வன் என்று எழுதி முன்னணியில் இருக்கும் மற்ற நடிகைகளின் மார்க்கெட் அவுட் என்று நினைத்து விடுவதா?

எனக்குப் போட்டி என்று யாருமே கிடையாது. என்னுடைய கதிரையில் நான் மட்டும் தான் அமர முடியும். இப்படித் தேவையில்லாமல் என்னை ஜோதிகாவுடன் ஒப்பிட்டு வம்புக்கு இழுக்காதீர்கள் என்று முகம் சிவக்கக்கூறுகின்றார்.


சிம்ரன்

# இனி இவர்கள்..!

* 'வாஞ்சி நாதன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் புரட்சிக்கலைஞர் விஜயகாந்த் அடுத்து நடிக்கப்போகும் படம் 'நரசிம்மா'.
* 'நந்தா' படத்தின் நாயகன் சூர்யாவுக்கு மொட்டை போடுகின்றார்கள். இதன் நாயகி 'லைலா'.
* 'ஆனந்தம்' படத்தில் தேவயானி, ரம்பாவுடன் ஸ்நேகா, அபிராமியும் சேர்க்கப் பட்டுள்ளனர்.
* அஜித்தின் 'சிட்டிசன்' அவரது பிறந்தநாளான மே 1ஆம் தேதி வெளியாகும் விதத்தில் தயாராகின்றது.
* ரஜினி தனது அடுத்த படத்திற்கு 'தூயவன்' என்று பெயர் வைப்பார் என்கிறது கோடம்பாக்கம். நாயகியாக ஜோதிகாவுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாமாம்.
* 'உள்ளம் கொள்ளை போகுதே' படத்தில் கெஸ்ட் ரோலில் நடிக்கப்போகின்றார் கார்த்திக்.

# ரம்பாவின் கவர்ச்சியோ கவர்ச்சி



இயக்குனர் சுந்தர்.சியிடம் உதவியாளராக இருந்தவர் சாய்சுரேஷ். குருவின்பாணியிலேயே சிஷ்யரும் செயல்பட்டு வருகின்றார்.

இப்போது சத்யராஜ்—கௌசல்யா—ரம்பாவை வைத்து 'குங்குமப்பொட்டுக் கவுண்டர்' படத்தை எடுத்து வருகின்றார். 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தைப்போலவே இதுவும் ஒரு ஜாலியான காதல் கதை. அதில் கவர்ச்சி காட்டியது போலவே இதிலும் நீங்கள் தாராளமாக ஒத்துழைக்க வேண்டும். இந்தப்படமும் உங்களுக்குத் திருப்பு முனையாக அமையும் என்று சொல்லியிருக்கின்றார். பிறகென்ன ரம்பா செம்மையாக ஒத்துழைத்திருக்கின்றாராம்.

# மாதவன்-திவ்யா மோதல்

**இளம் பெண்களின் இதயத்துடிப்பை லேட்டஸ்ட்டாக அதிர வைத்திருக்கும் இளம் நடிகர் மாதவன், கேரளத்துக்கன்னி திவ்யா உன்னியுடன் நடிக்க மறுத்திருக்கின்றார்.**

**ஒப்பந்தமாகும்போது கதாநாயகி யார் என்று விசாரிக்கும் மாதவன் தனது குட்டி வீடியோ கமெராவுடன் குறிப்பிட்ட கதாநாயகியின் வீட்டுக்குச்சென்று அந்த நடிகையை வெவ்வேறு கோணத்தில் படமாக்குவாராம். பின்னர் போட்டுப்பார்த்துப் பிடித்திருந்தால் தான் ஓ.கே. சொல்வாராம். இவரது வீடியோ பார்வையிலிருந்து தான் திவ்யா உன்னி ஒதுக்கப்பட்டிருக்கின்றார்.**


திவ்யா உன்னி


மாதவன்

# நல்ல காரியம்

—நயீமா சித்திக்

பாரூக் ஹாஜியார் வசதி மிகுந்தவர். பிரபல்யமானவர். நகரில் இரண்டு கடைகள்.... பக்கத்து ஊரில் இரண்டு இறைச்சிக்கடைகள், பதுளை—கொழும்பு ஓடும் குளிரூட்டப்பட்ட இரண்டு பஸ்கள்.... இப்படி அவரது வசதிகள் வளர்ந்து கொண்டே போயின.

இரண்டு மூன்று வருடங்களாக நோன்பு காலத்தில் அவர் பிரபல்யம் அடைவது பெருகிக் கொண்டே வருகிறது. அவரது வீட்டிற்கு ஹதியா, ஸகாத்து எடுக்கவரும் மக்களின் வரிசை நீளமாக அவரது மனமகிழ்ச்சியும் அதிகரித்துக் கொண்டே போனது.

10 ரூபா, 20 ரூபா தாள்களாக அவர் வீட்டில் கொடுக்கப்படுவதுபற்றிப் பலரும் பிரஸ்தாபிக்கத் தொடங்க, பாரூக் ஹாஜியாரின் பெருமிதமும் அதிகரிக்கலாயிற்று.

சும்மா சொல்லக்கூடாது.... எவரையும் ஏசிவிரட்டாமல் அவரது கட்டளைப்படி அவரது மனைவியும் பிள்ளைகளும் கொடுத்துக்கொண்டே இருந்தனர்.

இது இம்முறை நோன்பிலே நல்லமுறையில் நடக்க வேண்டும் என்பதில் ஹாஜியார் மிகவும் அக்கறை காட்டினார்.

இஸ்லாமிய இளைஞர் மன்றத்தினர் அஸருக்குப் பின் இரண்டாம் நோன்பில் ஒன்று கூடினர்.

"பாரூக் ஹாஜியாரிடம் நேரிடையாகப்போய் பேசிப் பார்ப்போம்" என்ற முடிவோடு கலைந்த அவர்கள், தராவீஹ் தொழுகைக்குப்பின்னர் அவரது வீட்டையடைந்தார்கள்.

"வாங்க.... வாங்க.... என்னா எல்லோருமா இந்தப் பக்கமா வர நெனைச்சீங்க...." என்று அவர்களை வரவேற்றார்.

சுடச்சுட சமூஸா பிஸ்கட், மணக்கும் தேனீர் எல்லாம் பரிமாறப்பட்டன.

"நாங்க எங்கடை சங்கத்துட சார்புல ஒங்களிடம் ஒன்னு கேட்குறோம். நீங்க வருஷா வருஷம் நோன்புல நெறைய ஒதவி செய்யிறீங்க.... இதனால நாங்க எல்லாரும் சந்தோசப்படுறம்..."

" அல்லாட கட்டளை நாம செய்ய வேணாமா.... இதெல்லாம் பெரிசாக்கக்கூடாது.... இது நம்மட கடமையல்லவா? ஹாஜியார் புளகாங்கிதத்துடன் சொன்னார்.

"உண்மைதான் ஹாஜியார்.... ஆனா.... நீங்க கொடுக்கிற பணத்த நல்ல முறையில இந்த றம்ழானில நீங்க கொடுக்கனும்னு கேட்டுக் கொள்ளத்தான் நாங்க வந்தியிக்கோம்...."

"இப்ப மட்டும் என்ன.... நான் ஹறா மாவா சம்பாதிச்சிக் கொடுக்கேன்...." தென்றலாய் இருந்த ஹாஜியார் புயலாய் மாறத் தொடங்குவாரென்று இளைஞர்கள் எதிர்பார்க்கவேயில்லை. சற்று அதிர்ந்தும் விட்டனர்....

" இல்லை ஹாஜியார்.... நாங்க சொல்ல வந்ததைக் கொஞ்சம் கேளுங்க...."

" கொஞ்சம் கேக்கவும் ஏலாது.... மிச்சம் கேக்கவும் ஏலாது.... வந்த மாதிரி நல்ல புள்ளைங்களாட்டம் போயிருங்க.

ஹாஜியாரின் வார்த்தைகள் எரிமலைக் குழம்பாய்ப் பீரிட்டுப் பாயத் தொடங்கின.

இளைஞர்கள் மௌனித்து எழுந்து வெளியேறினர்.

நோன்பு கழிந்து கொண்டே வந்தது. பாரூக் ஹாஜியார் ஒவ்வொருநாளும் ஏமாற்றமேயடைந்தார். அவர் மட்டுமா, அவரது மனைவி, பிள்ளைகள்.... எல்லோரும்தான்.

மாற்றிக் கொண்டுவந்த 10 ரூபாய், 20 ரூபாய்த் தாள்கள் அப்படியே இருந்தன. அவற்றைப் பெற்றுக் கொள்ள வரிசை வரிசையாய் யாரும் வந்தபாடில்லை.

பெருநாள் நெருங்க நெருங்க பாரூக் ஹாஜியாரின் பதற்றமும் அதிகரித்தது.

நோன்பின் கடைசி வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் போது கதீப் நிகழ்த்திய பிரசங்கத்தில் ஸகாத்தைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். கொடுக்காவிட்டால் ஏற்படும் தீமைகளையும் அவர் விளக்கியபோது



பாரூக் ஹாஜியார் மனதளவில் நடுங்கிப் போனார்.

இந்த முறை அவரது வீட்டிற்கு வறியவர்கள் வரிசையாக வராமல் போனமைக்கான காரணம் அந்த இளைஞர்கள் தான் என்பதை அவர் உணர்ந்தார் .இறுதியில் அவர்களைச் சந்திக்க ஹாஜியார் முடிவெடுத்தார். இளைஞர் மன்றத்தில் தான் அவர்களைச் சந்திக்க முடிந்தது ஹாஜியாரால்.

"அஸ்ஸலாமு அலைக்கும் ...வாங்க ஹாஜியார்" என்று அமைதியாக வரவேற்றனர்.

"இந்த நோன்பும் முடியப் போகுது... ஒரு புள்ள ஊட்டுக்கு வரல்ல... மாத்தி வச்ச காசெல்லாம் அப்படியே இரிக்கி..." குனிந்த தலையோடு பாரூக் ஹாஜியார் கூறினார். அவர் கூறிய தொனி அவர் மன்னிப்பு கேட்பது போலவும் "என்ன செய்தீர்கள்" என்று கேட்காமல் கேட்பது போலவும் இருந்தது.

இளைஞர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"இந்தத் தடவ என்ட ஊட்டுக்கு ஸக்காத் வாங்க ஒருத்தரையும் வரவேண்டாமென்டு நீங்க சொல்லி நிப்பாட்டினீங்களா...?" பாரூக் ஹாஜியார் அழும் நிலையில் கேட்டார்.

"ஹாஜியார் நீங்க எங்கள புரிந்துக்கனும்... நாங்க ஒங்கள்ள பிழைகாணல்ல... ஒங்களுக்கு ஸக்காத்த நல்ல மொறையில கொடுக்கிற மொறய கொஞ்சம் சொல்லித்தர வந்தோம்... நீங்கதான் எங்கள பேசவே விடல்லயே..." இப்ப சொல்லுங்க... ஹாஜியார் பணிவில் உருகினார்.

"ஹாஜியார் இந்த ஊரில நீங்கதான் கணக்குப் பார்த்து ஸகாத்தைக் கொடுக்கிறதில தவறாம இரிக்கிங்க... அல்லாஹ்வும் ஒங்களுக்கு "பறக்கத்த" தர்ரான்... ஆனா... இப்படி பத்தும் இருபதுமா கொடுக்கிறதால அல்லாஹு தாலா விதிச்ச ஸக்காத்துட நோக்கம் நிறைவேறாதே... பாருங்க ஹாஜியார்... ஒவ்வொரு வருஷமும் உங்ககிட்ட பத்தும் இருபதும் வாங்கவர்ர ஜனங்கட எண்ணிக்கை கூடிக்கிட்டுதானே வருகுது... இல்லையா?"

"அதென்டாக்கா நெசந்தான்..." ஹாஜியார் ஒப்புக் கொண்டார்.

"அப்ப... ஏன்ட இந்த வருஷத்துட ஸகாத்த நான் என்ன செய்யுறது..." அவரது தொண்டை அடைந்தது.

"அல்ஹம்துலில்லாஹ்... ஹாஜியார்.. அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேத்த நீங்க துடிக்கிற துடிப்புக்கு அல்லாஹ்வே கூலிதருவான்... உங்கள நாங்க பாராட்டுறம்... பல கஞ்சத் தனம் பிடிச்ச பணக்காரங்களுக்கு நீங்க நல்ல வழிக்காட்டி..."

ஹாஜியார்... இஸ்லாத்தில ஸகாத்த யார் கொடுக்கனும்.. எவ்வளவு கொடுக்கனும் என்டு சொல்லப் பட்டிருக்கிறது போலவே யாருக்குக் கொடுக்கனும் என்டும் சொல்லி இருக்கே... அந்த முறையில கொடுக்க நாங்க ஒழுங்கு வழி செய்யிறம்... ஒரு இளைஞன் நீண்டதாக ஒரு லிஸ்ட்டை எடுத்துப் பணிவாகக் கொடுத்துச் சொன்னான்.

ஹாஜியார் இதுல நாங்க பவரிட தேவைகள எழுதி இரிக்கோம்... இவங்கள்ள ஆகக் குறைஞ்சது ஒரு ரெண்டு பேருக்காவது ஒங்கட ஒதவி ஸகாத்தா கெடச்சா அதுவே பெரிசு... ஆமா... ஹாஜியார் நீங்ககொடுக்கிற ஸகாத்தால அடுத்த வரிசம் ஸக்காத்த எடுக்க வாரவங்கள். ரெண்டு பேராவது கொரஞ்சாங்க என்டாலும் பெரிசு..."

"புள்ளைகளே... பயப்படாதீங்க... ஸகாத் பணமா என்னிட்ட உள்ளதில நாலைஞ்சு பேர் பிரச்சினையைத் தீர்த்திடலாம்.... யா அல்லாஹ். இந்த விஷயத்த இவ்வளவு காலமும் யாரும் எனக்குச் சொல்லித்தரல்லயே... ரொம்ப நிம்மதியா இருக்கி... இண்டைக்கு நீங்க எல்லாரும் எங்கட ஊட்டுல இப்தாருக்கு வந்திருங்கா..."

ஒவ்வொருவரது கைகளையும் பிடித்து அவர் விடை பெற்றார். இளைஞர்கள் முகத்தில் வெற்றிப் பெருமிதம் கரைவிட்டோடியது.

"ஹாஜியார் பணக்காரர்... ஆனா... படிப்பில கொரஞ்சவர்... அவருக்கு நல்லத எடுத்துச் சொன்னா கேட்டுக்கொள்வாரு... இந்த நோன்புல அல்லாஹ் நல்ல காரியம் ஒண்டச் செய்ய எங்களுக்கு ஒதவிட்டான்... அல்ஹம் துலில்லாஹ்! இளைஞர்கள் பெருமிதம் அடைந்தனர்.

## பெண்ணின் பிறப்பு பற்றி விந்தைக் கண்டுபிடிப்பு

மனித உயிர்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்து வரும் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் "பீட்டர் ஓபெனர்"புகழ்மிக்க "நேச்சர்" அறிவியல் ஆராய்ச்சிப் பத்திரிகையின் வெளியீடான "நேச்சர்" ஜெனட்டிக்ஸ் இதழில் கூறியுள்ளதாவது:

" முதலாவது பெண் தோன்றிப் பல பத்தாயிரம் ஆண்டு களுக்குப் பின்பே முதல் ஆண் தோன்றியிருக்க வேண்டும். ஆண் வர்க்கம் தோன்றக் காரணமாக உள்ள "வை" குரோமோசோம்கள் ஆய்வு முதல் தாயை விட உலகின் முதல் தந்தை 'இளையவர்' எனச் சுட்டிக் காட்டுகிறது.

நமது செல்களில் மைட்டோகாண்டியா என்ற ஆற்றலை உருவாக்கும் அமைப்பில் உள்ள டி.என்.ஏ முழுவதும் தாயிடம் இருந்தே பெறப்படுவது ஆகும். அதே போல "வை" குரோமோசோம்கள் (ஆண்மைக்குக் காரணமாக அமைபவை) ஆண்களிடம் இருந்தே பெறப்படுகின்றன.

மைட்டோகாண்டிரியாவில் உள்ள டி.என்.ஏ தொடர்களை ஆய்வு செய்ததில், நவீன மனிதனின் மைட்டோகாண்டிரியா யாவுமே ஒரே பெண்ணிடம் இருந்தே பெறப்பட்டவை என்றும் தெரியவந்தது.

உலகின் 21 வெவ்வேறு இடங்களில் இருந்து பெறப்பட்ட 'வை' குரோமோசோம்களும் ஆய்வு செய்யப்பட்டன.

இந்த ஆய்வுகளின்படி பெண் இனம் தோன்றி 50,000 முதல் 70,000 ஆண்டுகளுக்குப் பின்பே உலகின் முதலாவது ஆண் தோன்றியிருக்க வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன.

உலக மக்கள் எவ்வாறு உருவாக்கிப் பரவி யிருக்கக் கூடும் என்பதை அறிந்து கொள்ள இந்த ஆய்வுகள் உதவக்கூடும் என்று நம்பப்படுகிறது.

நவீன மனிதனை ஆபிரிக்காவில் இருந்து 44,000 வருடங்களுக்கு முன்பு ஆசியாவிற்கு புலம் பெயர்ந்திருக்கக்கூடும் என்றும் நம்ப இடம் உண்டு. மனித இனம் முழுமைக்கும் நெருக்கமான உறவு என்பதையே இது காட்டுகிறது." என்கிறார் விஞ்ஞானி பீட்டர்.

# முரளியை வரவேற்பதற்கு மலையகம் தயாராகிறது

தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டியின் போது தனது 300ஆவது டெஸ்ட் விக்கட்டைக் கைப்பற்றி இலங்கைக்குப் புகழ் சேர்த்துள்ளார் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன்.

முரளிதரனுக்கு முன்பே 16 வீரர்கள் 300 விக்கட்டுக்களை கடந்துள்ளனர். எனினும் பல வகையில் முரளி சாதனைக்குரியவரா கிறார்.

தனது 58 ஆவது போட்டியில் தனது 300 ஆவது விக்கட்டை முரளி வீழ்த்தினார். மிகக் குறைந்த போட்டிகளிலேயே இவ்விலக்கைக் கடந்தோரில் இரண்டாவது இடத்திலுள்ளார் முரளி. டென்னிஸ் லில்லி 56 போட்டிகளில் இவ்விலக்கைக் கடந்தார்.

தனது நாட்டில் வேறெந்த வீரரும் 150 விக்கட்டைக் கைப்பற்றும் முன்னர் 300 விக்கட்டுகளை வீழ்த்திய சாதனைக்கும் உரியவராகிறார் முரளி. நியூஸிலாந்தின் ரிச்சர்ட் ஹட்லி மாத்திரமே இச்சாதனைக்குரிய மற்றொருவர். இலங்கையில் இரண்டாவது கூடிய எண்ணிக்கை விக்கட்டுகளை வீழ்த்தியவரான சமிந்த வாஸ் 127 விக்கட்டுக்களை கைப் பற்றியிருந்தார்.

சராசரியாக ஒரு இன்னிங்ஸில் கூடுதலான விக்கட்டுகளை வீழ்த்தியோரிலும் முரளிக்கு இரண்டாவது இடம் உண்டு. 98 இன்னிங்ஸ்களில் பந்துவீசிய முரளியின் இன்னிங்ஸ் - விக்கட் சராசரி 3.282 ஆகும். முதலிடத்தில் இருப்பவர் முன்னாள் இங்கிலாந்து வீரர் சிட்னி பார்ன்ஸ் (சராசரி 3.942.) ஆவார்.


முரளி

300 விக்கட்டுக்களை கடந்த 17 பேரில் மூவர் மாத்திரமே சுழற்பந்து வீச்சாளர்கள்.

1992இல் ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெற்ற அவுஸ்தி ரேலியாவுடனான போட்டியில் அறிமுகமான முத்தையா முரளிதரன் அப் போட்டியில் 3 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்த சில போட்டிகளிலேயே இலங்கையின் பிரதான பந்துவீச்சாளராக மாறினார். இப்போது இலங்கை அணியின் வெற்றிகளுக்கு முக்கிய காரண கர்த்தாவாக முரளிதரன் திகழ்வதோடு அதிக எதிர்பார்ப்புக்குரியவராகவும் விளங்குகிறார்.

முரளியின் ஆரம்பக்காலங்களில் இலங்கை அணி துடுப்பாட்டத்தில் பலவீனமானதாக இருந்ததால் முரளிக்கு பந்து வீசும் வாய்ப்பும் குறைந்தது. இல்லாவிடின் முரளி இவ்விலக்கை பல போட்டிகளுக்கு முன்னரே கடந்திருப்பார்.

முரளியின் விக்கட் அறுவடை வேகம் படிப்படியாக அதிகரித்தே வருகிறது.

2000ஆம் ஆண்டு முரளிக்கு ஒரு வெற்றி வருடமாகும். தனது விக்கட்டுகளில் கால்பங்கை, அதாவது 75 விக்கட்டுகளை, கடந்த வருடமே முரளி வீழ்த்தியிருந்தார். இதன் மூலம் 2000ஆம் வருட டெஸ்ட் வீரர்கள் தரப்படுத்தலில் முதலாவது இடத்தை அவர் கைப்பற்றியுள்ளார்.

தனது அடுத்த இலக்கு டெஸ்டில் 500 ஆவது விக்கட்டைக் கைப்பற்றுவதாகும் என்று கூறுகிறார் முரளி.

**விக்கட் வீழ்த்தலில் மைல்கற்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கிறேக் மெக்டெமர்ட் | (ஆஸி) | 1 ஆவது போட்டி | - 1992 |
| 50 | நவ்ஜோத் சிங் சிது | (இந்) | 13ஆவது போட்டி | - 1994 |
| 100 | ஸ்டீபன் ஃபிளமிங் | (நியூஸி) | 27 ஆவது போட்டி | - 1997 |
| 150 | கை விட்டல் | (ஸிம்) | 36 ஆவது போட்டி | - 1998 |
| 200 | பென் ஹொலியோக் | (இங்கி) | 42 ஆவது போட்டி | - 1998 |
| 250 | நவீட் அஷ்ரஃப் | (பாக்.) | 51 ஆவது போட்டி | - 2000 |
| 300 | ஷேன் பொல்லொக் | (தெ.ஆ) | 58 ஆவது போட்டி | - 2000 |

தற்போதைய வேகத்தில் சென்றால் இன்னும் சில வருடங்களிலேயே இவ்விலக்கை கடந்து விடுவார் முரளி. காயங்களும் சில அவுஸ்திரேலிய நடுவர்களும் இடையூறு ஏற்படுத்தாமல் இருந்தால் 600ஆவது டெஸ்ட் விக்கட்டையும் முரளிதரன் கைப்பற்றுவார் என கிரிக்கட் விமர்சகர்களால் நம்பப் படுகிறது.

**ஒவ்வொரு அணிக்கும் எதிராக முரளியின் பந்துவீச்சு விபரம்**

| அணி | போ | ஓவர் | ஓ.ஓ. | ஓட் | விக். | சரா. | சி.பெ. | 5வி | 10வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 7 | 306.2 | 46 | 922 | 22 | 41.90 | 5-71 | 1 | 0 |
| நியூஸிலாந்து | 8 | 374.1 | 101 | 912 | 39 | 23.38 | 5-30 | 3 | 0 |
| இங்கிலாந்து | 2 | 174.5 | 56 | 393 | 21 | 18.71 | 9-65 | 2 | 1 |
| இந்தியா | 9 | 459.3 | 103 | 1236 | 28 | 44.14 | 5-162 | 1 | 0 |
| தென் ஆபிரிக்கா | 9 | 609.2 | 146 | 1397 | 69 | 20.24 | 7-84 | 8 | 2 |
| மே.இ. தீவுகள் | 3 | 113.5 | 36 | 294 | 20 | 14.70 | 5-34 | 2 | 0 |
| பாகிஸ்தான் | 11 | 564.5 | 129 | 1495 | 60 | 24.91 | 6-71 | 4 | 1 |
| ஸிம்பாப்வே | 9 | 500.1 | 155 | 954 | 43 | 22.18 | 7-94 | 3 | 1 |
| **மொத்தம்** | **58** | **3103.5** | **772** | **7603** | **302** | **25.17** | **9-65** | **24** | **5** |
| இலங்கையில் | 30 | 1556.4 | 376 | 3691 | 159 | 23.21 | 7-84 | 13 | 2 |
| வெளிநாடுகளில் | 28 | 1547.1 | 396 | 3912 | 143 | 27.35 | 9-65 | 11 | 3 |
| **மொத்தம்** | **58** | **3103.5** | **772** | **7603** | **302** | **25.17** | **9-65** | **24** | **5** |

(போ- போட்டிகள், ஓ.ஓ- ஓட்டமற்ற ஓவர்கள், ஓட்- கொடுத்த ஓட்டங்கள், விக்.- விக்கட்டுகள், சரா.- சராசரி, சி.பெ.- சிறந்த பெறுதி, 5வி- ஒரு இன்னிங்ஸில் 5 விக்கட் பெற்ற தடவை, 10வி- ஒரு போட்டியில் 10 விக்கட் பெற்ற தடவை)

சாதனை படைத்த முத்தையா முரளிதரனைப் பாராட்டி, கௌரவிக்க அவரது சொந்த நகரான கண்டி மாவட்ட கிரிக்கட் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

முரளி இலங்கை திரும்பியவுடன் கண்டி நகரப் பாடசாலை மாணவ மாணவியர் மற்றும் பொது மக்கள் மத்தியில் பேராதனைப் பூங்காவிலிருந்து அஸ்கிரிய மைதானத்துக்கு வாகன ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

அங்கு நடைபெறும் வைபவத்தில் முரளிக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்படவுள்ளது.

**விக்கட் வகைகள்**

| | |
|---|---|
| பிடிகள் | 165 |
| போல்ட் | 72 |
| எல்.பி. டபிள்யூ | 38 |
| பந்துவீசி பிடித்தவை | 13 |
| ஸ்டம்ப் | 13 |
| ஹிட் விக்கட் | 1 |
| மொத்தம் | 302 |

இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால உட்பட பல அதிகாரிகளும் இவ்வைபவத்தில் பங்கு பற்றவுள்ளனர்.

1998இல் இங்கிலாந்து சுற்றுலாவின்பின் கண்டிக்குத் திரும்பிய முரளிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் வரலாறுகாணாதளவு பொது மக்கள் திரண்டுவந்தமை குறிப்பிடத் தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# மலேஷிய அணிக்கு வெங்ஸார்கர் பயிற்சி

மலேஷிய கிரிக்கட் அணிக்கு பயிற்சியளிக்க வருமாறு முன்னாள் இந்திய அணித் தலைவர் திலிப் வெங்ஸார்கருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மும்பையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசிய மலேஷிய கிரிக்கட் சங்கத் தலைவரான இளவரசர் துங்கு இம்ரான் இவ்வழைப்பை விடுத்தார்.


வெங்ஸார்கர்

1967ஆம் ஆண்டில் ஐ.சி.சி யின் பகுதி அங்கத்துவத்தைப் பெற்றது மலேஷியா.

2020ஆம் ஆண்டில் கிரிக்கட் டெஸ்ட் அந்தஸ்தை அடைவதற்கான முயற்சியில் மலேஷியா இறங்கியுள்ளது.

தற்போது கிரிக்கட் பயிற்சி நிலையமொன்றை நடத்தி வருகிறார் வெங்ஸார்கர். மலேஷியாவை இன்னும் 20 ஆண்டுகளில் டெஸ்ட் அந்தஸ்துடைய அணியாக மாற்றுவதற்கு வெங்ஸார்கர் பொருத்தமானவர் என தான் நம்புவதாகக் கூறுகிறார் இளவரசர் இம்ரான்.

இதேவேளை, மலேஷியாவில் கிரிக்கட் துறையை ஊக்குவிக்கும் முகமாக பாகிஸ்தான், இந்தியா, மலேஷிய அணிகளுக்கிடையில் ஒருநாள் சுற்றுப் போட்டியொன்றை நடத்த மலேஷியா திட்டமிட்டது.

ஆனால் இந்தொடரில் பாகிஸ்தானுடன் விளையாடுவதற்கு இந்தியா மறுப்புத் தெரிவித்ததால் இத்தொடர் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# லெவிஸ் ஓய்வு பெறுகிறார்

அதிபார குத்துச் சண்டையில் தற்போதைய உலகச் சாம்பியனான லெனோக்ஸ் லெவிஸ் விரைவில் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.


35 வயதான லெவிஸ் மைக் டைசனுடன் இறுதியாக மோதவுள்ளார். அதுவே தனது இறுதிப் போட்டியாக இருக்கும் என்கிறார் லெவிஸ்.

ஜனவரியில் 13ஆம் திகதி டைஸன் - லெவிஸ் குத்துச் சண்டைப் போட்டி மலேஷியாவில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது மற்றொரு திகதிக்கு அது பின்போடப் பட்டுள்ளது.

''டைஸனுடனான போட்டியில் நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்'' எனக் கூறுகிறார் லெவிஸ் ''அப் போட்டியில் ஒரேயொரு முடிவுதான் கிடைக்கும். 'லெனோக்ஸ் லெவிஸ் வெல்வார்' என்பதே அது'' என்று இறுமாப்பாகக் கூறுகிறார் அவர்.

இறுதியாக கடந்த நவம்பர் மாதம் நியூஸிலாந்து நாட்டின் டேவிட் டுவாவோடு மோதி இலகு வான வெற்றி பெற்றவர் லெவிஸ்.

மைக் டைசனும் கடந்த ஒக்டோபரில் அன்ரூ கலோட்டாவுடன்


லெவிஸ்

மோதிய போது அதுவே தனது இறுதிப் போட்டி எனத் தெரிவித்திருந்தார். எனினும் பின்னர் அம் முடிவை மாற்றிக் கொண்டுள்ளார்.

20வயதிலேயே அதிபாரச் சாம்பியனாகி டைசன் பின்னர் சிறை செல்ல நேர்ந்தாலும் இன்றும் அவரது குத்துச் சண்டை ரசிகர்களுக்கு குறைவில்லை

புதிதாக எவர் குத்துச்சண்டைச் சாம்பியன் பட்டங்களை வென்றாலும் அவர் மைக் டைசனுடன் மோதுவதைக் காணவே ரசிகர்கள் ஆவலாகவுள்ளனர்.

பாலியல் குற்றச்சாட்டுக் காரணமாக டைஸன் சிறை சென்றவர் என்பதால் அவருடன் மோதுவதற்கு மறுத்திருந்தவர் லெவிஸ். ஆனாலும் இப்போது முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறார்.


குத்துச்சண்டையிலிருந்து ஓய்வு பெற்றபின் ஹொலிவூட் நடிகராகும் திட்டமிருப்பதாக லெவிஸ் ஏற்கனவே கூறியிருந்தார்.

# ஷேன் வோர்னுக்கு இடமில்லை?

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளரான ஷேன் வோர்ன் மீண்டும் அவ்வணியில் இடம் பெறுவதற்கு பலத்த சவாலை எதிர்நோக்குகிறார்.

விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஒக்டோபர் மாதத்தில் பின் கடுமையான போட்டிகளில் எதிலும் ஷேன் வோர்ன் பங்குபற்றவில்லை.

அவர் இல்லாமலேயே அவுஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுடனான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அபாரமான வெற்றியீட்டியுள்ளது. கொலின் மில்லர், ஸ்டுவர்ட் மெக்கில் ஆகிய சுழற்பந்து வீச்சாளர்கள் ஷேன் வோர்னுக்கு பதிலாக ஆஸி அணியில் இடம்பெற்றனர். இருவருமே குறிப்பிடத்தக்களவு சிறப்பாக பந்து வீசி விக்கட்டுகளை வீழ்த்தினர்.


ஷேன்

தற்போது வோர்ன் குணமடைந்து, விக்டோரியா அணிசார்பில் பிராந்திய போட்டிகளில் பங்கு பற்றி வருகிறார்.

ஆனாலும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் சுற்றுப் போட்டிகளில் ஷேன் வோர்ன் இடம்பெறுவார் என உத்தரவாதமில்லையென ஆஸி அணித்தலைவர் ஸ்டீவ் வோ கூறியுள்ளார்.

பெப்ரவரிமாதம் அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு செல்லவுள்ளது. இத்தொடரில் ஷேனுக்கு இடமளிக்கப்படுமா என்பதிலும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் கூடுதலான டெஸ்ட் விக்கட்டுகளைக் கைப்பற்றியுள்ள வீரர் ஷேன் வோர்ன் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெய்வல்லுநர் அலுவலர்களுக்கு அம்பாறையில் கருத்தரங்கு

இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படும் மெய்வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப இறுதித் தினம் ஜனவரி 15ஆம் திகதியாகும்.

இப்பரீட்சை தொடர்பான அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் அலுவலர்களுக்கான கருத்தரங்கு ஜனவரி 28ஆம் திகதி சாய்ந்தமருது அல்ஹிலால் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் பிரபலமான மெய்வல்லுநர் போட்டி ஆரம்பிப்பாளர் என். வைரவநாதன், உடற்கல்வி விரிவுரையாளர் ரி.எம். தேவேந்திரன் விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ் குணரெட்ணம் ஆகியோர் இக்கருத்தரங்கை நடத்தவுள்ளனர்.

அம்பாறை மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தின் தலைவர் எம். அப்துல் நஸார், கச்சேரி, அம்பாறை (தொலைபேசி 067-20099) அல்லது செயலாளர் எம். வை. சம்சுல் ஆரிபீன், உடற்கல்வி போதனாசிரியர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் எனும் முகவரியில் (தொலைபேசி 067-22299) தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# இன எழுச்சிப் பணியில் யாழ் பல்கலைக் கழகம்

யாழ் பல்கலைக்கழகசமூகம் அதன் 'இமேஜை' மீண்டும் ஒரு தடவை உயர்த்திக் கொண்டுள்ளது. ராக்கிங் தகாத செயல்கள் என்று நாட்டின் கவனத்தை ஈர்த்துவிட்டிருந்த யாழ் பல்கலைக்கழகத்தில்இருந்து கடந்த வாரம் நல்ல செய்தி வந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அண்மைக்காலத்தில் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திக் காட்டிய மாணவர்கள் தற்போது துணைவேந்தர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என அனைவரையும் அரவணைத்துக் கொண்டு தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் பக்க பலமாய் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளனர்.

மின்சாரமும், அரிசி, மா, சீனியும், கட்டடங்களும்தான் தமிழ் மக்களின் அபிலாஷைகள் எனக் கொச்சைப்படுத்தும் சூழ்நிலையில் 'தமிழ் மக்களின் அபிலாஷை சுய நிர்ணய உரிமையே' என்ற மகுட வாக்கியத்துடன் தொடரான எழுச்சி நிகழ்வுகளை யாழ். பல்கலைக்கழக சமூகம் ஆரம்பித்திருக்கிறது. கடந்த வாரம் முழுவதும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் இது தொடர்பான பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன்.

தமிழ் மக்களின் தேசிய எழுச்சிக்கான தொடக்கமாக இந்த நிகழ்வுகள் அமைந்தன.

சுயநிர்ணய உரிமையே தமிழர்களின் அபிலாஷை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உரத்துச் சொல்வதே இந்த எழுச்சியின் நோக்கமென்று தெரிவித்துள்ள பல்கலைக்கழக சமுகம், இந்த எழுச்சியை— விழிப்புணர்வை வளாகத்துக்கு வெளியே பொது மக்கள் மட்டத்துக்கும் விஸ்தரிக்க உள்ளது.

சுய நிர்ணய உரிமை தொடர்பாகத் தமக்கும் பிறருக்கும் தெளிவையும் விழிப்பையும் ஏற்படுத்த விளைந்துள்ள மாணவர்களின் இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது, மதிக்கப்பட வேண்டியது.

## மினித்திரை அரங்கு தீக்கிரை

இனம், மொழி, கலாசாரம், பண்பாடு என்று தனித்துவமான அடையாளங்கள் இருக்கும் வரைதான் அவற்றைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களும் மதிக்கப்படும்.

ஆனால், குடாநாட்டின் இன்றைய நிலை இளம் சமூகத்தைப் படுகுழியில் தள்ளிவிடுமோ என அஞ்ச வைக்கின்றது.

1995 இன் இறுதியில் அதிகாரக் கைமாற்றம் நிகழ்ந்த பின் அதுவரை இருந்த கட்டுப்பாடுகள், விதிகள் தளர்ந்து போனதால் மிகப்பெரும் சீரழிவை நோக்கி இளம் சமூகம் இன்று வீழ்ந்து கொண்டு இருக்கிறதே என்ற வேதனை பலருக்கு.

யாழ் நகரின் சந்து பொந்துகளிலெல்லாம் மினித் திரையரங்குகளும், மதுபானச் சாலைகளும் புதிது புதிதாய் முளைத்துக் கொண்டிருக்கின்றன.

இங்கெல்லாம் சிறிசுகளைத் தாராளமாகக் காணமுடிகிறது.

ஆங்கிலப் படங்கள், மலையாளப் படங்கள் என்ற பெயரில் நீலப்படங்கள் தாராளமாய் ஓடுகின்றன. நகரிலுள்ள மினித்திரையரங்குகளில் ''அந்த மாதிரி'' படங்களுக்குக் கூட்டம் அலைமோதுகின்றது.

தியேட்டர் உள்ளே போனால் முன் வரிசையில் பத்துப் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டதுகளை வரிசையில் காண்பது சர்வசாதாரணம்.

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகே ஒரு மினித்திரையரங்கு ''ஓகோ'' என்று ரசிகர்களைத் தன்பால் கவர்ந்து இழுத்தது. மாணவர்கள் கல்லூரிக்குக் 'கட்' அடிக்கத் தொடங்கினர். நிலைமை மோசமானது. அயலவர்கள் சினக்கத் தொடங்கினர். இந்த மாதிரித் திரையரங்குகளுக்கு உரிமம் வழங்கக் கூடாது என்று மாநகர சபை நிர்வாகத்துக்கு முறைப்பாடுகள் குவிந்தன.

திரையரங்கின் உரிமையாளர் கிறங்கியதாகத் தெரியவில்லை. சட்டதிட்டத்தின் படி வயது வந்தவர்களுக்கு மட்டும் (அ) என்று விளம்பரப்படுத்திவிட்டு கிளுகிளுப்பை ஏற்படுத்தும் ஆங்கிலப்படங்களை ஓடவிட்டார்.

அப்பப்ப 'கந்தன் கருணை' போன்ற படங்களைப் போட்டு போக்குக் காட்டி விட்டு மீண்டும் நீலப்படங்கள் தொடர்ந்தன.

இந்துக் கல்லூரிக்கு அருகே சிவகுருநாதர் ஒழுங்கைக்குள் அமைந்திருந்த அந்த மினித்திரையரங்கு கடந்த வாரம் ஒரு நாள் இரவு திடீரெனத் தீப்பிடித்தது. திரையரங்குக் கொட்டகை முற்றாக எரிந்து போனது. அங்கிருந்த திரைப்படக் கருவிகளும் எரிந்து போயின. தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீ பரவாமல் தடுத்து விட்ட போதிலும் சுமார் பத்துப் பதினைந்து நிமிட நேரத்துக்குள் திரையரங்கு முற்றாகச் சாம்பரானது.

'தமிழீழ சீர்த்திருத்த ஆர்வலர்கள்' என்ற அநாமதேய அமைப்பு திரையரங்கைத் தீக்கிரையாக்கியது தாங்களே என்று உரிமை கோரியிருக்கிறது. நகரில் மினி சினிமாக்களை நடத்துவோரின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது இந்தச் செய்தி.

தீக்கிரையான மினித் தியேட்டர் அருகே இந்த அமைப்பின் பிரசுரங்கள் வீசப்பட்டுக் கிடந்தன.

'தமிழீழ சீர்த்திருத்த ஆர்வலர்கள்' 'தலைமை அலுவலகம், யாழ் மாவட்டம்' எனத் தலைப்பிடப்பட்ட அப்பிரசுரத்தில் 'நீலப்படங்களைத் திரையிடும் சின்னத்திரை உரிமையாளர்களுக்கு' எனக் குறிப்பிட்டு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆயிரம் வீர மனிதர்களின் இரத்தச் சேற்றால் சிவப்பேறிய இந்த மண்ணில் அற்ப பணத்துக்காக எமது இளம் குருத்துக்களைச் சீரழிக்கும் பணியில் நீங்கள் ஈடுபட்டு வருகிறீர்கள் என்பது எமது மக்கள் அறிந்த விடயம். உங்கள் திரைகளில்




எதுவும் அறியாத பாலகர்கள் முன்வரிசையில் இருந்து பார்ப்பதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எமது இளஞ் சமுதாயத்தின் உள்ளங்களைச் சீரழித்துப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் இந்தச் செயலுக்கு மக்கள் வெறுத்து ஒதுக்கிய தேசவிரோதக் குழு ஒன்று உங்களுக்குப் பக்க பலமாக இருப்பது நாம் அறிந்த விடயமாகும்.

அக்குழு உறுப்பினர்களை மகிழ்விக்க நீங்கள் செய்யும் இச்செயலுக்கு எமது மக்கள் பலியாவதை எம்மால் அனுமதிக்க முடியாது. இன்று நடந்து முடிந்துள்ள இச்செயல் உங்கள் அனைவருக்கும் இறுதி எச்சரிக்கையாகும்.

இனியும் நீலப் படங்களையோ நீலச்சாயலை ஒத்த ஆங்கில, தமிழ்ப் படங்களையோ உங்கள் திரையரங்குகளில் காண்பித்தால் உங்களுக்காக உங்கள் குடும்பம் வருந்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். என்று எச்சரிக்கை விடுத்துள்ளது அந்த அநாமதேய அமைப்பு.

சங்கிலியன் படையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது இந்தப் புதிய குழு.

## பங்கீட்டு அட்டைகள்

பொது மக்களுக்கான உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகளை விநியோகிப்பதில் மோசடி புரிந்ததாகத் தெரிவித்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் நால்வர் மீது விசாரணைகள் நடைபெற்று வருவதான தகவல் ஏற்கனவே இப்பத்தியில் வெளியாகி இருந்தது.

பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்ற விசாரணைகளின் முடிவுகள் யாழ் அரச அதிபரின் கவனத்துக்கு அறிவிக்கப் பட்டுள்ள போதிலும் மேலதிக விசாரணைகள், அவற்றின் பெறுபேறுகள் தொடர்பான எந்தத் தகவலும் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட உலர் உணவு அட்டைகளின் எண்ணிக்கை மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருப்பதாகக் கிராம அலுவலர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இதைவிட அரசியல் காரணங்களுக்காகவே பிரஸ்தாப கிராம அலுவலர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதாக ஒரு தகவல் அடிபடுகின்றது.

சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் ஒரு கட்சிக்குச் சார்பானவர்கள் என்றும் அதற்கு எதிரான மற்றொரு கட்சியின் தூண்டுதலினாலேயே அவர்கள் மீது தேவையற்ற விசாரணைகள் நடத்தப்பட்டன என்றும் கூடத் தகவல்.

இதேவேளை கிராம அலுவலர்கள் மீது விசாரணையை முடுக்கிவிட்ட சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் விரைவில் யாழ். செயலகத்தில் உயர் பதவி ஒன்றில் அமர இருப்பதால் இந்த மோசடி தொடர்பான விசாரணைகள் இனி அமுங்கிப் போகும் என்றும் பேச்சு அடிபடுகின்றது.

## மீனவர்களுக்குக் கட்டுப்பாடு

குடாக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை மீண்டும் உள்ளாடைகளுடன் மட்டுமே தொழிலுக்குச் செல்ல அனுமதித்திருக்கிறது இராணுவம். அத்துடன் பல சோதனைக் கெடுபிடிகளையும் அவர்கள் மீது விதித்திருக்கிறது.

கடலுக்கு உணவுப் பார்சலை எடுத்துச் செல்ல முடியாது; அவற்றை வேண்டுமானால் குருநகர் இறங்குதுறைப் பகுதியில் வைத்துச் சாப்பிட்டுவிட்டுச் செல்லப் படையினர் அனுமதிக்கின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட தூர, நேர கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீதே இத்தனை கெடுபிடிகள் விதிக்கப்படுகின்றன.

குடாக்கடல் வழியாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு சட்டவிரோத வியாபாரம் நடப்பதாக படையினர் நம்புகின்றனர். அண்மையில் தொழிலுக்குச் சென்று கரை திரும்பாத மீன்வர்கள் பலர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே குடாக்கடலில் மீனவர்கள் மீதான கண்காணிப்பைப் படையினர் தீவிரமாக்கியிருக்கின்றனர்.

எரிபொருள், சைக்கிள், மோட்டார்சைக்கிள் உதிரிப்பாகங்கள், பற்றிகள் போன்ற தடை செய்யப்பட்ட பொருள்களை மீன்பிடிக்கச் செல்லும்சாக்கில் தம்முடன் மறைத்து எடுத்துச்செல்லும் மீனவர்கள் அவற்றை வன்னிக்குக்கொண்டு சென்று வழங்குவதாகப் படையினருக்குத்தகவல்கிடைத்துள்ளதாம்.

—வலிகாமத்தான்

## விவசாயி தற்கொலை: வல்வை நகராட்சி தலைவர் விளக்கம்

''காணி சுவீகரிப்பால் நடந்த தற்கொலை'' என்ற உப தலைப்புடன் 24.12.2000 'சுடர் ஒளி'யில் பிரசுரிக்கப்பட்ட விஷயம் பற்றி வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் விளக்கம் அளித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்.

தற்கொலை நிகழ்ந்தது உண்மை என்று சிவாஜிலிங்கம் ஒப்புக்கொண்டார். அதே வேளை சம்மந்தப்பட்டவருக்குக் குடும்பப் பிரச்சனைகள் இருந்தன் என்றும் அவர் காணி விஷயத்துக்கு முன்னரே தற்கொலை முயற்சியில் இறங்கியவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சிவாஜிலிங்கம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

நில அளவை வேலைகள் நடைபெற்றபோது காலஞ்சென்ற விக்னேஸ்வரன் எந்த விதமான மறுப்பும் இல்லாமல் காணிக்கான எல்லைகளைக்காட்டி முழு ஒத்துழைப்பு வழங்கினார்.

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு அரங்கிற்காக நன்கொடையாகவோ விலையாகவோ அல்லது சுவீகரித்தோ பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணி 16 ஏக்கர் ஆகும். விவசாயம் செய்து கொண்டு இருக்கும் எவரையும் விவசாயச் செய்கையை நிறுத்துமாறு கேட்கவில்லை.

சுவீகரிப்பு என்பது வருடக் கணக்கில் இழுபடும் நடைமுறை. நில அளவை வேலைகள் நடந்ததை வைத்து தவறாக பிரசாரம் செய்யப்பட்டுவிட்டது.

காலஞ்சென்ற விக்னேஸ்வரனுக்குப் பிள்ளைகள் இல்லை. இவருக்கும் மனைவிக்கும் இடையில் நீண்ட காலமாகவே தகராறு. கசிப்பு அருந்தும் பழக்கமுள்ள இவருக்கு பல பெண்களுடன் இருந்த தகாத உறவே தற்கொலைக்குக்காரணம்.

சம்பவ தினத்தன்று மது போதையில் மனைவியுடன் சண்டையிட்ட பின்னரே கிருமி நாசனியை அருந்தி உள்ளார். இவர் இதற்கு முன்னரும் கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் குடும்பத் தகராறு காரணமாகக் கிருமி நாசனி அருந்தித் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பியவர்.

ஊரில் உள்ள பொது மக்கள் அனைவருக்கும் உண்மை நிலை தெரியும். இவருக்குச் சொந்தமாக வேறு தோட்டக் காணிகளும் உண்டு. எனவே சீவியத்திற்கு வழியில்லாமல் கிருமி நாசனி அருந்தினார் என்பது உண்மைக்குப் புறம்பானது.

இப்படிச் சிவாஜிலிங்கம் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

# "ரேய்கி"யில் தனக்குத் தானே தொடுகை மூலம் சிகிச்சை

## தமிழக டாக்டர் லட்சுமி எம்.பி.பி.எஸ், விளக்கம்


''ரேய்கி'' டாக்டர் லட்சுமி

ஒரு ஜீவனின் நலமான வாழ்விற்கு காற்றும் நீரும் மிகவும் அவசியமானவை. இவற்றுடன் பிரபஞ்ச சக்தியும் மிகவும் தேவைப்படுகிறது.

மனிதனைச் சுற்றி மின்காந்த அலை சூழ்ந்துள்ளது. இதன் மூலமே பிரபஞ்ச சக்தியை மனிதன் கிரகிக்கிறான். இது தடைப்படும்போது நோய் அவனை ஆட்கொள்கிறது. ''ரேய்கி'' மூலம் இத்தடை அகற்றப்படுகின்றபோது அவன் சுகதேகியாகிறான் என்கிறார் டாக்டர் கே.லட்சுமி எம்.பி.பி.எஸ்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் லட்சுமி ஜப்பானிய வைத்திய முறையான ரேய்கி சிகிச்சையில் நிபுணத்துவம் மிக்கவர்.

இலங்கை 'ரேய்கி' சங்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு டாக்டர் லட்சுமி இலங்கை வந்துள்ளார். 30-12-2000 சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் விழாவில் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்திய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ரேய்கி' சிகிச்சை முறை டற்றி அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :-

'உடல், மனம் சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் 'ரேய்கி' சிகிச்சையால் குணப்படுத்தலாம். தலைவலி, முதுகுவலி, மூட்டுவலி, குடற்புண், சர்க்கரை வியாதி போன்ற அனேக வியாதிகளை இது நீக்க வல்லது.

மனிதனின் அன்றாட வாழ்வில் அவன் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளால் அவன் அல்லல்படுகிறான். ஞாபக மறதி, கவனக்குறைவு, சோர்வு, தூக்கம் இல்லாமை, மன அழுத்தம், மனத் தளர்வு ஆகிய மனோ வியாதிகளையும் ரேய்கி குணப்படுத்தி விடுகிறது. இந்தச் சிக்கல்கள் அகற்றப்பட்டதும் மனிதன் புதிய ஜீவன் பெறுகிறான்.

நம்மைச் சுற்றி மின்காந்த அலை வியாபித்துள்ளது. இதில் ஏழு பிரதான சக்கரங்கள் உள்ளன. இந்தச் சக்கரங்களே நமது நாளமில்லாச் சுரப்பிகளும் அவற்றைச் சார்ந்த உறுப்புக்களும் இயங்குவதற்கு அடிப்படைக் காரணிகளாக அமைந்துள்ளன. இவை விண்வெளியில் பரந்துள்ள பிரபஞ்ச சக்தியைப் பெற்று இயங்குகின்றன.

குறிப்பிட்டதொரு சக்கரத்தில் பாதிப்பு ஏற்படும் போது அதைச் சார்ந்த உறுப்பும் பாதிப்படைகிறது. ரேய்கி சிகிச்சை பெறுபவர் தமது உள்ளங்கையால் சக்தியை செலுத்துவதன் மூலம் பாதிப்படைந்துள்ள சக்கரம் மீண்டும் முன்னைய நிலையை அடைகிறது. அதனால் நோய் நீங்குகின்றது.

ரேய்கி சிகிச்சை பயிற்சி பெறுபவர் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட சக்கரம் முன்னைய நலமான நிலையை அடைகிறது. இவை வெறும் ஊகத்தின் அடிப்படையிலான கருத்துக்கள் அல்ல, விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டவையாகும் என்கிறார் டாக்டர் லட்சுமி.

— ராஜி

# சங்கிலி அறுத்தவர்களை விரட்டியடித்த ஆசிரியை

நகைகளைப் பறிக்க வந்தவர்களுடன் கராத்தே சண்டை போட்ட ஆசிரியையின் துணிச்சலைக் கண்டு திருடர்கள் ஓட்டம் பிடித்தனர்.

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் காரைக் குடியில் உடற்பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார் சுந்தர் அழகப்பா. இவரது மனைவி தமிழ்மணி உடற்பயிற்சி ஆசிரியையாக வேலை பார்த்தவர்.

இவர்கள் தங்களது பிள்ளைகளுடன் வசந்தநகர் புளியந்தோப்பு கருப்பசாமி கோவிலுக்கு சாமி கும்பிடச் சென்றிருந்தனர்.

பின்னர் ஆசிரியை தமிழ்மணி தனது பிள்ளைகளுடன் வீட்டுக்குத் தனியாக வந்து கொண்டிருந்தார். சாலையின் இருபுறமும் அடர்ந்த மரங்கள் இருக்கின்றன.

அந்த இடத்தில் பதுங்கி இருந்த வழிப்பறித் திருடர்கள் 3 பேர் தனியாக வரும் பெண்ணின் நகைகளைப் பறித்து விடலாம் என்று வீதியில் வழிமறித்தனர்.

அவர்கள் தமிழ்மணி மீது பாய்ந்து அவரது கழுத்தில் இருந்த 6 பவுண் சங்கிலியைப் பறித்தனர்.

இதைச் சற்றும் எதிர்பாராத தமிழ்மணி பயந்து விடவில்லை. அவர் கற்று வைத்திருந் த கராத்தே கலை அவருக்கு உதவியது. திருடர்களுடன் துணிச்சலாகக் கராத்தே சண்டை போட்டார்.

அதிர்ச்சி அடைந்த திருடர்கள், தமிழ்மணியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறி ஓடிவிட்டனர்.

இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து வழிப்பறித் திருடர்களைத் தேடி வருகின்றனர்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | சன் டிவி நிகழ்ச்சி |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்டினி | சக்தி வீக்கெண்ட் மெட்டினி |
| 13.30-14.00 | அக்கா | அக்கா | அக்கா | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | வசந்த நிலா |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | சன் டிவி நிகழ்ச்சிகள் | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகன் | அரட்டை அரங்கம் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | இசைக் கோலம் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | புன்னகை |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | பன்னல் |



# தாய்ப்பால் ஊட்டும் நுட்பம் தெரியுமா?

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலை விடச் சிறந்த உணவு வேறு எதுவும் இல்லை.

தாய்ப்பால் குழந்தைகளுக்கு உணவு, பாசம், பாதுகாப்பு முதலியவற்றைத் தருகின்றது.

தாய்ப்பால் கிருமிகளோ, கலப்படமோ இல்லாததால் குழந்தைகளின் உடல் நலத்திற்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தை மிகவும் உறுதியுடனும், உற்சாகத்துடனும் இருக்கும். பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்கள், வயிற்றுப் போக்குகள் வராமல் தடுக்கும் சக்தி தாய்ப்பாலுக்கு மட்டுமே உண்டு.

தாய் தனது குழந்தைக்குப் பாலூட்டும் போது சில விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

* குழந்தையை மடியில் வைத்துக் கையால் அணைத்துக் கொண்டு பால் கொடுக்க வேண்டும்.

* குழந்தையானது மார்பகத்தின் காம்புப் பகுதி முழுவதையும் வாயில் வைத்திருக்கும்படி செய்து பாலூட்ட வேண்டும்.

அப்போதுதான் தாய்க்கு வலி இருக்காது.

* குழந்தைக்குத் தாய் பாலூட்டும்போது தாயின் மனநிலை கவலையின்றி, சந்தோஷமாக இருக்க வேண்டும்.

* ஒவ்வொரு முறை பாலூட்டும் போதும் இரு மார்பகங்களிலும் பாலூட்ட வேண்டும்.

* ஒவ்வொரு முறை பாலூட்ட முன்பும் மார்பகக் காம்புகளை நன்றாகக் கொதித்தாறிய நீரால் கழுவ வேண்டும்.

* மார்பகங்களைச் சுற்றியுள்ள பகுதிகள் வரண்டு போனால், சிறிதளவு பேபி கிறீமைத் (Baby cream) தடவி மிக மிக மென்மையாக மசாஜ் செய்து விடவேண்டும்.

* கால அளவைப் பார்த்துக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்காமல், குழந்தை அழும் போதெல்லாம் பால் கொடுக்க வேண்டும்.

* கட்டாயப்படுத்திக் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாது.

போதுமானளவு குடித்தபின் குழந்தை தூங்கி விடும்.

* குழந்தை பிறந்து மூன்று, நான்கு நாட்களுக்குக் கொடுக்கப்படும் பால் குழந்தையை பல நோய்க் கிருமிகளிடம் இருந்து பாதுகாக்கின்றது.

# தண்ணீர்.... தண்ணீர்!



உடல் நலத்தை விரும்புவோர் நிறையத் தண்ணீர் குடியுங்கள்.

பல சந்தர்ப்பங்களில் பசியெடுக்கின்றதென்று ஏதாவது உணவுப் பொருளைச் சாப்பிடுவதற்கு முன்னர் சற்று நிதானித்து உணவுப் பொருளுக்குப் பதிலாகத் தண்ணீரைக் குடித்துப் பாருங்கள்.

உண்மையில் தாகத்தைத்தான் நாம் பசியாக உணர்ந்திருக்கின்றோம் என்பது புரியும்.

இதை நாம் கூறவில்லை. அவுஸ்திரேலிய மருத்துவக் குறிப்பு ஒன்று கூறுகின்றது.

அதிலும் குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பது இன்னும் நல்லதாம்.

குளிர்ந்த நீரை உடலின் வெப்ப நிலைக்குக் கொண்டுவர உடல் மேலும் சில கலோரிச் சத்தை செலவழிப்பதால் உடல் எடை குறையவும் வாய்ப்பு உள்ளதாம்.

உடல் எடை குறைய இப்படியும் ஒரு நீர் மருத்துவம் உண்டு.

# புருஷன் வீட்டுக்கு போற பெண்ணே!



ஒருபெண் பலதரப்பட்ட அனுபவங்களைக் கடந்து எப்படியோ திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்கிறாள்.

அது பெற்றோர் பார்த்து வைத்த திருமணமோ, காதல் திருமணமோ, தன் குடும்பம் என்ற மரியாதையுடன் இல்லற வாழ்க்கையில் பெண் அடி எடுத்து வைக்கிறாள்.

அங்கு அவள் நிலைமை என்ன? தன் வாழ்க்கையை இனிமையாக அனுபவிக்கிறாளா? நிம்மதியாகவாவது இருக்கிறாளா?

100 பெண்களின் திருமண வாழ்க்கையை ஆராய்ந்து எடுத்துள்ள முடிவுகள் இவ்வாறு கூறுகின்றன.

* 30 பெண்கள் மாமியார் கொடுமையினால் நிம்மதியை இழக்கின்றனர்.
* 25 பெண்கள் மாமனாரின் கொடுமையால், சபல புத்தி காரணமாக அவஸ்தைப் படுகின்றனர்.
* 25 பெண்கள் கணவனே சரியில்லை என வேதனை அடைகின்றனர்.
* 15 பெண்கள் கணவரின் சகோதரிகளின் கொடுமையால் மன உளைச்சலுக்கு இலக்காகின்றனர்.
* 3 பெண்கள் தாமாகவே விஷயங்களைக் கற்பனை செய்துகொண்டு வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கின்றனர்.
* 2 பெண்கள் மட்டுமே சந்தோஷமாக வாழ்கின்றனர்.

## பெண்

பிரதீபா—பசீனா

# நீங்கள் தொழிலுக்கு செல்கிறீர்களா?

இன்று தொழிலுக்குச் செல்லும் பெண்களின் சதவீதம் அதிகரித்து வருகிறது.

நீங்களும் வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால் பின்வரும் விடயங்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

* உங்கள் வேலையில் தவறு வராதபடி கவனமாக இருங்கள்.
* செய்த வேலையை இருமுறை சரி பார்த்துக் கொள்ளுங்கள்.
* நீங்கள் செய்யும் தொழிலில் முன்னேறுவதற்கு விஷயமறிந்தவர்களிடம் நிறையக் கேட்டும் நூல்களில் படித்தும் அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.
* உடன் வேலை செய்பவர்களோடு இயன்றளவு நல்லுறவைப் பேணுங்கள்.
* அடிக்கடி தேவையில்லாமல் விடுமுறை எடுக்காதீர்கள்.
* பதற்றம் அதிகமாகும் போது அமைதியாக இருங்கள்.
* அலுவலகத்திற்கு ஒருவர் வராத போது அவரின் பணியைச் செய்யும் நிலைமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* உங்கள் அலுவலகப் பணி குறைவற்றது எனவும், அலுவலகம் உயர்ந்தது எனவும் கருத்தில் கொள்ளுங்கள். தொழில் மேலும் சிறப்புற உழையுங்கள். உங்கள் வாழ்வு தானாகவே உயரும்.



# பெற்றோரின் கோபம் குழந்தைகளையும் பாதிக்கும்



நமக்கு உணர்ச்சிகள் அதிகம். இந்த உணர்ச்சிகள் நம்முடன் சிறிது நேரம் தான் தங்கும் என்றாலும் அச்சிறிது நேரத்தில் நம்மை அடியோடு மாற்றிவிடுகின்றன.

நாம் உடல் ரீதியாக வளர்ச்சியடைந்திருந்தாலும், உள ரீதியாக இன்னும் முழுமையடையவில்லை. சில சமயங்களில் உணர்ச்சிகளுக்கு மனம் கட்டுப்பட்டுவிடுகின்றது.

மனித உணர்ச்சிகளில் அதிகம் நம்மை ஆட்டிப் படைப்பது கோபம் தான். கோபம் நமது மனமகிழ்ச்சியினைக் கெடுத்து, நாடித் துடிப்பை அதிகரித்து, மூச்சு விடுவதனை சுமையாக்கி நம்மைத் துன்பப்படுத்துகின்றது.

அதற்காகக் கோபம் வரக்கூடாது என்று இல்லை. கோபம் வரலாம் தவறில்லை ஆனால் அக் கோபம் முறையான நபர் மீது, முறையான அளவில், முறையான நேரத்தில் வரவேண்டும்.

இன்று பல குடும்பங்களில் கணவன் — மனைவி இடையே ஏற்படும் பிளவுகளுக்கு கோபமே மூல காரணம்.

மனைவிமாரை அடித்துத் துன்புறுத்தி ஆத்திரப்படும் கணவன்மார்கள் அனேகர் உள்ளனர். இதற்குக் காரணம் அவர்கள் தம்மைப்பற்றித் தாழ்வாக நினைத்துக் கொண்டிருப்பதும், குடும்பத்தைச் சரிவர நடத்த முடியாமல் இருப்பதும் ஆகும்.

அவர்களைப் பொறுத்த வரை மனைவி அவர்களின் சொத்து. அவளை என்ன செய்யவும் அவர்களுக்கு உரிமை உண்டு. மனைவியை அடிப்பது அவர்களுக்கு ஒருவித குரூரமான நிம்மதியைத் தருகின்றது.

கணவனின் இப்படியான செய்கையால் ஒரு பெண் மிகவும் பயந்து விடுகின்றாள். தன் மனதில் எழும் கோபத்தைக் கட்டுப்படுத்துகின்றாள். கணவனுடன் பேசுவதைத் தவிர்த்து இறுதியில் பேச்சே இல்லாத இயந்திரமாகி விடுகின்றாள். கணவன் தகாத வார்த்தைகளால் பேசும்போது மௌனமாகி விடுகின்றாள் மனைவி.

தனக்கு ஆதரவு கிடைக்கும் தோளில் புதைந்து அழுகின்றாள்.

சில சமயங்களில் அந்த ஆதரவு தரும் தோள் மற்றொரு ஆண்மகனாகக் கூட அமைந்து விடுகின்றது.

இது தொடர்ச்சியாக நிகழும் போது அவள் மனதில் வஞ்சகம் ஏற்படுகின்றது. இத் துன்பங்களில் இருந்து விடுபட முடியாத பல பெண்கள் இறுதியில் நோய்வாய்ப்படுவதோடு தற்கொலை முயற்சியினையும் மேற் கொள்கின்றனர்.

இந்தக் கோபம் பெண்களுக்கு மட்டும் உரியதல்ல. மிகச் சாதுவானவள் எனக் கூறப்படும் பெண்கூட கோபம் ஏற்பட்டவுடன் கணவனிடம் உடல் உறவை மறுத்துப் பழிவாங்குகின்றாள்.

இவ்வாறு கணவன் — மனைவி இடையே ஏற்படும் கோபம் ஒருவரை ஒருவர் பழிவாங்குவதோடு அமையாமல் அது குழந்தைகளைத் தாக்கும் போது நிலைமை பாரதூரமாகின்றது.

இதனால் குழந்தைகளும் கோபம் நிறைந்தவர்களாகவே வளர்கின்றனர்.

எனவே வீணாகக் கோபப்பட்டு உங்கள் உடல் நலத்தையும்கெடுத்து, பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாழடித்து விடாதீர்கள்.

கோபத்தைத் தவிர்ப்பதற்கு மன்னிப்பதும், மறப்பதும், மனம் விட்டுப் பேசுவதுமே சரியான தீர்வு!

# அஷ்ரப் மரணத்தில் அரசு மௌனம் சாதிப்பது ஏன்?

## விசாரணை நடத்தக் கோரி கல்முனைக்குடியில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

முஸ்லிம்களின் தானைத் தளபதி, ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் தலைவர், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பயணம் செய்த ஹெலிகொப்டர் அரநாயக்காவில் "வெடித்துச் சிதறி" விபத்துக்குள்ளானதால் அவர் எம்மையும் இந்த உலகையும் விட்டுப்பிரிந்து இறையடியெய்தி நூறு



அஷ்ரப் மறைந்த 100ஆவது நாள் நினைவு நிகழ்வுகளின் போது துவா கேட்ட பெண்களில் ஒரு பகுதியினர். நினைவுநாள் நிகழ்வுகளை கல்முனை பட்டதாரி மாணவர் அமைப்பு கல்முனை நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

நாட்களுக்கு மேல் கடந்துவிட்டன.

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலிகொப்டர் அரநாயக்காவில் விபத்துக்குள்ளான சம்பவம் திட்டமிட்ட 'சதி' என்றே முஸ்லிம் மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ஹெலிவிபத்து மர்மம் துலக்கப்பட வேண்டும், சுயாதீன விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்என்றெல்லாம் சூட்டோடு சூடாகக் குரல்கள் எழுந்தன.

இந்த விடயத்தில் நூறு நாட்களுக்கு மேல் கடந்தும் அவரால் முண்டுகொடுக்கப்பட்டு வந்த அரசு மௌனம் சாதிக்கின்றது. அவருக்காகக் குரல் கொடுக்க வேண்டிய அரசியல் பிரமுகர்களும், அரசோடு ஒட்டிக் கொண்டிருப்பவர்களும் வாய்திறக்காது காணாமல் போன கறுப்புப்பெட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

ஆனால் முஸ்லிம் மக்கள் கொதித்துக் கொண்டிருக்கின்றார்கள். தலைவர்களை நம்பிப் பயனில்லை என்றோ என்னவோ மக்கள் இன்று வெகுஜனப் போராட்டக்களத்தில் குதிக்கத் தொடங்கியுள்ளனர்.

"காணாமல் போவதற்குக் கறுப்புப்பெட்டி என்ன கடதாசிப் பெட்டியா?" – "அரசுதான் மௌனம் அரநாயக்க மலையே நீயுமா மௌனம்?" என அவர்கள் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

இந்த விடயத்தில் அரசு கடைப்பிடிக்கும் 'மௌனவிரத' மாயையை அவர்கள் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர். கிழக்கிலங்கையில் இதுவிடயமாக தொடர்வெகுஜனப் போராட்டங்களை நடத்தும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரபின் அரநாயக்க ஹெலிவிபத்தின் பின்னணியை வெளிச்சத்துக்குக் கொண்டு வருமாறு கோரிக் கடந்த வெள்ளிக்கிழமை (29–12–2000) கல்முனைக் குடியில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

"மெஸ்றோ" என அழைக்கப்படும் தேசிய ரீதியில் இயங்கும் முஸ்லிம் கல்வி சமூக ஆய்வுகள் நிறுவனம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த முஸ்லிம்கள் பள்ளிவாசலின் முன் கூடி நிற்கும் காட்சி.

"மெஸ்றோ" அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, அஷ்ரப் மரணமர்மத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில் அரசு காட்டும் அசமந்தத்திற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றிய முஸ்லிம்கள் பள்ளிவாசல் முன்பாக கல்முனை பிரதான வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




விசாரணை நடத்தக் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகள் பதாகைகள் சகிதம் நின்று கோஷம் எழுப்புகின்றனர்.

சுலோக அட்டைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியவாறும் பெருந் தொகையான முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

"அரசே நீதியான விசாரணையைத் துரிதப்படுத்து" – "கறுப்புப்பெட்டி காணாமல் போனதா, களவாடப்பட்டதா?" – "அரசு தான் மௌனம், அரநாயக்க மலையே நீயுமா மௌனம்?" – "அரசே, புலிகளுடனான பேச்சு வார்த்தைக்குமுன் எங்கள் தலைவரின் மரணமர்மத்தைத் துலக்கு" – "விமானப்படையின் அறிக்கை வெறும் கண்துடைப்பே" – "அமெரிக்க மத்திய புலனாய்வுக் குழுவின் அறிக்கைக்கு என்ன நடந்தது?" – "பதினோராவது நாடாளுமன்றத்தில் எங்கள் தலைவரின் குரலை ஒலிக்கவிடாது சதிசெய்தவர்கள் யார்?" – "அரசின் மௌனம் தொடர்வதால் எங்கள் சந்தேகம் வலுவடைகிறது" – "தீயால் எரிந்து போக கறுப்புப்பெட்டி என்ன கடதாசிப் பெட்டியா?" – என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர். அந்த வாசகங்களைக் கோஷங்களாகவும் எழுப்பினர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் திரண்டிருந்தோர் மத்தியில் 'மெஸ்றோ' அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் உரையாற்றினார்.

"இந்த விடயத்தில் அரசு அசமந்தமாகச் செயற்பட்டுவருவது வேதனைக்குரியதும், விசனத்திற்குரியதுமாகும்.

எமது இந்த வெகுஜனப் போராட்டம் கிழக்கிழங்கை முழுவதிலுமுள்ள கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்" என்றார் அவர்.

போராட்டகளம் தொடங்கியிருக்கிறது. தலைநிமிர்ந்து குரல் எழுப்புவார்களா எம் தலைவர்கள்? அல்லது தலை தெறிக்க ஓடி ஒளிவரா? – கேட்கிறார்கள் முஸ்லிம் மக்கள்!

அரசின் பதில்தான் என்ன? தொடர்ந்தும் மௌனம் தானா?

—ஏ.எல்.எம்.சலீம்



வந்தாறுமூலை மகாவிஷ்ணு வித்தியாலயப் பரிசளிப்பு விழாவை பிரதம அதிதியான மேலதிக கல்விப் பணிப்பாளர் த.குணராஜ ரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் வித்தியாலய அதிபர் சு. சுகுமார்.



சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ் ஆசியுரை வழங்குகிறார்.



பரத கலாலயாவின் நிர்வாக இயக்குனா திருமதி சுமித்திரா கிருபாகரனின் நெறியாள்கையில் பரதக்கலை மாணவிகளின் நடன நிகழ்ச்சி மட்டக்களப்பு தேவநாயகம் கலை அரங்கில் சமீபத்தில் நடந்தது.

# பிந்திய பதில்கள்

**தி.நாதன், ஆரையம்பதி.**
கே: பண்டைக்காலத் திருமணத்திற்கும் இன்றைய திருமணத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசம் என்ன?
ப: அனேகமாகக் குழந்தை ஒன்று பிறப்பதற்குக் குறைந்தது பத்து மாதங்களுக்கு முன் நடந்ததுபண்டைக்காலத் திருமணம். பெரும்பாலும் குழந்தை வயிற்றிலோ அல்லது இடுப்பிலோ இருக்கையில் நடப்பது இன்றைய திருமணம்.

**வி.சுசீலா, பொரளை.**
கே: மானம் என்றால் என்ன?
ப: அந்தக் காலத்தில் நம் முன்னோர்கள் மத்தியில் இருந்ததாகச் சொல்லப்படும் தலையான மனித உணர்ச்சி.

**எம்.றிசான். புத்தளம்.**
கே: வறுமையை விடக் கொடிய துன்பம் ஏதாவது உண்டா?
ப: உண்டு. அதன் பெயர் கடன்.

**வி.இராமநாதன், உடுப்பிட்டி.**
கே: தமிழ் மக்களைக் கெடுத்துக் கொண்டு இருப்பது?
ப: சில தலைவர்களின் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனமும், மக்களில் பெரும்பாலானவர்களின் செம்மறியாட்டுக்குணமும்.

**கே.அப்துல் ரசூல், தெஹிவளை.**
கே: கலப்படத்துக்கும் திரைப்படத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?
ப: கலப்படக்காரர்கள் திரைமறைவில் இயங்குகிறார்கள். திரைப்படக்காரர்கள் பகிரங்கமாகக் கலப்படம் செய்கிறார்கள்.

**எல்.சுப்பிரமணியம், வெள்ளவத்தை.**
கே: அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையே பேச்சுவார்த்தை நடக்குமா?
ப: நடக்கும் சாத்தியம் இல்லை. நடந்தாலும் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை.

**ஆர்.ரமேஸ், நுவரெலியா.**
கே: மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும். அப்படியானால் ஆடவராகப் பிறப்பதற்கு...?
ப: மாது தவம் செய்திட வேண்டும்.

**வி.பரமசிவம், ஏழாலை.**
கே: அறிஞர் அண்ணாவைப் போல் புகழ் பெறக் கூடியவர்கள் இன்று தமிழகத்தில் யார் இருக்கிறார்கள்?
ப: ஒருவரும் இல்லை. அண்ணா புகழ் இருந்த போதே புகழ் உடம்பு எய்திவிட்டார். ஆனால், இன்று இருப்பவர்களோ தங்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்சப் புகழையும் மண்ணாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**வி.மக்கீன், கொழும்பு.**
கே: பிறரை மயக்க என்ன செய்ய வேண்டும்?
ப: முகஸ்துதி செய்யுங்கள். ஏன் என்றால் முகஸ்துதிக்கு மயங்காத மனிதரே உலகில் இல்லை.

**எஸ்.பிரமிளா, கண்டி.**
கே: கணவனைக் கவர்வது எப்படி?
ப: உள்ளத்தால் கவர்ந்தது அந்தக்காலம். இந்தக் காலத்தில் ஆடை அணிகளால் கவர்வது இலகு என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**கே.ஜஸ்மின், மன்னார்.**
கே: யாருக்கு கோபம் அதிகம்?
ப: பயந்த சுபாவம் உள்ளவர்களுக்கு.

**வி.பி.அப்துல் லத்தீப், சிலாபம்.**
கே: மனிதர்களில் உயரக்கூடியவர் யார்?
ப: விமானிகள் நிச்சயம் உயரக்கூடியவர்கள். மற்றப்படி வாழ்க்கையில் எப்போதோ ஒரு தடவைவரும் சந்தர்ப்பம் என்ற ஏணிப்படியில் விரைவாக ஏறக்கூடியவர்கள்.

**ஆர்.ஜெயச்சந்திரன், நல்லூரர்.**
கே: நண்பர்களை நீங்கள் நம்பி நடக்கிறீர்களா?
ப: இல்லை. நம்பத்தான் நடந்து வருகிறேன். இந்தக் காலத்தில் எவரையும் உண்மை நண்பன் என்று ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

**வி.காந்தி, மட்டக்களப்பு.**
கே: உலகம் எப்படிப்பட்டது?
ப: உலகம் நிலையற்றது என்கிறான் வேதாந்தி. ஆமாம், உலகம் நிலையற்றதுதான். அது எப்போதும் சுற்றிக்கொண்டே இருப்பதால் என்கிறான் விஞ்ஞானி. இப்படி விஞ்ஞானியும் மெஞ்ஞானியும் ஹாயாகப் பேசிக்கொண் டிருக்கையில் உலகத்தைச் சுருட்டிச் சட்டைப் பையில் திணித்துக் கொள்கிறான் அரசியல்வாதி.

**ஆர்.மேரி, அவிசாவளை**
கே: பேய் இருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?
ப: பணப்பேய், லஞ்சப் பேய், காமப்பேய், வகுப்பு வாதப்பேய் என்று பல பேய்கள் இருப்பதாக நம்புகிறேன். மற்றப்படி மேக்கப் கலைந்த நிலையில் சில சினிமா நடிகைகளும் அப்படி ஒரு தோற்றம் அளிப்பது உண்டாம்.

**எஸ்.ரகுவரன், சுன்னாகம்.**
கே: பொருள் மனிதனுக்கு அவசியமா?
ப: எந்தப் பொருளைக் கேட்கிறீர்கள்? இந்த உலகத்தில் வாழவிரும்புபவனுக்கு நிச்சயம் பொருள் அவசியம் தான். அந்த உலகத்தில் வாழ விரும்புபவனுக்குக் கூடப் பரம் பொருள் அவசியமே அல்லவா?

**டி.சந்திரா, தெரணியகலை.**
கே: காதல் செய்வது எப்படி?
ப: "சொல்லிப் புரிவதில்லை மன்மதக் கலை" என்று மகாகவி பாரதியாரே கூறிவிட்டாரே. அப்புறம் நான் என்ன சொல்லி என்ன பயன்?

**கே.துவான் நவ்ஷீர், மடுல்சீமை.**
கே: மதுவுக்கும் மாதுக்கும் இவ்வளவு மவுசு ஏன்?
ப: இரண்டும் கொண்டவரை மயக்குவதால்.

**ஈ.வி.ஜெயராஜ், கம்பளை.**
கே: மனிதனை விடச் சிறந்தது எது?
ப: நாய். அதற்கு நன்றி உண்டு. எவ்வளவு தான் செய்தாலும் மனிதனுக்கு இது ஏற்படுவதில்லையே.

**வி.ரவுப், களுத்துறை.**
கே: காதல் என்பது அக்கினியானால் கல்யாணம் என்பது என்ன?
ப: கல்யாணம்என்பது ஆகுதியாகும்.

**பி.ரமணி, பலாங்கொடை.**
கே: உயர்ந்த மாடங்களில் வாழ்ந்தாலும் ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும் என்றும் மாறாத பொருள் என்ன?
ப: வயிற்றுப் பசி.

**ஆர்.பேரின்பம், காரைதீவு.**
கே: சிந்தனைக்கும் கற்பனைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப: வெளிநாடுகளிடம் எவ்வளவு காலம் தான் பிச்சை கேட்பது என்று நினைப்பதுசிந்தனை. நாட்டை விரைவில் அபிவிருத்தி செய்துவிடுவோம் என்று நினைப்பது கற்பனை.

**ஐ.இப்ராஹீம், கண்டி.**
கே: மனிதனுக்குத் திருமணமாவதற்கு முன்னரா பின்னரா கஷ்டம்?
ப: குழந்தை பிறந்த பின்னர் தான் கஷ்டம்.

**கே.ஜெகநாதன், பண்டாரவளை.**
கே: கணவனுக்கு அடங்காத மனைவிக்கும், முதலாளிக்கு அடங்காத வேலைக்காரனுக்கும் என்ன வித்தியாசம்?
ப: முதலாளி நினைத்தால் வேலைக்காரனை அடக்கிவிடலாம். ஆனால் கணவனால் முடியாது. சில வேளைகளில் வேலைக்காரனின் நிலைக்குக் கணவன் தள்ளப்படலாம்.

**ந.பாலன், கொழும்பு 7,**
கே: "தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா." அன்று சொன்னது இன்று பொருந்துமா?
ப: இன்று தமிழன் என்றால் கைது, தலை நிமிர்ந்தால் சூடு என்று ஆகிவிட்டது. உதாரணம் குமார் பொன்னம்பலம்.

**எம்.பார்ஸி, தெல்தெனிய.**
கே: முத்தம் எப்போது இனிக்கும்?
ப: (செருப்பின்) சத்தம் கேட்கும் போது!

**நந்தகுமார், ஆரையம்பதி.**
கே: இன்று சின்னச் சின்னக் காரணங்களுக்காக விவாகரத்துப் பெறும் கணவன்—மனைவி பற்றி...?
ப: அவர்கள் தங்களது சின்னச்சின்ன ஆசைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

**கே. இராமநாதன், பட்டிருப்பு**
கே: வறுமையினால் தானே மனிதன் திருடனாக மாறுகிறான்?
ப: இல்லை, வேலை செய்யாமலே ஊதியம் பெறும் ஆசையினால்தான் ஒருவன்திருட ஆரம்பிக்கிறான்.

**வி.குமார், கேகாலை**
கே: ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப: ஆண் தனக்கு வேலை இருந்தால் மட்டும் வெளியே போவான். பெண் தன்னை யாராவது பார்க்கவேண்டும் என்பதற்காக வேலை இல்லாவிட்டாலும் வெளியே போவாள்.

**வி.ரி.றோன். மொரட்டுவ.**
கே: அதிகம் படித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாமா?
ப: அதிகம் படித்த பெண்களுக்கு ஞாபகமறதி அதிகம். அவர்கள் தமக்குத் திருமணமானதையே மறந்துவிடுவார்கள், கவனம்.

**வி.என். சென்னன், கண்டி.**
கே: அரசாங்கத்தின் போக்கினால் அதிகம் அதிருப்தி அடைந்திருப்பவர்கள் பணக்காரர்களா? ஏழைகளா?
ப: இருவரும் அல்லர். நடுத்தர வர்க்கத்தினரே இன்று பயங்கரமான முறையில் நசுக்கப்பட்டிருக்கிறார்கள்.

# எமனுக்கும் உண்டு ஆலயம்
## கும்பிட்டால் ஆயுள் கூடலாம்



வயது போனவர்கள் எமன் என்று வருவானோ என்று அஞ்சி வாழ்வார்கள். ஆனால் எமனை வழிபட்டால் அவன் நல்லது செய்வான் என்று ஆத்மீக வாதிகள் நம்புகிறார்கள். இதனால் தமிழகத்தில் எமனுக்கும் ஒரு ஆலயம் இருக்கிறது.

தஞ்சாவூர் மாவட்டம் ஸ்ரீ வாஞ்சியம், 'எமன் க்ஷேத்திரம்' என்று பெயர் பெற்றது. கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு ஏராளமானோர் குப்த கங்கையில் நீராடி எமனை வழிபடுகிறார்கள்.

இங்கு மகாவிஷ்ணு லட்சுமியை வாஞ்சித்து இறைவனைப் பூஜித்ததால் ஸ்ரீவாஞ்சியம் எனப் பெயர் பெற்றது. இறைவன் ஸ்ரீ வாஞ்சிநாதர், இறைவி ஸ்ரீ மங்களாம்பிகை.

காசியை விட மூன்று மடங்கு பெருமை வாய்ந்தது ஸ்ரீவாஞ்சியம். பிரளயத்திற்குப் பின் சிவபெருமான் பிரமனைப் படைத்து, அவருக்கு உலகில் உயிர்களைப் படைக்க உத்தரவிட்ட தலம்.

சக்தி தேவி, பிரமனைப் படைப்பதற்கு முன்பே சுயம்புலிங்கமாகச் சிவபெருமான் பார்வதியுடன் அமைந்துள்ள தலம். கங்கை, இங்கு 'குப்த கங்கை' என்ற பெயரால் ரகசியமாக உறைந்துள்ளது.

எமன் மக்களின் உயிர்களைக் கவருவதால், தனக்கேற்படும் தோஷம் நீங்க, இங்கு ஒரு புஷ்கரணியை (எமதீர்த்தம்) உண்டாக்கி அதில் நீராடிச் சிவனை வணங்கினான். அவர் காட்சி தந்து எமனைத் தமது வாகனமாக ஏற்றுக்கொண்டார்.

சித்திர குப்தரோடு எமனுக்குத் தனிச் சந்நிதியும், சிவபெருமானுக்கு எமனே வாகனமாகவும் அமைந்துள்ளன. எமனை வணங்கிய பிறகே மற்ற மூர்த்திகளைத் தரிசிக்க வேண்டுமென்பது நியதி.

நாய் வாகனம் இல்லை. காசியில் இறப்பவர்களுக்கு எமவாதனை கிடையாது; பைரவர் வாதனை உண்டு. ஆனால் இத்தலத்தில் இறப்பவர்களுக்கு எமவாதனை, பைரவவாதனை இரண்டும் கிடையாது. இறப்போரின் வலது செவியில் சிவபெருமானே பஞ்செழுத்தை ஓதி, அவ்வுயிர்களைப் பிற லோகத்துக்கு அழைத்துச் செல்வதாக நம்பப்படுகிறது.

சனிபகவானின் அதிதேவதையான எமதர்மராஜனே இறைவனுக்கு வாகனமாக அமைவதால் இறப்பைத் தரும் எமனின் பயத்திலிருந்தும், ஏழரைச்சனி, கண்டச்சனி, அஷ்டமச்சனி ஆகிய உபாதைகளி லிருந்தும் பாதுகாப்பளிக்கும் தலம் இது.

மாசி மாதம் பிரும்மோத்ஸவம் (அசுவினி – மகம்) 2 ஆவது நாள் பரணியன்று வாஞ்சிநாதர் எமன் வாகனத்தில் தீர்த்தம் அளிக்கிறார்.

என்.வி. ராமஸ்வாமி

# மூதூர் பகுதியில் நிலைமை இன்னும் சீராகவில்லை

## வெள்ளம் புயலால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணமின்றிப் பெருமூச்சு

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அனர்த்து நீங்கியும் மூதூர்ப் பகுதிகளில் இன்னும் நிலைமை சீராகவில்லை. போதிய நிவாரண உதவிகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட மக்கள் பெருமூச்சுவிடுகிறார்கள்.

வெள்ளமும் புயலும் மூதூர் பிரதேசத்தில் பல்வேறு அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளன. பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணமளிக்குமாறு சமூக சேவை அமைப்புகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கடலோரக்கிராமங்கள், சூரக்குடா, உப்புவெளி, கூனித்தீவு, சம்பூர், கட்டைபறிச்சான், சேனையூர், பள்ளிக்குடியிருப்பு, மலைமுந்தல், பாட்டாளிபுரம் ஆகியன ஆகும்.

மற்றும் ஏனைய கிராமங்களும் ஈச்சலம்பற்று அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கடலோரக் கிராமங்களான இலங்கைதுறை முகத்துவாரம், கல்லடி, வாழைத்தோட்டம், வெருகல் முகத்துவாரம் ஆகிய கிராமங்களும் வெள்ளத்தாலும், புயலாலும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

அண்மையில் வீசிய இச்சூறாவளியால், இப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்து வீழ்ந்துள்ளன. ஐந்நூறு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட உபஉணவுப் பயிர்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இவை தவிர பனைமரங்கள், வாழைகள், வேம்புகள் எல்லாம் புயலால் அடியோடு சரிந்துள்ளன. பழங்குடி மக்கள் வாழுகின்ற பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடிசைகள் கூரையிழந்து காணப்படுகின்றன.

தம்பலகாமத்திலும், புயலால் வீடுகளும், கடைகளும், பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன. தம்பலகாமம் தெற்குப் பகுதியில் உள்ள குஞ்சடப்பன் திடலில் தென்னைமரம் முறிந்து விழுந்து பெரும் சேதத்தை விளைவித்துள்ளது.

வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதால், விவசாயிகளுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், நாமகள் சனசமூக நிலையத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

சூறாவளியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களுக்கு உடனடியாக நிவாரணமளிக்குமாறு கோரும் மனு ஒன்றை முன்னாள் கட்டைபறிச்சான் கிராம சபைத்தலைவரும், சமாதான நீதிவானுமாகிய சு.குணநாயகம் அனுப்பிவைத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் சமூகசேவை அமைச்சரைச் சந்தித்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உடனடியாக இருவார காலப்பங்கீட்டு உணவு வழங்குமாறு கேட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

சூறாவளியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஈச்சலம்பற்றை பிரதேச செயலகப் பிரதேசத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் 'லொறிகள்' மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு, குறைந்த வட்டியில் அமைந்த கடன்கள், அவர்கள் தற்பொழுது பெறும் மூன்று மாத அடிப்படைச் சம்பளத்தொகையில் வழங்கப்படலாம் எனவும் சொல்லப்படுகிறது.

—வேலாயுதம் தங்கராசா

# போர் நிறுத்தம் கோரி சர்வதேச சமூகத்துக்கு டெலோ விண்ணப்பம்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் என்ற போர்வையில் வடக்கு கிழக்கிலும், தமிழ் பேசும் மக்கள் வாழும் ஏனைய பகுதிகளிலும் 'இனப்படுகொலை' நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்தை அறிவித்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியும் புலிகள் இயக்கம் காட்டியிருக்கும் நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டு இலங்கை அரசாங்கமும் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஐரோப்பிய யூனியன் முதலான சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கும் முழுமையான அழுத்தத்தை மேற்கொள்ள வேண்டும். சர்வதேச சமூகங்களிடம் நாம் இதைத்தவிர பெரிதாக எதனையும் கோரவில்லை. இத்தகைய அழுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு தகுந்த தருணம் இப்போது வந்திருக்கிறது.

இவ்வாறு டெலோ இயக்கத் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யுத்த நிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுப்பது தொடர்பாக கூட்டுச் சேர்ந்துள்ள'11 தமிழ் கட்சிகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் பத்திரிகையாளர் மகாநாடு கொழும்பு ஹொலிடே இன் ஒட்டலில் இடம் பெற்றது. அவ்வேளையிலேயே ஸ்ரீகாந்தா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் புலிகளை நாம் பாதுகாக்க முயல்வதாக குற்றம் சாட்டுவது தவறானது. புலிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவார்கள். அரசாங்கம் தனது நலன்களையே இந்த யுத்தத்தின் மூலம் பாதுகாத்துக் கொள்கிறது. நாம் யுத்த நிறுத்தத்துக்கு உலக நாடுகளை அழுத்தம் கொடுக்கக் கோருவது எமது மக்களை பாதுகாப்பதற்காகவே என்றார்.

# களுத்துறைச் சிறையில் மர்மப் படுகொலை!

கழுத்து வெட்டப்பட்டு மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் தமிழ் வாலிபர் ஒருவருடைய சடலம் களுத்துறைச் சிறைச்சாலை சிறைக்கூடமொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 24 வயது சண்முகராசா நிந்தியானந்தன் எனும் திருமணமான வாலிபரின் சடலமே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சிறைச்சாலை அறையொன்றினுள் கிடந்த அவரது சடலத்தை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டதாக சிறைச்சாலைஅத்தியட்சகர் தனசிங்க தெரிவித்தார்.

கடந்த 6 மாதங்களாக இச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவருடன் மொத்தம் 44 தமிழ் வாலிபர்கள் இருந்ததாகவும், இவரது மரணம் தொடர்பாக ஏனைய தமிழ் வாலிபர்கள் எதனையும் தெரிவிக்க மறுப்பதாகவும் களுத்துறை பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் மொஹமட் யுஹீர் சதியான் 'சுடரொளி'க்குத் தெரிவித்தார்.

களுத்துறை நீதிவான் அமல் ரணராஜ் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ்த்தாயின் தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ
ஆரைத்தேடி நீயழுறாய்
அப்பாவின் சிறைச்சாலை
தேடி அழுறாயோ?
அண்ணாவின் புதைக்குழி
தேடிஅழுறாயோ?
கிருஷாந்தியக்கா போன்றோர்
நிலையெண்ணி உன்
பிரஷாந்தியக்காவை
தேடிஅழுறாயோ?
என் மகனே தேடி நாம்
சோர்ந்துவிட்டோம்.
போர்க்கொடியால்
வதங்கிவிட்டோம்.
வந்துபோன
சமாதானப்பேச்சுக்களால்
வாடி நின்ற நிலை இம்முறை
ஓடிவிடுமென்ற முடிவோடு
தூங்கடா என் மகனே!
விடிவொன்று பிறக்கு
மென்று இன்னமும்
நம்புகிறோம்.
விம்மலை அடக்கி தூங்கடா
செல்வ மகனே!

தி. லோஜினி

## வழிபிறக்கும்

புத்தாண்டு வந்தாயிற்று
பசுமையான நினைவுகளை
மட்டும்
பத்திரப்படுத்துங்கள்.
கவலைகளைக் கசக்கி
எறிந்து விடுங்கள்.
சோகங்களை மறைக்க
மேகங்களைப் பிழிந்து
வர்ணமடிப்போம்!
கிழக்கு வானைக் கிழித்து
சிவப்பு வர்ணம் எடுத்து
புரட்சிக் கவிதை வடிப்போம்!
யுத்தம் இல்லாத
வரலாறு செய்வோம்
சமாதானம் ஒன்றையே
சந்ததிக்குச்
சொல்லிக்கொடுப்போம்!
தை பிறந்தால்
வழி பிறக்கும் என்பது
பழசென்று சொல்
வலி பிறந்தால் தான்
வழி பிறக்கும்
புதிதென்று சொல்!
வலிகள் எல்லாம்
அனுபவித்தாயிற்று
பிறக்கப்போவது
வழிகள்தான்!

நாதன்




## புதைகுழிச் சுவடுகள்.....!

நெஞ்சினைக் கிழித்து நிலமதில் உதிரம்
விஞ்சியே பாயும் இத்திரு நாட்டில்!
நஞ்சினைக் கொண்டார் விதைகுழி கண்டார்
மிஞ்சியே வாழ்ந்தார் புதைகுழி போனார்!

மடிந்திடும் மாந்தர் மனதினை ஆழ
கடிந்திடும் சொற்கள் வாயினுள் புரளும்!
வடிந்திடும் கண்ணை எழும் திசை ஆக்கி
விடிந்திடும் என்று விண்ணுலா போனார்!

மலக்குழி வயல்வெளி உவர்நிலம் எல்லாம்
சவக்குழி ஆகியே சரித்திரம் படைத்தது!
செம்மணி தொடங்கி மிருசுவில் வரையும்
எம்மணி உடல்களின் புதைநிலம் ஆயின!

எண்ணிய எலும்பும் சிதைந்த தசையும்
பண்ணிய ஆய்வில் பெரும்பயன் தருமா?
பின்னிய போரால் பிணைந்திடும் துன்பமும்
அன்னிய படைகளும் என்றுதான் ஓடும்!

-லோ.து(ள)ஷி

## சந்தோஷம் தந்துவிடு

புன்முறுவல் பூத்து நிற்கும்
இன்னுமொரு புத்தாண்டே
நம் சோகம் கேட்பாயா?
நம்பிக்கை வார்ப்பாயா
ஈராயிரம் தாண்டி.
ஓராண்டு பூத்தது
தொலைந்திட்ட நிம்மதியை
அலைந்தலைந்து தேடுகிறோம்.
கண்டபயன் ஏதுமில்லை.
துன்பமின்னும் மாறவில்லை
அன்புள்ளம் யாவுமின்று
மண்ணறைக்கு போனதனால்
இருக்கச் சிந்தையில்லாத
அரக்கர்களின் ஆட்சியாச்சு!

கண்ணிமைக்கும் நேரத்தில்
கனபிணங்கள் வீழ்கிறது
முகாம்கள் ஆகிவிட்ட
முகாம்கள் கூடிக் கிடக்கு
பாலின்றி அழுகின்ற
பாலகர்கள் தாராளம்
அனாதைகள் பட்டாளம்
இமயமலை தாண்டிவிடும்
ஊனங்கள் ஏராளம்.
விலையேற்றம் வேறிங்கு
அலையாக நமைமோதி
வேதனையில் வீழ்த்துது
சாதனைகள் நடத்துது
வந்துவிட்ட புத்தாண்டே
நொந்துவிட்ட நம்மனதை
சாந்தியடைய செய்துவிடு
சந்தோஷம் தந்துவிடு.

எம். ஸாலிஹ் அஸீம்.

# தமிழகம் ஏற்றுப் போற்றும் எங்கள் நாட்டுத் தமிழ் அறிஞர்

*பெரிய உடலமைப்பு*
*விசாலமான உள்ளம்*
*பரந்த அறிவு*
*ஆழ்ந்த தமிழ்ப் புலமை*
*உயர்ந்த சிந்தனை*
*நிறைந்த தமிழியல் ஆராய்ச்சி*

இவற்றின் சொந்தக்காரர் எங்கள் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

தமிழ் வளர்த்த பெருமைக்கு உரியது மதுரைத் தமிழ்ச்சங்கம். மதுரையையும் தமிழ்ச் சங்கப் பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்ட தமிழகம் பேராசிரியர் சிவத்தம்பியை இனங்கண்டு அவரைத் தமிழ் அறிஞராக ஏற்றுக்கொண்டு போற்றியிருக்கிறது.



பேராசிரியர் சிவத்தம்பி

தமிழக அரசு இம்முறை தமிழறிஞருக்கான திரு.வி.க.விருதை (2000ஆம் ஆண்டுக்குரியது) சிவத்தம்பிக்கு வழங்கி அவரைப் பாராட்டிக் கௌரவித்தது.

தமிழக அரசின் மற்ற 5 விருதுகளைப்பெற்ற தமிழ் நாட்டுத் தமிழறிஞர்கள் ஐவரோடு சிவத்தம்பியையும் சென்னையில் கலைவாணர் அரங்கில் ஒரே மேடையில் வைத்து தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் விருதை வழங்கியும் பொன்னாடை போர்த்தும் கௌரவித்தார்.

அந்த வைபவத்தில் ஏற்புரை நிகழ்த்திய சிவத்தம்பி, "கடல் கடந்த தமிழ் மக்களுக்கான பண்பாட்டு மையமாகத் தமிழகம் விளங்குகிறது. தமிழுக்கு எவர் எங்கிருந்து செய்யும் சேவையும் தமிழகத்தினால் மதிக்கப்படும் போதுதான் அது நிறைவு பெறுகிறது. ஏற்றுக் கொள்ளப்படுகிறது" என்றார்.

அந்த வகையில் சிவத்தம்பியின் தமிழ்ச் சேவையைத் தமிழகம் ஏற்றுக் கொண்டிருப்பது இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் நெஞ்சில் நிறைவைத் தரும்.

இலங்கைத் தமிழ் அறிஞர் ஒருவர் தமிழக அரசின் விருதைப் பெற்றது இதுதான் முதல்முறை.

முன்னர் சுவாமி விபுலானந்தர் தமிழகத்தில் முதல் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நியமிக்கப்பட்டிருந்தார். இப்படி அவர் கௌரவிக்கப்பட்டார்.

அதன்பிறகு இலங்கையர்கள் பேராசிரியர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

சிவத்தம்பியும் கூட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு வருகைப் பேராசிரியராக 1988-89 இல் சென்றிருக்கிறார்.

சிவத்தம்பியின் தந்தை ஒரு பண்டிதர். ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தில் சைவப் புலவராகப் பணியாற்றியவர். அதனால் சிவத்தம்பிக்கு கருவிலேயே தமிழோடு தொடர்பு இருந்தது.

அவருடைய தமிழுணர்வைத் தாயாரும் தாயகமான வடமராட்சியின் கரவெட்டி மண்ணும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் தமிழுணர்வை வளர்த்தன.

கொழும்பு சாஹிராக் கல்லூரியும் பல்கலைக்கழகமும் அவர் தமிழ்த்துறையில் உயர்வடையத் துணை செய்தன.

சிவத்தம்பி தமிழ் ஆராய்ச்சித்துறையில் மட்டுமன்றிக் கலைத்துறையிலும் காலூன்றிச் சிறப்பு எய்தியவர். குறிப்பாக வானொலி நாடகத்துறையில் அவர் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர். இலங்கை வானொலி அவரைப் பயன்படுத்தியது. வானொலியால் அவர் பயனடைந்தார்.

சிவத்தம்பி யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணியாற்றுவதற்கு முன்பு ஆசிரியராகவும், நாடாளுமன்ற உரைபெயர்ப்பாளராகவும் கடமையாற்றி இருக்கிறார்.

வித்தியோதயப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் தமிழ்த்துறைகளில் சிவத்தம்பி பணியாற்றி உள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் நாடக டிப்ளோமாத் துறையையும், முதன்முதலாகத் தகவல் தொடர்பு கற்கை நெறியையும் ஆரம்பித்து வைத்த பெருமையில் சிவத்தம்பிக்குப் பெரும் பங்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில் 1983க்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களால் சிவத்தம்பி சமூக சேவைகளில் கூடுதலாக ஈடுபடும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிரஜை குழுக்களில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து மக்கள் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.

இப்போது கலைச்சொல் மீளாய்வுக் குழுவில் தமிழருக்கான ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

அவருக்குப் பின்னால் ஒரு பெரிய மாணவர் குழாமும், கலைஞர்கள் அணியும் உள்ளன. அவரின் தமிழ்ப்பணி தொடர்கிறது.

உடல் தளர்வை ஊன்றுகோல் சரிக்கட்டுகிறது. உள்ளத்துக்கு உறுதி அவருடன் நெருங்கிப் பழகுபவர்கள் மற்றும் அவரை அறிந்தவர்கள் ஆகியோரின் அன்பும், மதிப்பும், மரியாதையும் ஆகும்.

# "குத்து விளக்கு" படம் மீள் மிளிர்வாக்கம்

இலங்கைத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் "குத்துவிளக்கு" படத்திற்கு தனி இடம் உண்டு. வி.எஸ்.துரைராஜாவின் தயாரிப்பில் 1972 ஆம் ஆண்டு வெளியாகிய இத்திரைப்படத்தினை வி.எஸ்.எஸ்.பாலேந்திரன் மீள் மிளிர்வாக்கம் செய்துள்ளார்.

இந்த மீள் மிளிர்வாக்க வெளியீடு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

"குத்துவிளக்கு" பிரமுகர்கள் பத்திரிகையாளர் சந்திப்பு பம்பலப்பிட்டியிலுள்ள "ட்ரூப்பிஸ்" விடுதியில் நிகழ்ந்தது.

தம்பி ஐயா தேவதாஸ் தனது உரையில் "1972 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட குத்துவிளக்குப்படம் மீள்மிளிர்வாக்கம் செய்து வெளியிடப்படும் புதிய முயற்சி வெற்றிபெறவேண்டும்" என்றார்

இயக்குநர் பாலேந்திரன் "தமிழர்களின் வாழ்க்கை முறை, சமுதாய விழுமியங்களை எமது அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதை நோக்காகக் கொண்டே 'குத்துவிளக்கு' மீள் மிளிர்வாக்கம் செய்யப்பட்டது" என்றார்.

சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்.கெனியூட்ஜன் பேசுகையில் "யாழ்ப்பாணத் தமிழில் பேசி நடித்தால் படம் ஓடாது என்றார்கள் அன்று. ஆனால் இன்றோ தமிழ் நாட்டில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை வைத்துப் பெரும் வியாபாரமே நடத்துகிறார்கள். அண்மையில் வெளிவந்த "தெனாலி" திரைப்படத்தில் கமலஹாஸன் கண்ட வெற்றி இது" என்றார்.

"குத்துவிளக்கு" திரைப்படம் அங்கு திரையிட்டுக் காட்டப்பட்டது. படத்தில் காட்சிகளில் பெரும்பாலானவை யாழ்ப்பாணப் பகுதியிலே படமாக்கப்பட்டுள்ளன. இன்று நாம் காணமுடியாத யாழ்ப்பாணப் பொதுநூலகம், யாழ் வீரசிங்க மண்டபம் ஆகியவற்றைக் காணமுடிகிறது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் ஆகியவற்றின் மஹோற்சவ கால நிகழ்வுகள் பக்தி பூர்வமாகப் படமாக்கப் பட்டுள்ளன.

மேலும் எத்தனையோ இலங்கைத் தமிழ்ப் படங்கள் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்திடம் இருக்கின்றன. அவையும் மீள் மிளிர்வாக்கம் பெற்று CD வடிவிலும் VHS வடிவிலும் வெளிவந்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

-கே.மயூரன்




"குத்துவிளக்கு" படத்தில் கதாநாயகி லீலா நாராயணன் கதாநாயகன் ஆனந்தன், அரசரத்தினம் சாந்தி லேகா ஆகியோர் தோன்றும் கட்டங்கள்.

# இனிய குரலால் உலகை ஈர்ப்பவர் இராஜேஸ்வரி

தனது இனிய குரலால் உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களை ஈர்த்து இழுப்பவர் வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகம்.

இலங்கை வானொலியில் 1950ஆம் ஆண்டு முதல் குரல் எழுப்பிவரும் இராஜேஸ்வரி சண்முகம் நாட்டின் ஒரு சிரேஷ்ட ஒலிபரப்பாளர். இந்த வருடம் "இராஜேஸ் அக்கா" தனது வானொலிச் சேவையின் பொன்விழாவைக் கொண்டாடுகிறார்.

இலங்கை வானொலியின் புகழ் இந்தியாவில் பரவியிருந்த அந்தக் காலத்திலேயே இராஜேஸ்வரியின் குரல் ஒலிக்கத் தொடங்கி விட்டது.



இராஜேஸ்வரி

பாடசாலைக் காலத்திலிருந்தே நடிப்புத் திறன் கைவரப்பெற்றவராக இருக்கிறார் இராஜேஸ்வரி. 1952இல் வானொலி நடிகையாக அவரது பிரவேசம் அமைந்தது.

1969இல் வர்த்தக சேவையில் பகுதி நேர அறிவிப்பாளரானார். 1971ஆம் ஆண்டில் தயாரிப்பாளர், 1974இல் நிரந்தர அறிவிப்பாளர், 1982இல் முதல்தர அறிவிப்பாளர், 1995இல் அதிஉயர் அறிவிப்பாளர் என்று தமது திறமையை விரிவுபடுத்திக் கொண்டார்.

"பேர் கேட்ட அனைவரையும் நீராட்ட வருகிறது பொங்கும் பூம்புனல்" என்ற அறிவிப்புடன் அவர் வழங்கிய நிகழ்ச்சி தசாப்தங்களைக் கண்டு வெற்றி நடைபோட்டது.

பாடல்களைப் பாடியவர் யார்? பாடல் இடம் பெற்ற படம் எது? - இவைபோன்ற விவரங்களுடன் அவர் நிறுத்தி விடுவதில்லை.

பாடலை எழுதிய கவிஞர் யார்? இசை அமைத்தவர் யார்? என்றெல்லாம் மின்னல் வேகத்தில் அறிவித்துவிட்டுப் பாடலை ஒலிபரப்பும் அவரது பாணியே அலாதியானது.

"பொதிகைத் தென்றல்" நிகழ்ச்சி இலக்கிய நயம் ததும்ப இராஜேஸ்வரி வழங்கிய சிறப்பு நிகழ்ச்சி. இலங்கையில் மாத்திரமல்ல தமிழ் நாட்டிலும் அந்த நிகழ்ச்சிக்குத் தீவிர ரசிகர்கள் இருந்தனர்.

எட்டயபுரம் தென்பொதிகைத் தமிழ்ச்சங்கம் 1995இல் விழா எடுத்து "வானொலிக் குயில்" பட்டத்தை இராஜேஸ்வரிக்கு வழங்கி அவரைக் கௌரவித்தது.

ஐரோப்பிய நாடுகளுக்கும் இராஜேஸ்வரி அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

வானொலியில் செய்தி வாசிக்கும் பணியிலும் தனக்கென முத்திரை பதித்திருக்கிறார். சிலகாலத்தின் முன் "பொப் இசைப்பாடல்" நிகழ்ச்சிகள் மேடைகள்தோறும் நடைபெற்றபோது இராஜேஸ்வரியின் குரல் வளம் மிளிர்ந்திருந்ததை மறக்கமுடியாது.

சிவாஜி கணேசன், கவிஞர் வைரமுத்து போன்றோர் இராஜேஸ்வரியின் ரசிகர்கள் என்று கூறுவதில் பெருமை அடைகிறார்கள்.

இராஜேஸ் அக்காவின் கணவர் சி.சண்முகம் வானொலியில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்திருந்தவர். அவர் அமரத்துவம் அடைந்துவிட்டாலும் அவர் எழுதிய நாடகங்கள் இன்னும் வானொலியில் "சீ.டி" வடிவில் எழிற்கோலம் காட்டுகின்றன.

மகள் வசந்தி மணம் முடித்து தமிழகத்தில் வாழ்கிறார். மகன் சந்திரமோகன் பிரபல பாடகர். மற்றொரு மகன் சந்திரகாந்தனும் ஒரு வானொலி அறிவிப்பாளர்.

இராஜேஸ்வரியின் குரல் வளம் இப்போது மேலும் மெருகேறியிருக்கிறது. அவர் தமது ரசிகர்களைவிட்டுப் பிரியப்போவதேயில்லை.

இலங்கை வானொலி நிரந்தர சேவையிலிருந்து ஓய்வு பெற்று விட்ட போதும் இன்றும் கூட இலங்கை வானொலியில் இராஜேஸ்வரியின் குயிலோசை ஒலிக்கிறது. கேட்க என்ன சுகம்!

# ராசி பலன்

பொ.சந்திரன்

07–01–2001 இருந்து 13–01–2001 வரை



**மேடம் :— அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

இராசிநாதன் செவ்வாய் ஏழாம் வீட்டில் நட்புப் பெற்று தன்னிச்சையாக நின்று இராசியை நோக்குவதால் நன்மைகள் பல நிகழும். பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. உங்கள் கடமையைச் சகோதரர்கள் செய்து முடிப்பர். தொண்டை, காது முதலிய இடங்களில் நோய் ஏற்படலாம். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. பிரயாணம் அமையும். இனபந்துக்களுடன் கூடி உணவருந்தலாம். மனம் கட்டுப்பாடு இல்லாமல் கற்பனையில் சுகம் காணும். எதிரிகள் விலகியே இருப்பர். குடும்பத்தில் முறுகல்நிலை தென்படும். காதல் வாழ்வு நிலை பெற்று இருக்கும். பிதாவால் பொருள் வரவு உண்டு. தொழில்துறையில் அலைச்சல் இருந்தாலும் மதிப்பு உண்டு.



**இடபம்:— கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிநாதன் சுக்கிரன் தசமகேந்திரத்தில் அதாவது பத்தாம் வீட்டில் நட்புப்பெற்று சுயேச்சையாக இருப்பது விசேஷம். பொருளாதாரத்தில் சிறு தடங்கல் ஏற்பட வாய்ப்புண்டு. கல்வியில் ஆர்வம் குன்றலாம். நண்பர்கள் சகோதரர்கள் உதவுவர். உறவினர் தாமரை இலைத் தண்ணீர் போல் இருப்பர். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மனதில் அதீத கற்பனையில் ஆழ்ந்திருப்பீர்கள். நல்ல கனவு காண்பீர்கள். எதிரிகள் உங்களைக் கண்டு பயந்து விலகுவர். குடும்பத்தில் சண்டை சச்சரவுக்கு இடம் உண்டு. பகைமை உணர்ச்சி தோன்றும். காதல் வாழ்வு அம்பலத்துக்கு வரலாம். தொழில்துறையில் மேலதிக வேலை இருப்பினும் சேவை பெரிதும் வரவேற்கப்படும்.




**மிதுனம்:— மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிநாதன் மறைவுத் தானமான எட்டாம் வீட்டில் நட்புப் பெற்று இருந்தாலும் ராகு கேதுக்களின் தொடர்பும் சனியின் பார்வையும் இராசிக்குக் கிடைப்பது நல்லதல்ல. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். நண்பர்களுக்கு உதவ முடியாத நிலை இருக்கும். சகோதர உதவியுண்டு. உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் உலக வாழ்வை வெறுத்தாலும் அமைதியடையும். எதிரிகள் மறைமுகமாக நாசவேலை செய்வர். அவதானம் வேண்டும். குடும்ப அமைதி குலையலாம். மனதளவில் விலகி இருப்பீர்கள். காதல் வாழ்வில் புயல் வீசலாம். தொழில் செய்யும் இடத்தில் போட்டி பொறாமை நிலவும்.




**கடகம்:— புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசிநாதன் சந்திரன் வாரமத்தியில் இராசிக்கு வருவதும் சுக்கிரபார்வை கிடைப்பதும் நல்ல அம்சங்கள். காலையில் காசு இல்லாவிடினும் மாலையில் வரும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக்கிடையில் சிறு சச்சரவுக்கு இடம் உண்டு. நண்பர்கள் உதவுவர். உறவினரால் சுகம் இல்லை. வீடு, வாகனம் தொல்லை தரும். மனதில் அமைதி இல்லை. தீய எண்ணங்கள் தோன்ற வாய்ப்புண்டு. எதிரியை நேருக்கு நேர் சந்திப்பீர்கள் ஆனால் சச்சரவு வராது. குடும்பத்தில் சிறு சச்சரவு இருந்தாலும் ஒரு பெரியவரின் தலையீட்டால் அமைதி ஏற்படும். காதலர் வாழ்வில் இளம் தென்றல் வீசும். தொழில் அமைதி இல்லாத நிலை.



**சிங்கம்:— மகம், பூரம், உத்தரம் 1.**

இராசிநாதன் பூர்வ புண்ணியஸ் தானமான ஐந்தாம் வீட்டில் ராகு, கேதுக்களின் தொடர்போடு இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சுக்கிரபார்வை இராசி பெறுவது யோகமே. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களின் ஆதரவு இருக்கும். உறவினர் சில சமயம் வேண்டா வெறுப்பாக நடக்கக்கூடும். வீடு, வாகனம் செலவை உண்டு பண்ணும். மனச்சஞ்சலம் இருக்கும். இருந்தாலும் தீர்க்கமான முடிவு எடுப்பீர்கள். தொலைந்த பொருள் கிடைக்கும். எதிரிகளால் நன்மையுண்டு. மாதாவுடன் சிறு சச்சரவு ஏற்படலாம். பிதாவுடனும் உறவு சீராக இருக்காது. குடும்பத்தில் எச்சரிக்கை கலந்த அமைதியும் காதலர் வாழ்வு அன்புமயமாகவும் இருக்கும். தொழில் யோகம் உண்டு.



**கன்னி:— உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**

இராசிக்கும் இராசிநாதனுக்கும் குரு பகவானின் பார்வை கிடைப்பது விசேஷம். பொருளாதாரம் தடைப்படலாம். கல்வியில் ஆர்வம் மத்திமமாக இருக்கும். உற்றார் உறவினரின் பலத்த ஆதரவு உண்டு. வீடு, வாகனங்களால் ஓர் அளவு இலாபம் அடையலாம். மனம் ஒரு நிலையில் நில்லாது வாழ்க்கையில் விரக்தி ஏற்பட இடம் உண்டு. எதிரிகள் ஊரைவிட்டே ஓடுவர். குடும்ப இரகசியம் பாதுகாக்கப்படும். காதலர் தீர்க்க தரிசனத்தோடு நடப்பார்கள். மாதா, பிதாவின் உடல் நிலையில் சிலமாற்றம் ஏற்படலாம். பிரயாண வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். பெரியோரின் ஆசிர்வாதம் கிடைக்கும். தொழில்துறையில் ஏற்படும் போட்டியை சாதகமாக்கிடுவீர்.



**துலாம்:— சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசியில் உள்ள செவ்வாயை சனி பார்ப்பதால் பதற்றம் நிறைந்த வாரமாகும். பணத்தட்டுப்பாடு இருந்தாலும் சமாளிப்பீர்கள். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இல்லை. சுற்றத்தாரோடு சில சமயம் முட்டி மோதவும் கூடும். தாயின் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகலாம். பிரயாணத் தடையுண்டு. மனம் உலகியல் இன்பத்தை நாடும். இனக்கவர்ச்சியால் மனம் மாசடையலாம். எதிரிகள் பலமிழந்து செயலற்று நிற்பர். குடும்பத்தாரோடு வாய்த்தர்க்கம் முற்றி சண்டைவர வாய்ப்புண்டு. காதலர் வாழ்வில் புயல் வீசலாம். தொழில்துறையில் சாதனை படைக்க வாய்ப்புண்டு.



**விருச்சிகம்:— விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிக்கு குருவின் பார்வை, இராசிநாதனுக்கு சனியின் பார்வை கிடைப்பதால் நன்மை தீமை இரண்டையும் எதிர் கொள்ள வேண்டும். கல்வி முன்னேற்றம் உண்டு. பணப்பற்றாக்குறை இருக்கும். உற்றார், உறவினரோடு மனஸ்தாபத்திற்கு இடம் உண்டு. வீடு, வாகனங்களால் தொல்லையுண்டு. மனத்தெளிவு ஏற்படும். பக்குவத்தோடு நடந்து கொள்வீர்கள். தெய்வீக பக்தி தோன்றும். குல தெய்வத்தின் ஆசிர்வாதம் பெறுவீர்கள். எதிரிகள் நோய்வாய்ப்படலாம். குடும்பத்தில் பெருமூச்சுடன் கூடிய அமைதி நிலவும். காதலர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. தொழில்துறையில் சங்கடம் இருக்கும்.



**தனு:— மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராசிநாதன் குரு சத்துருஸ்தானத்தில் செவ்வாயின் பார்வை பெற்று இருப்பதால் அவ்வளவு சிறப்பான பலனை எதிர்பார்க்க வாய்ப்பு இல்லை. பொருளாதாரம் ஓர் அளவு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்கள் உதவக்கூடிய மனம் இருந்தாலும் சூழ்நிலையால் உதவ முடியாமல் போகலாம். வீடு, வாகனங்களால் செலவுதான். உறவினர் வேண்டா வெறுப்பாக நடப்பர். மனதில் செயல்பாடு அறிவு பூர்வமாக இல்லை. உணர்ச்சி பூர்வமானதாக இருக்கும். எதிரிகள் புதுப்பலம் பெற்று தொல்லை தரவாய்ப்புள்ளது. குடும்பத்தில் அமைதி இல்லை. காதலர் வாழ்வில் குறுக்கீடு இருக்கும். தொழில் அமைதியுண்டு.



**மகரம்:— உத்தராடம் 2,3,4, திருவோணம். அவிட்டம் 1,2.**

இராசிநாதன் சனி சுகஸ்தானமான நாலாம் வீட்டில் பலம் குன்றி இருக்க செவ்வாயின் பார்வை சற்று வேகத்தைக் கொடுக்கலாம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு, வாகனங்களால் பிரச்சினை வரலாம். உறவினரின் செயல்பாடு மனத்திருப்தி தராது. மனம் அமைதியாய் இருக்கும். தெய்வீக எண்ணங்கள் தோன்றும். பிறருக்கு உதவி செய்யும் மனநிலையில் இருப்பீர்கள். பிரயாணம் அமையும். எதிரிகள் மறைமுகமாக நாசவேலை செய்வர். குடும்பத்தில் பூரண அமைதியும் விசுவாசமும் இருக்கும். காதல் வாழ்வு அன்பு மயம். தொழில் துறையில் பதற்றம் இருக்கும்.



**கும்பம்:— அவிட்டம் 3,4, சதயம். பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் சனி பலம் குறைந்து வீரியஸ்தானத்தில் இருந்தாலும் இராசியில் சுக்கிரன் நட்புப்பெற்று இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உற்றார் உறவினர் நண்பர்களின் ஆதரவு இருக்கும். வீடு வாகனங்களால் இலாபம் இருக்கும். உடல் நிலையில் சிறு பாதிப்பு ஏற்படலாம். மனதில் பதற்றம் இருக்கும். இனம் புரியாத பயம் இருக்கும். எதிரிகளின் பலம்பெற இடம் உண்டு. அவதானமாக இருக்கவும். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். காதலர்கள் விசுவாசமாக இருப்பர். தொழில் துறையில் யோகம் உண்டு. பொறாமையும் இருக்கும்.



**மீனம்:— பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசிநாதன் குரு வீரியஸ்தானமான மூன்றாம் வீட்டில் செவ்வாயின் பார்வை பெற்று இருப்பது நல்லது. பணத்தட்டுப்பாடு இருக்கும். சில சமயம் கடன்பட வேண்டியும் வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். சுற்றத்தார் ஒன்று கூடி சேர்ந்து இருக்க பலன் உண்டு. பிதாவின் உடல்நிலை சிறிது பாதிக்கலாம். அதிஷ்டம் கை நழுவிப் போகலாம். மனம் பூரண அமைதியடையும். ஆரோக்கியமான சிந்தனையில் இருப்பீர்கள். எதிரிகள் செல்லாக் காசுபோல செயல் அற்றுப் போவார்கள். குடும்ப அமைதியுண்டு. காதலர் அன்பு மயமாய் இருப்பர். தொழில் யோகம் உண்டு.

## அரசுக்கும் — வேம்புக்கும் ஜாம் ஜாம் கல்யாணம்

வேண்டுதலின் படி வேண்டியதெல்லாம் கிடைக்க, தமிழ்நாடு திருப்பூர் வீர விநாயகர் கோயிலில், மேளம் கொட்டி, தாலி கட்டி, அரச மரத்திற்கும், வேப்ப மரத்திற்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

திருப்பூர் பாப்பநாயக்கன்பாளையம் பாவனி நகரில் வீரவிநாயகர் கோயில் உள்ளது.

இக்கோயில் வளாகத்தில் ஒரு அரச மரமும் வேம்பு மரமும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து வளர்ந்து வருகின்றன.

இவ்வீர விநாயகர் ஆலயம் செப்பனிடப்பட்டு, சிறப்பு பூஜை நடந்தது. அதே சமயம். இக்கோயில் வளாகத்தில் உள்ள அரச மரத்திற்கும், வேம்பு மரத்திற்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

அதிகாலை 5 மணிக்கு கணபதி ஹோமம் நடந்தது. பின்னர் விநாயகருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடந்தன. காலை 6 மணி முதல் 6.30 வரை முகூர்த்த நேரம் குறிக்கப் பட்டிருந்தது. இதன்படி அரச மரமும், வேப்பமரமும் நீரால் அபிஷேகம் செய்யப்பட்டு, மஞ்சள் மற்றும் காவி பூசி வழிபாடு செய்யப்பட்டது.

பின்னர், அரச மரத்திற்குப் புத்தம்புது வேட்டி கட்டிவிக்கப்பட்டது.

அதே போல், வேம்பு மரத்திற்கு சந்தனம், குங்குமம் வைத்து மரத்தின் மேல்பகுதி தண்டில் பூச்சூடி, பட்டாடை உடுத்திவிடப்பட்டது.

இரு மரங்களுக்கும் தனித்தனியாக அர்ச்சகர்கள் மந்திரங்கள் சொல்லி பூஜைகள் நடத்தினர்.

தாலிக் கொடியாகத் தயார் செய்யப்பட்டிருந்த மஞ்சள் தாலி பக்தர்கள் வணங்குவதற்கு ஏற்ப தாம்பூலத் தட்டில் கொண்டுவரப்பட்டது.

பின்னர், முகூர்த்த நேரம் நெருங்கும் நேரத்தில் அரச மரத்திற்கு பூஜை செய்த அர்ச்சகர் தமது கையினால் தாலியை எடுத்து, வேப்ப மரத்தின் தண்டில் தாலியைக் கட்டினார்.



அப்போது, கெட்டிமேளம் முழங்கியது. பெண் பக்தர்கள் குரவையிட்டனர்.

தாலி கட்டி முடிந்ததும், சிறப்பு தீபாராதனை காட்டிய போது பக்தர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் ஓம் சிவ சக்தியே என்று கைகூப்பி கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.

பின்னர், பக்தர்கள் அரசு வேம்பு தம்பதியரை வலம் வந்து வணங்கினர்.

திருமண நிகழ்ச்சி போலவே, அரசு, வேம்பு திருமணம் முடிந்ததும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதான விருந்து வழங்கப்பட்டது.

அரச மரத்திற்கும் வேப்ப மரத்திற்கும் திருமணம் செய்து வைப்பதால், உலக நலன் காக்கப்படுகிறது. தொழில் வளம் பெருகும். உலகில் மழை வளம் பெருகும்.

இதனால், பயிர் விளைச்சல் அதிகரிக்கும். அனைத்து ஜீவ ராசிகளுக்கும், பஞ்சமின்றி உணவு கிடைக்க வேண்டும் என்பதே இத்திருமணத்தின் நோக்கம்.

# மணல் மேடுகளாகும் வீடுகள்: சரிந்து விழும் நிலையில் சில!

## இரத்தினக்கல் அகழ்வால் ஏழைகளுக்கு இந்த அவலம்

வளர்ந்துவரும் நாடுகளில் வளம் மிக்க செழிப்பான நாடு என்று இலங்கை உலகப் புகழ் பெற்றிருக்கிறது. அதற்கு இங்கு விளையும் இரத்தினக்கற்களும் ஒரு காரணமாகும்.

இலங்கையில் விளையும் இரத்தினக்கற்களுக்கு உலகச் சந்தையில் எப்போதும் தனி மவுசு.



மணல்மேடாகி வரும் வீடு

இரத்தினக்கல் என்றதுமே இரத்தினபுரி நினைவில் வரும். சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள இரத்தினபுரியில் தான் இரத்தினக்கல் நிலத்திற்கடியிலிருந்த பெருமளவு தோண்டிஎடுக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் அகன்ற பெரிய குழிகளில் இரத்தினக்கல் அகழ்வு வேலையில் பலர் தினமும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

ஆனால், இவ் அகழ்வுகளினால் பிரதேச மக்கள் பெரும் அவலத்திற்கு உள்ளாகிவருகிறார்கள்.

இரத்தினபுரி மாவட்டத்தின் காவத்தை, நீலகாமம் தோட்டப்பகுதியில் மக்கள் வசித்து வரும் குடியிருப்புகளின் கீழ் இரத்தினக்கல் அகழ்வோர் சுரங்கம் அமைத்துத் தோண்டுவதால், குடியிருப்புகள் நிலத்துக்கடியில் அமிழ்ந்து போகும் ஆபத்து ஏற்படுகிறது.

சில வீடுகள் இங்கே இடிந்து விழுந்து மண் மேடுகளாக மாறி விட்டன. மக்கள் தாங்கள் காலா காலமாக வாழ்ந்து வந்த குடி மனைகளை விட்டு வெளியேறிச் சிறுசிறு கூடாரங்களை அமைத்து மிகவும் சிரமத்திற்கு மத்தியில் அவற்றில் காலந்தள்ளி வருகிறார்கள்.

இவர்களுக்கு ஏன் இந்த நிலை?. இரத்தினக்கல் தோண்டுபவர்களினால் இம் மக்கள் பலவந்தமாக வீடுகளை விட்டு வெளியேற்றப்படுகிறார்களா?. இவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த முடியாதா? இப்படியான கேள்விகள் எழுகின்றன.

பாதிக்கப்பட்ட ஒரு நபரிடம் இது பற்றிக் கேட்டபோது:-

"நாங்க என்னங்க செய்றது? சுரங்கம் போட்டு எங்க வீட்டுக்கடியில் தோண்டிக்கிட்டு வரும்போது எப்படிங்க அந்த வீட்டுல இருக்க முடியும்? பயந்துகிட்டு வீட்டை விட்டு வெளியேறி வந்திட்டோம்.

நாங்களும் யார் யாருக்கிட்டையெல்லாமோ சொல்லிப் பார்த்துட்டோம் ஒன்னும் பண்ண முடியல, இன்னமும் தோண்டிக்கிட்டே தான் இருக்காங்க" என்று பெருமூச்சு விட்டபடி கூறினார்.



சரிந்து விழும் நிலையில் வீடு

இது வரையிலும் இந்த அகழ்வுகளால் ஏற்படுகின்ற அழிவைத் தடுத்து நிறுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஆச்சரியம் மட்டுமல்ல பெரிய சோகமும் ஆகும்.

– ம. ஸ்ரீகாந்தன்

# நர்த்தகி ஜனீத்திரா ஜமாய்த்து விட்டார்



ஜனீத்திராவின் ஓர் அபிநயத் தோற்றம்

"கைவழி நயனம் செல்ல
கண்விழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார்"

என்பது காவியப் புலவன் கம்பன் நாட்டியத்தின் நுட்பம் குறித்து வெளிப்படுத்திய கவிதை வரிகளாகும். செல்வி ஜனீத்திரா சோமசூரியசிங்கத்தின் நடன நிகழ்ச்சியினைப் பார்த்து ரசித்தபோது இந்தக் கவிதை வரி நெஞ்சை ஆட்கொண்டது.

சமீபத்தில் மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் சுப்பம்மாள் மண்டபத்தில் செல்வி ஜனீத்திரா சோமசூரிய சிங்கத்தின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. நெஞ்சை ஈர்க்கும் வனப் புடன் திகழும் சுப்பம்மாள் அரங்கில் 'அடடா அற்புதம்' என வாய்விட்டுச் சொல்லும் அளவுக்கு நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

கோலாட்டம், கும்மி, வள்ளி கல்யாணம், சிற்பி நடனம் அனைத்துமே அற்புதமாக அமைந்திருந்தன.

தாள லயம் தவறாத அசைவுகளுடன், பாவரசம் ததும்பும் நயனங்களுடன் ஜனீத்திரா அனுபவ முதிர்ச்சி மிக்கதொரு நர்த்தகியாக மேடையில் சுழன்றார்.

திரை விலகியதுமே தீபங்களுடன் அசைந்து அசைந்து வந்த சின்னஞ்,சிறு சிறுமிகள் அனைவருமே பிசகின்றி நகர்ந்தார்கள்.

நாதஸ்வர வாத்தியத்திற்கு ஏற்ப ஜதி தவறாமல் மல்லாரி நிகழ்ந்தது. ஒரு கட்டத்தில் 2ஆம், 3ஆம் கட்டத்தைத் தாண்டி 4ஆம் கட்டத்தை நாதஸ்வரம் எட்டியபோது, அதனைச் சட்டெனப் புரிந்து கொண்ட சிறுமிகள் அதற்கு ஏற்றாப்போலத் தம்மை மாற்றிக்கொண்டு ஆடினர். சபையில் மகிழ்ச்சிக் கர ஒலி எழுந்தது.

நெஞ்சைக் கவர்ந்த இன்னொரு நிகழ்ச்சியாக சிற்பி நடனம் அமைந்திருந்தது.

சிலைகளை வடிக்கும் சிற்பி இறுதியில் அவற்றுக்கு உயிர் கொடுக்கும்படி இறைவனை வேண்டுகிறான். வேண்டுகோள் நிறை வேற்றப்படுகிறது. பின்னர் தான் அனர்த்தம் ஏற்படுகிறது. உயிர் பெற்ற சிலைகள் சண்டையில் ஈடுபடுகின்றன. மீண்டும் சிற்பியின் வேண்டு கோளுக்கு இணங்க அவை அனைத்துமே சிலைகளாகிப் போகின்றன. இந்தக் காட்சி அற்புதமாக அமைந்திருந்தது.

கிட்டத்தட்ட 3 மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்த நடன நிகழ்ச்சிகள் அனைத்தையும் தயாரித்து அளித்து நர்த்தனம் புரிந்து காட்டியவர் செல்வி ஜனீத்திரா தான்.

இளம் நாட்டிய நர்த்தகியான செல்வி ஜனீத்திரா சோமசூரியசிங்கம் நடனப் பயிற்சிக் குழுவொன்றினை நடத்தி வருகின்ற நடன ஆசிரியையாவர்.

இவருடைய நடன அரங்கேற்றம் நல்லூர் இளம் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் 1994ஆம் ஆண்டில் இடம் பெற்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதல் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் வரை பலரிடம் பாராட்டும் ஆசியும் பெற்றவர் செல்வி ஜனீத்திரா.

நாட்டியக்கலைமணி ஸ்ரீமதி நளினி சிவகுமாரிடம் சிறு வயது முதல் நடனம் பயின்று பின்பு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட நடன விரிவுரையாளர் ஸ்ரீமதி கிறிஸ்ஸாந்தி இரவீந்திராவிடம் பரத நாட்டியம் பயின்றவர் ஜனீத்திரா. அடையார் பரத கலாஞ்சலி வி.பி.தனஞ்சயன், ஸ்ரீமதி சாந்தா தனஞ்சயன் ஆகியோரிடமும் பயிற்சியை முடித்து டிப்ளோமா கற்கை நெறியை முடித்தவர்.

1999ஆம் ஆண்டில் இளைஞர் விவகார அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பரத நாட்டியப் போட்டியில் முதலாம் இடம் இவருக்குக் கிடைத்தது. கர்நாடக சங்கீதம், பண்ணிசை, வீணை ஆகியவற்றுக்கான போட்டிகளிலும் கலந்து பல பரிசுகளைப் பெற்றவர்.

சுப்பம்மாள் அரங்கில் நடைபெற்ற நடன நிகழ்ச்சிக்கு மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் அறங்காவலர் பொன் வல்லிபுரம் தலைமை வகித்தார். மொரீஷியஸிற்கான இலங்கையின் கௌரவதூதுவர் தெ.ஈஸ்வரனின் பாரியார் திருமதி திலகவதி ஈஸ்வரன் செல்வி ஜனீத்திராவிற்கு பொன்னாடை போர்த்து அவரைக் கௌரவித்தார்.

—கே. விஜயன்

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்
NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery



குழு நடனக் காட்சி

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்
NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery